
KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVE… • ENTERTAINMENT
VOLUME : 1 ISSUE : 10 Registered in the … / News / 2010



பத்மம் என்றால் பரதம்

தென் இலங்கைக் கரையினில் தொன்மைமிகு சிவாலயம்

பழைய கியூபெக் நகரம்

www.kalaikesari.com / OCTOBER 2010
ISSN 2012-6824

| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்










## அட்டைப் படம்

உமாயூனின் சமாதி


10 இசை மேதை டி.ஆர்.மகாலிங்கம்

14 நவரசநாயகியின் நவராத்திரி விழா

24 பத்மம் என்றால் பரதம்

30 வேற்றுமையில் ஒற்றுமை காணும் வேளாங்கண்ணித் திருத்தலம்

48 பெருமை அளிக்கும் முத்து

60 இராமேஸ்வரத்தில் இராமர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்,
யாழ்ப்பாணம்.



'இனமத பேதமற்ற எழுத்தாளர் ஒன்றுகூடல் வெல்க!'

அன்பான வாசகர்களுக்கு,

வணக்கங்கள் பல. கலைக்கேசரியின் பத்தாவது இதழ் மூலமாக, எம் அன்பு வாசகர்களை நாம் சந்திக்கிறோம். அதில் எமக்கு எப்போதும் மகிழ்ச்சி.

சக்தியின்றேல் இப்பிரபஞ்சம் இல்லை. சக்தியின்றேல் இயக்கமுமில்லை. அத்தைகைய பேரருட் சக்திக்கு, ஒன்பது தினங்கள் விழாவெடுத்துப் போற்றும் மரபு நமக்குரியது. நவராத்திரியோடு வரும் ஐப்பசி மாதமும் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் சிறப்புக்குரியதே. நவராத்திரி தினங்களில் மக்கள், சக்தி தேவியை முதல் மூன்று தினங்களும் துர்க்காதேவியாக வழிபட்டு வீரத்தையும், அடுத்த மூன்று தினங்களும் லட்சுமி அம்மையாகத் துதித்து செல்வத்தையும், இறுதி மூன்று தினங்களும் சரஸ்வதி தேவியாகப் போற்றி கல்வியையும் பெற்று மேன்மை அடைவர். இத்தைகைய சிறப்பு வாய்ந்த நவராத்திரி குறித்து கலைக்கேசரி ஆக்கம் ஒன்றைத் தருவதோடு சரஸ்வதி தேவிக்கென உலகிலுள்ள ஒரே ஒரு ஆலயம் எனப் போற்றப்படும் திருவாரூர் மாவட்டம் கூத்தனூரில் அமைந்துள்ள கோவில் குறித்த தகவலையும் தந்து மகிழ்கிறது.

அடுத்து அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்று கூடல் பற்றி சில வார்த்தைகள் இங்கு கூறுதல் பொருத்தமாகும். கடந்த 30 வருடகால போர்ச் சூழலுக்குப் பின் இயல்பு வாழ்க்கை தோன்றியதை அடுத்து இத்தகையதொரு ஒன்றுகூடல் நிகழ்வு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். நாட்டில் சகல இன மக்களிடையேயும் புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கை ஆகியவை தோன்ற படைப்பாளிகளின் பங்களிப்பு இத்தகைய காலகட்டத்தில் மிகவும் தேவையானதொன்றாக இருக்கிறது என்பது உணரப்பட்டுள்ளது. இந்த எதிர்பார்ப்பு நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என நம்புவோம்.

கலைக்கேசரிக்கு தமது ஆதரவைத் தரும் எமது வாசக நெஞ்சங்களுக்கு எமது நன்றிகள்

அன்புடன்

**PUBLISHER**
**Express Newspapers (Cey) (Pvt) Ltd.**
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 5234338
www.kalaikesari.com
e-mail:editor@kalaikesari.com
subscription@kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai

**SUB EDITOR**
Bastiampillai Johnsan

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**CONTRIBUTORS**
Prof. S. Sivalingaraja
Kalaimamani Pon. Theivendran
K. Thangeswari
Pathma Somakanthan
S. Deivanayagam
T. Manoharan
A. S. M. Nawaz

**PHOTOS**
Pathmini Ravichandran (Thanjavur)
S. M. Surendiran

**LAYOUT**
S. A. Eswaran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
M. Senthilnathan

**CIRCULATION**
S. Alexandar

**PRODUCTION**
L. A. D. Joseph

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

## பொருள்சாராப் பண்பாடுகள்

பொருள் சார் பண்பாடும், பொருள்சாராப் பண்பாடும் ஏதோ ஒரு வகையில் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதை முன்னரே குறிப்பிட்டோம். பண்பாடு ஆய்வாளர்கள் ஆய்வு வசதி கருதி இவ்வாறான ஒரு பாகுபாட்டை மேற்கொண்டுள்ளனர். பண்பாடு என்பது பன்முகத்தன்மை கொண்டது என்ற வகையிலே இவ்வாறு பகுக்கப்படுகிறது. பொருள் சாராப் பண்பாடு பற்றிப் பக்தவற்சலபாரதி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

பொருள் சாராப் பண்பாட்டில் பொருள்வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம் பெறும். எடுத்தக்காட்டாகக் கருத்துக்கள் (Ideas) பழக்க வழக்கங்கள், நெறிமுறைகள் அறிவுத்திறன், அழகியற்சிந்தனைகள், கற்பனை நடிப்பு, இலக்கியங்கள், இசை, நடனம், உணவு உண்ணும்முறை, மந்திரங்கள்,வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்ற பொருள் வடிவம் பெறாத அனைத்தும் இதில் இடம்பெறும்.

பொருள்சாராப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் இவ்வுரையிலே விளங்குவதென்பது சாத்தியமற்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழக்கில் இருந்த - இருக்கும் பண்பாட்டு அம்சங்களில் நாம் மறந்துபோன - மறைந்துபோன சிலவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன். இத்தைகைய பண்பாட்டு அம்சங்களும் எம்மிடையே இருந்தன என்பதனை இன்றைய தலைமுறையினர் அறியவேண்டியது மிக அவசியமாகும்.

யாழ்ப்பாணத்துப் பொருள் சாராப் பண்பாடுகள் என்ற வகையில் மொழிசார் பண்பாட்டுக் கூறுகள், சடங்குகள், நம்பிக்கைகள், கலைமரபுகள், கல்வி மரபுகள், விளையாட்டுகள் முதலியவற்றைச் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டலாம். அவை தனித்தனியே விரிவாக ஆராயப்பட வேண்டியவை. விரிவஞ்சி விடுக்கின்றோம்.

### மொழிசார் பண்பாட்டுக் கூறுகள் :

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கெனத் தனித்துவமான, சிறப்பானதோர் மொழிப்பண்பாடு உண்டு எனக் கூறப்படுகிறது. தமிழ்மொழிப் பண்பாட்டில் 'யாழ்ப்பாணத்தமிழ்' என அடையாளம் சுட்டும் மரபும் உண்டு. இலங்கையின் ஏனைய பகுதி ஆய்வாளர்களும் தமிழகத்து ஆய்வாளர்களும் 'யாழ்ப்பாணத்துத்தமிழ்' என ஒரு தனிவகை இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத் தமிழ் 'நல்லதமிழ்' என்று கூறும் வழக்காறும் உண்டு.

இராஜாஜியின் சிறுகதையில் வரும் சம்பவம் ஒன்று இதற்கு நல்லசான்றாகும்.

யாழ்ப்பாணத்து மொழிவழக்கில் எழுத்துமொழி பெரும்பாலும் ஒரே தன்மைத்தாகவே காணப்படுகிறது. ஆனால் பேசும்மொழியில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண பிரதேசத்தினுள்ளும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று ஆகிய பிதேசங்களிலே வெவ்வேறு வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுமொழி வழங்கி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இவை பெருமளவுக்கு குறைந்து விட்டன. கல்வி மற்றும் போக்குவரத்து சமூகமாற்றம், நவீனமயமாக்கல், பணிகள் முதலியவற்றால் இன்று யாழ்ப்பாணப் பிரதேசப் பேச்சுவழக்கில் பொதுத்தன்மை காணப்படுகின்றது. எனினும் சிற்சில பகுதிகள் கிராமங்களில் இன்றும் தனித்தன்மையுடைய மொழிவழக்குப் பண்பாடு உண்டு என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஈழத்துப் புனைகதை எழுத்தாளர்களிற் பலர் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கைப் பதிவு செய்துள்ளனர். குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று நான்கு தசாப்தங்களுள் வெளிவந்த நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகளிலே யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்குச் சொற்கள் பரவலாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குச் சொற்களைப் பண்பாட்டு அடையாளமாக இனங்கண்டு பிரக்ஞை பூர்வமாகத் தமது படைப்புகளிலே பேராசிரியர் கணபதிப்பிள்ளை பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே டானியல், தொணியான், செங்கையாழியான் முதலானோருக்கும் முக்கியத்துவம் உண்டு.

யாழ்ப்பாணத்து மொழி வழக்கில் இடம்பெறும் பேச்சுவழக்குச் சொற்கள், பலமொழிகள், மரபுத் தொடர்கள், விடுகதைகள் முதலியவை மிகவும் முக்கியமானவை. யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வாழ்வியற்பண்பு காரணமாக உருவான, அல்லது உருவாக்கப்பட்ட சொற்களை முழுமையாகத் தொகுக்கும் பணி இன்னும் குறிப்பிடத்தக்க அளவுக்கு நடைபெறவில்லை. கலைநிதி சுபதினிரமேஷ் தொகுத்துப் பதிப்பித்த பேச்சு வழக்குச் சொற்கள் என்னும் நூலுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. முதன்முயற்சி என்ற வகையிலே இதனைப் பாராட்டலாம். எனினும் முழுமையானது அல்ல என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு மொழிவழக்குச் சொற்களையும் அதனை சுட்டும் பொருளையும் பட்டியல் இடுவது நமது நோக்கமன்று. அதனை தனியான ஒரு நூலுக்கு உரியவை. எனினும் வகைமாதிரிக்குச் சில சொற்களைச் சுட்டிக் காட்டலாம் என எண்ணுகிறேன். அவிச்சோர்(சோற்றுக்காரன்) அசுமாத்து (சந்தடி) அலக்கமலக்க (அந்தரப்பட்டு) அக்கப்பாடு (கஷ்டம்) இறப்போர் (கஷ்டம்) எடுபாடு - எடுவை (படாடோப வெளிப்பாடு) ஊர்த்தொழவாரம் (ஊர்வேலை, பயனற்றது) தறுதலை (ஒரேதன்மைத்தான) முட்டுப்பட்டு (கஷ்டப்பட்டு) கந் தறுந்த (ஒன்றுமில்லாத) எம்டன் - எமில் (ஏமாற்றுக்காரர்) கெ டிமண்ட (அதிகமாகப் பயப்பட) இத்தகைய சொற்களின் பயன்பாட்டை யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் உள்ள முதியவர் களிடம் இன்றும் காணலாம்.

இவ்வாறே பழமொழிகள், மரபுத் தொடர்கள், விடுகதைகள் போன்றனவும் யாழ்ப்பாணப் பண்பாட்டிலே காணப்படுகின்றன.

உதாரணமாக பனைமரத்திலே படவாள் பார்ப்பது கள்ளுக் குப் புரியன்கதை, கள்ளைக் கொடுத்து உள்ளத்தை கேள் இவ் வாறு யாழ்பாணத்திற்கே உரிய பலவற்றைச் சுற்றிக் காட்ட லாம். விரிவஞ்சி விடுக்கிறேன்.

ஒரு பிரதேசத்துமொழி வழக்குச் சமூகமாற்றம் காரணமாக அருகிப்போவதும் புதுவதான சொற்கள் வந்து சேர்ந்து வழங்கு வதும் இயல்பானதே.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே' (நன்னூல்)

### சடங்குகள், நம்பிக்கைகள்

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வியலில் இடம்பெறும் சடங்குகள், நம்பிக்கைகளைப் பட்டியல் இடுவது இவ்வுரை யிலே சாத்தியமற்றது. சடங்குகளும் நம்பிக்கைகளும் ஒன்று டன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. நம்பிக்கைகளின் வழி வரும் சடங்குகளும் சடங்குகளின் வழி வரும் நம்பிக்கை ளும் எல்லாச் சமூகத்திற்கும் பெரும்பாலும் பொதுவானவையெ லாம். சடங்குகளுக்குள் சமயமும் சமயத்துக்குள் சடங்குகளும் இரண்டறக் கலந்துள்ளமையையும் அவதானிக்கமுடியும்.

யாழ்ப்பாணத்து பிரதேசத்திலே வழங்கும் சடங்குகளிற் பெரும் பாலானவை இடத்திற்கு இடம் பல வேறுபாடுகளைக் கொண்டிருப்பதைக் காணமுடியும். யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், சாதிகளுக்குமிடையே சடங்குகள் நிகழ்த்துமுறையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுவாகச் சடங்குகளை வாழ்க்கை வட்டச் சடங்குகள் (பிறப்பு முதல் இறப்புவரை) பொருளியல் சார் சடங்குகள் (விவசாயம், கைத்தொழில், கடற்தொழில் முதலானவை) வழிபாடு சார் சடங்குகள் எனப்பகுத்துப்பார்க்கலாம். வழிபாடு சார் சடங்குகளிலே ஆகமவழிபாடு, கிராமிய வழிபாடு, என இரு வகை இருப்பதையும் குறிப்பிட வேண்டும்.

வளரும்...










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம்

# இசைமேதை டி. ஆர். மகாலிங்கம்

"கா யாத கானகத்தே" என்ற பாடலை வள்ளி திருமண நாடகத்தில் மிகுந்த உச்சஸ்தாயியில் பல அசைவுகளுடன் கூடிய மின்வெட்டு பிருகாக்களுடன் இனிமை சொட்டப்பாடி பாடலைக் கேட்போர் இசை இனிமையில் தம்மை மறந்து கிறங்க வைத்தவரே டி.ஆர்.மகாலிங்கம். இவரது கணீரென்ற வெண்கலக் குரலும் கமகம் நிறைந்த அசைவுகளும் கடலலை போன்று தோன்றி மறையும் பிருகாக்களும் கீதத்தின் இனிமையை உணராத எந்த மரத்த உணர்வையும் இனிமையின்பால் சுண்டி இழுக்கும். அத்தகைய காந்தர்வ சக்தியும் கனிவு ததும்பும் குரல் டி.ஆர்.மகாலிங்கத்தின் தனித் தன்மையான சொத்து.

மறைந்த சங்கீத மேதை கிட்டப்பா பாகவதரை அடியொட்டிப் பாடினாலும் தனக்கென்ற சில தனித்துவங்களுடன் தனது மேதைமையை நிலைநாட்டி கர்நாடக சங்கீத உலகிலும் நாடக மேடைகளிலும் தனி இடம் பெற்றுக் கொண்ட பெருமை இந்த இசை வித்துவானின் சிறப்பாகும். இவரது "எல்லோரையும் போலவே என்னை" 'வண்ணத் தாமரையைக் கண்டு' 'ஆயலோட்டும் பெண்ணே" 'சிங்காரரூப', தாகம் தீர்ந்ததனால் அன்னமே' போன்ற இன்னும் பல பாடல்கள் மனதைக் கொள்ளை கொள்ளும் தரத்தின. இத்தனை இன்னிசைக்கும் உரியவரான டி.ஆர்.மகாலிங்கம் வளமும் பசுமையுமிக்க சிறிய ஊரான தென்கரை என்ற ஊரில் வாழ்ந்த செல்வமும் செழிப்பும் மிக்க ராமகிருஷ்ண கனபாடிகளுக்கும் அவரது மனைவியர் மூவரில் மூன்றாவதானவளுக்கும் குழந்தையாக 1924 ஆம் ஆண்டு பிறந்தார்.

தமது குல முறைப்படி குழந்தையை வேதம் பயிலப் பெற்றோர் அனுப்பி வைத்தனர். பிள்ளைக்கோ வேதத்தில் சிறிதும் நாட்டமில்லை. அன்றைய திண்ணைப் பள்ளிக் கூடத்தில் நாலாம் வகுப்பு வரையே படித்த சிறுவனுக்கு இனிய குரலில் எடுப்பான பாடல்களைப் பாடும் இயல்பு தானாகவே கைவந்த கலையாகியது. எனவே அயலில் வாழ்ந்த சேஷ ஐயங்காரிடம் பாட்டோடு மிருதங்கமும் கற்றுக் கொண்டான். ஆசானோடு இணைந்து பாடவும் பஜனை பண்ணவும் ஈடுபட்டிருந்த மகாலிங்கத்தின் திறமையைப் பார்த்து ரசிகப் பெரும் கூட்டம் கூடியது; புகழ் ஓங்கி வளர்ந்தது.

பாடுவதோடு மட்டுமன்றி நடிப்புக் கலையின் வித்தும் அவன் உள்ளத்தில் புதைபட்டுக் கிடந்தமை சந்தர்ப்பம் ஏற்படவும் துளிர்விட்டு வெளிவரத் தொடங்கியது. 'பாய்ஸ் கம்பெனி'யின் நாடகக் குழுவினரும் இச்சிறுவனைப் பயன்படுத்த முண்டியடித்தனர். பன்னிரெண்டாம் வயதில் பாடி நடித்து மக்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றதோடு தீரர் சத்திய மூர்த்தியும் கூடச் சிறுவனின் திறமையைப் பாராட்டினார்; தங்க மோதிரமொன்றையும் பரிசளித்தார். இளைஞனின் புகழ் எங்கும் பரவியது.

நடிப்பு, இனிய பாடல் ஆகியன சினிமாவுக்குள் புகவும் சிறுவனுக்கு வழிகோலின. நந்தகுமார் படத்தில் கிருஷ்ணன் வேடத்தில் ஒளி வீசிய மகாலிங்கம் பக்த பிரகலாதா, பரசுராமர், பூலோகரம்பை, வாமன அவதாரம் எனப் பல படங்களில் தொடர்ந்து நடித்து சினிமா வானில் ஒளிமிகுந்த நட்சத்திரமாகப் பிரகாசித்தார். மேடையில் சில பாத்திரங்களில் கோடை இடியாகவும் சில வேளைகளில் இனிய தென்றலாகவும் விளங்கிய கிட்டப்பா பாகவதரை ஒட்டியெடுத்த பிரதிபோலத் திகழ்கிறார் என்ற போற்றுதலுக்கும் பெருமதிப்புக்கும்வு ரியவரான மகாலிங்கம் மேல் ஸ்தாயியில் பல கார்வைகள் சஞ்சாரங்களையெல்லாம் மேற்கொண்டும் உரத்த தொனியில் பல நுட்பமான பிருக்காக்கள் கமகங்களையெல்லாம் உட்புகுத்திக் கர்நாடக இசைக் கச்சேரிகளையும் நடத்தி மக்கள் மனதில் இசையின் மேன்மையைப் பதிவு பண்ணியுள்ளார்.

வள்ளலாரின் 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்' என்ற பாடல் கிட்டப்பா அவர்கள் பாடியதை அப்படியே 'வேதாள உலகம்' என்ற படத்தில் பாடிப் பெருமைப்படுத்தியுள்ளார். 'நாமிருவர்' படத்தில் 'செந்தமிழ் நாடெனும்' 'விடுதலைப் பாடல்' என்பனவெல்லாம் இன்றும் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருப்பன. கிட்டப்பா பாகவதரின் அச்சான வாரிசாகப் பல அசுர சாதனைகளையே நிகழ்த்தி ஐந்து அல்லது ஆறு கட்டை சுருதியில் பாடி அவரது வாரிசாகத் தன்னை இனங்காட்டிக் கொண்ட சிறப்பும் மகாலிங்கம் அவர்களுக்கே உரிமையானது. சினிமா இசை எனப் பல்துறைகளிலும் விற்பன்னராக விளங்க முயற்சி செய்த மகாலிங்கம் யாரோ ஒருவரது கட்டளைகளுக்கு அடிபணிந்து தாம் நடிப்பதை விடத்தாமே விரும்பியபடி படத்தை எடுப்பதற்கான இயக்குனர் பணியையும் மேற்கொண்டு படுதோல்வியைத் தழுவினார். பல வெளிநாட்டுக் கார்களைத் தனதாக்கிச் சவாரி செய்து வந்த மகாலிங்கம் இயக்குனரானதும் இவை மாத்திரமன்றிச் செல்வச் செழிப்பெல்லாமே இவரைப் பட்ட மரமாக்கி விட்டுப் பாய்ந்தோடி விட்டன.

வறுமை இவரைப் பிடுங்கவும் தயாரிப்பாளர் தொழிலுக்குத் தலைமுழ்கினாலும் இசைக் கலை, பாடும் ஞானம் யாவுமே இவரை இறுகப் பற்றியபடியேயிருந்தன. கண்ணதாசன், இசையமைப்பாளரான விஸ்வநாதன் ராமமூர்த்தி, சிவாஜி கணேசன் எனப் பல திரையுலக ஜாம்பவான்களெல்லாம் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டு பழகிய அனுபவங்களை நிறையப் பெற்ற உயர்ந்த கலைஞராக விளங்கினார்.

'ஆதித்தன் கனவு' என்ற படப்பிடிப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அதில் துணை நடிகர்கள் மகாலிங்கத்தின் மீது கல்லெறிய வேண்டிய ஒரு கட்டம். இவர் மீது மிகுந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுதலும் பக்தியும் மிக்க ரசிகர் ஒருவர் இவர் நடித்த ஸ்ரீ வள்ளி படத்தைச் சுமார் இருபது தடவைகள் பார்த்து ரசித்த விசிறி அவர். இவரைப் போலவே இசையில் ஆற்றல் மிக்க அவரும் இசை பயின்று கொண்டேயிருந்தார். அவர் மகாலிங்கம் மீது நடிப்பின் போது கல்லெறிய விரும்பாது இயக்குனரின் கோபத்துக்கு ஆளானார். எது எப்படியாயினும் சினிமாவில் வெறும் நடிப்புக்காகவேனும் தான் விரும்பும், மதிப்பு வைத்திருக்கும் நாயகன் மீது கல் எறிய மறுத்து ஒதுங்கிக் கொண்டார். அவர்தான் பிரபல கர்நாடக இசைக் கலைஞனும் சில படங்களில் நடித்தவருமான சீர்காழி கோவிந்தராஜன். இவர் மகாலிங்கத்தின் மீது பெரும் பக்தியும் மதிப்பும் கொண்டு தமது ஆதர்ச பாடகராகவே ஏற்றிருந்தார். அதன் காரணமாக 'அகத்தியர்' படத்தில் இருவரும் பங்கேற்று நடித்த போது அகத்தியராகத் தோன்றிய சீர்காழியின் பெயரை மேலும் கீழே மகாலிங்கத்தாருடைய பெயரும் பொறிக்கப்படுவதைச் சீர்காழி விரும்பவேயில்லை. அதனால் இருவாது பெயரையும் ஒரே வரியிலேயே பொறித்தனர். அவ்வளவு தூரம் மகாலிங்கத்தின் மீது மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தார் என்பது வெளிப்படையாகிறது.



நடிப்பினாலும் இசைத் திறமையினாலும் சினிமாவில் பல வெற்றிப் படங்களைச் சமூகத்திற்களித்த மகாலிங்கத்தின் ''அருள் தாரும் தேவ மாதாவே'' என்ற ஞான சௌந்தரி படத்தின் பாடலும் பலருடைய உள்ளத்தை ஈர்த்த ஒன்றாகும். பலரும் பல தடவைகள் நடித்த 'பவளக் கொடி' என்ற படத்தில் பல வேடங்களில் கிருஷ்ணன், பெண், வேடன், வைத்தியன், வெட்டியான் எனப் பல்வேறு பாத்திரங்களில் தோன்றித் தனது நடிப்பின் நுட்பத்தை வெளிப்படுத்தியதுமல்லாமல், பல இசையமைப்பாளர்களின் பாடல்களில் சுமார் 28 பாடல் வரை பாடி மக்களுடைய இசைத் தாகத்தை நிறைவேற்றி வைத்த பெருமைக்குரியவராகவே மகாலிங்கம் விளங்கினார்.




''மாலையிட்ட மங்கை'' படத்தில் ''செந்தமிழ்த் தேன் மொழியாள்'', ''எங்கள் திராவிடப் பொன்னாடே'' திங்கள் முடி சூடும் மாலை, ''நான் அன்றி யார் வருவார்?'' என்ற இவரது நான்கு பாடல்களுமே புகழின் சிகரத்திற்கு இவரை ஏற்றிச் சென்றன. இப்படிப் பல நூற்றுக்கணக்கான படங்களில் தனது இசை மேதைமையினால் வெற்றியை நிலைநாட்டிய மகாலிங்கம் 1978 இல் தை, மாசி மாதங்களில் மலேசியாவில் நாடகங்களை நடத்திக் கொண்டிருந்த வேளையில் உடல் நலம் குன்றினார். இதனைத் தொடர்ந்து சிறு வருத்தங்கள் அவரைத் தொடர்ந்து கொண்டே இருந்தன. திடீரென ஒருநாள் மதியவேளையில் கர்நாடக இசையின் உச்சஸ்தாயியில் பல சிகரங்களைத் தொட்டு ஆலாபனையுடன் சஞ்சரித்த, ஆன்மா இவ்வுலகை விட்டுப் பிரிந்தது. அப்போது அந்த இசை மேதையின் வயது 54 தான். இசையுலகம் என்றுமே இவரது மேதைமையை நினைவில் இருத்தியே போற்றும்.



**பத்மா சோமகாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரசநாயகியின் நவராத்திரி விழா







சிவமும் சக்தியும் ஒன்றென்றுணர்தல் வேண்டும். அருள் சக்தியாகும் அரன் தனக்கு அருளையன்றித் தெருள் சிவமில்லை. அந்தச் சிவம் இன்றிச் சக்தியில்லை என்பது சித்தாந்தம். ஒன்றே தெய்வம் என்று உணருபவர் உய்வடைவர். இதுவே நவராத்திரி தத்துவம்.

நெருப்பு - சிவ பெருமான், அதன் சூடு - அம்பிகை, அதன் நிறம் - கணபதி, அதன் தண் ஒளி - முருகன். இதுவே சிவகுடும்பம். அருள் சக்தி - பார்வதி, போர் சக்தி - காளி, கோப சக்தி - துர்க்கை, புருஷ சக்தி - விஷ்ணு, முக்கண்ணன் - முக் கண்ணி, சங்கரன் - சங்கரி, திரிபுரசுந்தரன் - திரிபுர சுந்தரி, புவனம் - புவனேஸ்வரி, சகல சக்தியும் இதில் அடக்கம்.

வேதங்கள் தோன்றிய காலத்தில் பெண்கள் அதனைக் கற்க அனுமதிக்கப்படவில்லை. பாமரர்களும் உணர வழியில்லை. ஆண்டவன் படைப்பில் ஆண், பெண் வித்தியாசம் ஏது? கடவுள் கருணை பலருக்கும் கிடைக்க வியாசர் தேவி பாகவதத்தைப் பகர்ந்தார். இந்த மகா சக்தியின் வரலாறு அறிந்தவர்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு நிலைகளையும் அடைய



வழி வகுக்கும் என்பதை வியாசமகரிசியின் பிரதம சீடரான சூத முனிவர் வலியுறுத்தினார். நவராத்திரி தத்துவத்தை உணர தேவி பாகவதம் வழிகாட்டும். சூரியன் புரட்டாதித் திங்களில் கன்னி இராசிக்கு வருவதால், ''கன்னித் திங்கள்'' என்றனர். பூர் வபக்கப் பிரதமைத் திதி முதலாக வரும் ஒன்பது இரவுகள் நவராத்திரி எனவும் பத்தாம் நாள் விஜய தசமி எனவும் கொண்டாடப்படுகின்றது.

ஆலயம், இல்லம், நிறுவனங்கள் என எல்லா இடங்களிலும் இவ் விழாவைக் கொண்டாடலாம். ஆனால் பூஜை வழிபாடு நிகழும் இடம் மிகவும் தூய்மையாக இருத்தல் அவசியம். இராசதம், தாமதம், சாத்வீகம் எனும் சக்தியின் முக் குணங்களையும் வெளிப்படுத்துமுகமாக சக்தியை கும்பத்தில் எழுந்தருளப் பண்ணி, கும்பத்தை உடலாகவும் மந்திரத்தை உயிராகவும் கருதி, உச்சாடனத்துடன் உரு ஏறத் திரு ஏறும் என்பதற்கமைய மந்திர மூலம் சக்தியின் திருவருட்கடாட்சத்தை ஒன்பது இரவும் பூஜிப்பதே ஆராதனையாகும்.

''அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்'' நிற்பர். ஒரு விதை போட்டு முளைத்த செடியிலிருந்து பல விதைகளைப் பெறுவது போன்றதே. இதுவே சிவசக்தி தத்துவம்.

சாக்தம் பேசும் சக்தி பரத்துவம் மிக விரிவானது. அன் னையை அம்பாள், கொற்கை, காளி, கல்யாணி, உமை, சிவை, துர்க்கை, மீனாட்சி, காமாட்சி, சாமுண்டி, பகவதி, காயத்திரி, சிவகாமி, அபிராமி என்று ஒருருவத்திற்கு ஓர் ஆயிரம் நாமங்கள் கொண்டு அழைப்பர். ஒன்பது பெண் பிள்ளைகளை அலங்கரித்து ஒன்பது தினங்களிலும் பூஜை செய்து பத்தாம் நாள் தசமியில் மகிடாசுர சம்ஹாரத்துடன் பூர்த்தி செய்வர்.

மகா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய் என்று கூவிய பாரதியார் அம்பிகையை வழிபட்டால் அதிக வரம் பெறலாம் என்று உறுதிபடக் கூறினார். வீரம், செல்வம், கல்வி வேண்டியே சகலரும், உள்ளத்தைச் சக்தி சிந்தனையில் நிலை நிறுத்தி வந்தனை செய்துவரின் பெற முடியாதது எதுவுமில்லை என்பது ஆன்றோர் கருத்தாகும்.

கைப்பலம் காட்டுவது வீரமல்ல.

''நாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்'' என்பதே வீரம். முதல் மூன்று நாட்களும் வீரத்திற்காகவே வழிபாடு. அருட் செல்வமும் பொருட் செல்வமும் வாழ்வுக்குத் தேவை. அடுத்த மூன்று தினங்களும் இதற்காகவே வழிபாடு. 'நாகாக்கவே' இறுதி மூன்று தின வழிபாடு. பாரதக் கதையில் பாண்டவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



சகலதையும் இழந்து துரியோதனனிடம் தோற்று மறைந்து வாழ்ந்த நிலையில் தங்கள் ஆயுதங்களை ஒரு வன்னி மரப் பொந்தில் ஒளித்து வைத்திருந்தார்கள். பின்பு முனிவர்களின் ஆலோசனையில் துர்க்கா பூஜை செய்து, நட்சத்திரங்களையும் வழிபாடு நோக்கில் ஸ்ரீ துர்க்கா நட்சத்திர மாலிகா துதி''யைப் பாராயணம் செய்து உரிய நேரத்தில் விஜயன் முதல் சகலரும் ஆயுதங்களை எடுத்து போரில் வென்றார்கள். இதன் காரணமாகவே 'விஜயதசமி' என்ற நாமம் வந்தது என்பர்.

கலியுகத்திலேயே அம்பிகையின் அருள்பெற்று அற்புதங்கள் பல வழங்கும் சக்தி அருளாளர்களையும் நாம் பார்க்கிறோம். முதல் மூன்று நாட்களும் துர்க்கா அஷ்டோத்திரமும் சகஸ்ரநாமமும் அடுத்து இலக்குமி அஷ்டோத்திரமும் அடுத்து சரஸ்வதி அஷ்டோத்திரமும் முறைப்படி ஓதி, பேதித்து வளர்த்தெடுத்த பெய்வளையின் பாதத் திறம் பாடி, ஓதியுணர்ந்து, ஐம்புலனும் அகத்தடக்கி எவர் வழிபடுகிறாரோ அவருக்கு கலையாத கல்வியும் குலையாத வயதுமோர் கபடு வாராத நட்பும், கன்றாத வழமையும், குன்றாத இளமையும் கழு பிணியிலாத உடலும் சேர்ந்த பதினாறு பேறும் கிடைக்கும்'' என்பது அனுபவ ஞானி அபிராமிப் பட்டர் மொழியாகும்.

அன்பு அகலாத மனைவி, தவறாத சந்தானம், தாளாத கீர்த்தி எல்லாம் கிடைக்கும் என்றவர் அம்பிகையை தாயாக எண்ணி, வழிபடுபவர்களுக்கு எது வேண்டுமோ அவை யாவும் கிடைக்கும் என்றார். எல்லாம் பெற என்ன வேண்டும்? நல்ல அறிவு வேண்டும். ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்பது குறள். கல்வித் தெய்வமமாம் சரஸ்வதி தேவியை வணங்குவதன் மூலம் நல்லறிவு பெறலாம்.

அம்பிகையின் அருள் பெற்ற அருளாளர்களை எண்ணுகையில் மெய்சிலிர்க்கிறது. குரு வழி நின்றே, திருவருள் பெறலாம் என்பதை பட்டர் ''அபிராமி கடைக் கண்களே'' என்றார். இல்லையேல் வரதனாய் இருந்தவன் காளமேகம் ஆக முடியுமா? புவி புகழும் கம்பன் கவியே கிடைத்திருக்குமா? மலைமகளாகவும், அலை மகளாகவும், கலைமகளாகவும் அன்னை பராசக்தியின் மாட்சிதரும் காட்சி இல்லையெனில் எம் வாழ்வின் மீட்சி எவ்வாறு அமையும். இதற்கு புலவர்களே சாட்சியாவர். சரஸ்வதி என்பது வட சொல். எங்கும் வியாபித்திருப்பவள் என்பது பொருள். சரஸ்வதியை உபாசித்தவர்கள் புவிபோற்றும் கவிராயர்கள் ஆக மிளிர்ந்தனர். கூப்பிட்டதும் ஓடி வருபவள் தேவி.

''வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்குமே'' என்று அகவை ஐந்து வரை பேச முடியாத குழந்தை செந்தூர் முருகன் அருளால் கந்தர் கலி வெண்பாவை சாற்றி ஆற்றல் பெற்றது. அன்று முதல் அக்குழந்தை குமர குருபரர் ஆனார். எல்லாருக்கும் உறுப்புகள் கண், காது, மூக்கு என அமைந்திருப்பினும் உருவ வேறுபாடு இருப்பதே படைப்பு இரகசியம். திரும்பத் திரும்ப ஒரே கோரிக் கைகளைக் கேட்டு அலுத்துப் போய் பாற் கடல் பள்ளியில் தூங்குகிறாராம் மகா விஷ்ணு. சம்காரம் பண்ணி அலுத்துச் சுடு காட்டில் பித்துப் பிடித்து ஆடுகிறாராம் சிவன். ஆனால் பிரம்மாவோ, மகிழ்வின் நெகிழ்ச்சியில் வித விதமாய் படைத்தபடி உற்சாகத்தில் உள்ளாராம். ஏன் பள்ளி கொண்டீரய்யா'' என்று கேட்க வைக்கிறார் விஷ்ணு. கலை மகளைக் கைப்பிடித்த சோகத்திலும் மோகத்திலும் பிரம்மன். இவர்களுடன் மலை மகளாகவும், அலை மகளாகவும் கலை மகளாகவும் ஆயிரம் கோடிச் சூரியன் பிரகாசத்துடன் விளங்கும் அன்னை பராசக்தியை நினைத்த குமரகுருபரர்


''சகம் ஏழும் அளித்து உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக
உண்டாக்கும் வண்ணம் கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே'' என்று உருகுகின்றார். எனவே ஆண், பெண் பேதமின்றி,சிறுவர் முதல் பெரியோர் வரை நவரச நாயகியின் நவராத்திரி விழாவைக் கொண்டாடி அன்னை பரா சக்தியை மனதில் உறுதியுடன் நிறுத்தி, வாக்கினில் இனிமை கண்டு சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ்வோமாக.

- இந்திரன்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலைகளின் ரிஷிமூலம் கூத்தனூர் சரஸ்வதி திருத்தலம்

உலகில் வேறெங்கும் இல்லாது, தமிழகத்தில் திருவாரூர் மாவட்டம், பூந்தோட்டம் அருகே கூத்தனூரில் மட்டுமே கலைகளுக்கெல்லாம் கடவுளாகிய சரஸ்வதிக்கென தனியொரு ஆலயம் அமைந்துள்ளது. அம்பாளின் ஊராதலால் பண்டைக்காலத்தில் இவ்வூர், அம்பாபுரி என அழைக்கப்பட்டது. இதற்கு ஹரிநாகேஸ்வரம் என்ற பெயரும் உண்டு. பின்னர் இரண்டாம் இராஜராஜன் தன் காலத்தின் அவைப்புலவராக விளங்கிய ஒட்டக்கூத்தருக்கு இவ்வூரை பரிசாக வழங்கினான். அதனால் கூத்தன் ஊர் - கூத்தனூர் எனப் பெயர் பெற்றது.

பக்தரை ஆட்கொள்ளும் அன்னையின் அருள்விளையாடல்கள் பலப்பல. காளிதாசன் சம்பூர்ண ராமாயணம் பாட அருள் செய்தாள். கவிச்சக்கரவர்த்தி எனப் பெயர் பெற்ற ஒட்டக்கூத்தர் கலைமகளை வரகவி பாடும் திறன் வேண்டிப் பூசித்தார். ஒட்டக்கூத்தர் என்ற பெயர் பெறுவதற்காக நிகழ்ச்சியும் இவ்வூரில் நடந்திருக்கின்றது என கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் என்ற நூல் விபரிக்கிறது. செங்குந்தர்களின் 1000 தலைகளை வெட்டி அவற்றை கலைவாணியின் அருளால் ஒட்ட வைத்தார். அதனாலேயே ஒட்டக்கூத்தனார் எனும் பெயர் வந்தது. இவ்வாறு தலையை ஒட்டும் போது அவர் பாடிய பாடல் 'எழுப்பெழுவது' எனப்படும்.

இன்றும் அன்னை வேண்டுவோர்க்கு வேண்டுவன நல்கும் பேரருட் சக்தியாக பெருந்திருவாகி விளங்குகின்றார். வாய்பேசாதவர்களும் மூளைவளர்ச்சி குன்றியவர்களும் நியமத்துடன் பூசை செய்து பயன்பெற்று வருகின்றார்கள். குறிப்பாக மாணவர்கள் பரீட்சைக்குச் செல்லும் முன் பேனா முதலிய கல்விப் பொருட்களை கஅன்னையின் மடியில் வைத்து அர்ச்சனைசெய்த பிறகே செல்கின்றனர். பாடசாலை ஆரம்பித்தவுடன் தமது புத்தகங்களை கலைவாணியின் பாதக் கமலங்களில் வைத்து அருளாசி பெற்றபின்னரே பாடசாலை செல்லத் தொங்குகின்றனர். இறைவனின் ஒவ்வொரு வடிவமும் உவ்வொரு அர்த்தமுள்ளதாக விளங்குகின்றது. சிருஷ்டியின் முதல் வடிவம் சப்தம். அம்பிகை சிருஷ்டிகர்த்தா ஆதலினால் சிருஷ்டியின் அடிப்படையை உணர்த்தும் விதமாய் வலது மேல்க்கையில் அட்சரமாலையுடன் விளங்குகின்றார்.

ஒளிக்கதிர்கள் நித்தியமானவை. அம்பிகையின் நாமத்தை நாள்தோறும் சொல்லித் தியானிப்பதன் மூலம் ஞானத்தையும் முக்தி ஆனந்தத்தையும் பெறமுடியும் என்பதை அமிர்தகலசம் விளக்குகதின்றது. உலகில் மக்களுக்கு தேசைவயானது கல்வியும் செல்வமும். கல்வியி/ல்லாத செல்வம் உபபோகமற்றது. கொடுமையானது. கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு; என்பதை உணர்த்துவதற்காக ஏட்டினைத் தாங்கியுள்ளார். தன்னை அடைந்தவர்களுக்கு ஞானத்தை வழங்கும் பேரருட்சக்தியாக சின்முத்திரை கொண்டு சரஸ்வதி விளங்குகின்றார். தேவியின் வாகனம் ஹம்சம். ஹம்சம் என்றால் அன்னம்.வஸ்திரம் வெள்ளை; இருக்கை வெண்தாமரை; வாகனம் அன்னம் என வெண்மையான மனமே ஞானத்தின் இருப்பிடம் என்பதை வெண்மை உணர்த்துகின்றது.

அன்னை சரஸ்வதியை வழிபட்டு நாளைத் தொடங்குவதன் மூலம் வித்தை சிறக்கும். நல்லாசி கிட்டும். வாழ்க்கையில் நாம் அனைவரும் மாணவர்களே !

- ஹரிஷ்








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நீங்கள் உலகின் எப்பாகத்தில் இருந்தாலும், மக்கள் வங்கியின் எத்தெர இசுர NRFC கணக்கு உங்களுக்காக



### மக்கள் வங்கியின் "எத்தெர இசுர" NRFC கணக்கின் நன்மைகள்

- அரச வங்கியின் பூரண பாதுகாப்பு
- கணக்கை வெளிநாட்டு நாணயத்தில் செயற்படுத்தலாம் - 13 வகையான வெளிநாட்டு நிதி
- கொடுக்கல் வாங்கல் நாணய கட்டுப்பாட்டினுள் அடங்காததனால் இலகுவில் பரிமாற்றம் செய்யக்கூடிய தன்மை
- அதியுயர் வட்டியும், பெருந்தொகை வைப்பீடுகளுக்கு விசேட வட்டி விகிதமும்
- கணக்கின் இருப்புகளுக்கும், வட்டிக்கும், வருமான வரி விலக்கு
- கணக்கிற்கு வரவு வைக்கப்படும் பணத்திற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது
- பீப்பல்ஸ் டிரவல்ஸ் நிறுவனத்தில் இலகு கொடுப்பனவு அடிப்படையில் விமானப் பயணச்சீட்டு கொள்வனவு
- பீப்பல்ஸ் லீசிங் நிறுவனத்திடம் சலுகைக் கட்டணத்தில் லீசிங் வசதி
- சர்வதேச கடன் அட்டை (Visa International Card) வசதி
- வீடமைப்புக்கடன் மற்றும் சுயதொழில் கடன் வாய்ப்பு
- நாடு முழுவதும் வியாபித்துள்ள 670 க்கும் அதிகமான எமது கிளை வலையமைப்பின் ஊடாக நீங்கள் பெயர் குறிப்பிடுபவருக்கு இலகுவில் பணத்தைப் பெற்றுக்கொடுத்தல்
- கணக்கு நிலுவைக்கு அமைய உடனடி கடன் வசதிகள்

எத்தெர இசுர

மக்கள் வங்கி
எத்தெர கொடுக்கல் வாங்கல் சேவை
59, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை
கொழும்பு 10. இலங்கை.

தொலைபேசி: + 94 - 11 - 2334278
+ 94 - 11 - 2332746
+ 94 - 11 - 2446409
+ 94 - 11 - 5338459
+ 94 - 11 - 2332745

தொலைநகல்: + 94 - 11 - 5338459
+ 94 - 11 - 2332753

மின்னஞ்சல்: teletran@peoplesbank.lk
nrfc@peoplesbank.lk

இணையத்தளம்: www.peoplesbank.lk

2008 2010 2009 2009

www.peoplesbank.lk

## வெளிநாட்டில் வசிக்கும் உங்களுக்கு உயர் அனுகூலங்களுடனான முதலீட்டு வாய்ப்பொன்று மக்கள் வங்கியிடமிருந்து




**இப்பொழுது மக்கள் மனமறிந்த மக்கள் வங்கி வழங்கும் "விஷேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கில் (SFIDA)" முதலீடு செய்வதன் மூலம் வெளிநாட்டில் வசிக்கும் நீங்கள் விஷேட அனுகூலங்களை அதிகமாகப் பெறுவதுடன், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கிய பெருமைக்குரியவராகவும் திகழலாம்.**

- இவ் விஷேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கினை (SFIDA) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் மூலமாகவும் கீழ்காணும் நாணயங்களிலும் ஆரம்பித்திடலாம்.
  அமெரிக்க டொலர், ஸ்டேர்லிங் பவுண், யுரோ, அவுஸ்திரேலிய டொலர், கனேடிய டொலர், ஜப்பான் யென், ஹொங்கொங் டொலர், ஸ்வீடிஷ் குரோனர், ஸ்விஸ் .பிராங்க் மற்றும் இலங்கை ரூபாய்.
- வங்கி உண்டியல்கள், வெளிநாட்டு பணப்பரிமாற்றம் அல்லது இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் தீர்வை செய்யப்பட்ட பயணக் காசோலை அல்லது வெளிநாட்டு நாணயம் போன்ற பண முறைமைகளின் மூலம் முதலீடு செய்யலாம்.
- நீங்கள் இக் கணக்கை நிலையான வைப்பாகவோ, சேமிப்புக் கணக்காகவோ ஆரம்பிக்க முடியும்.
- ஆகக் குறைந்த வைப்புத் தொகை 10,000 அமெரிக்க டொலர்கள் (வேறு நாணய முறைமையாயின் இதற்கு சமமான தொகை வழங்கப்பட வேண்டும்)
- வெளிநாட்டு நாணயத்திற்கான நிலையான பண வைப்பினை ஆரம்பிக்கக்கூடிய கால வரையறை 1 மாதம், 3 மாதங்கள், 6 மாதங்கள், 12 மாதங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.
- இலங்கை நாணயத்தில் நிலையான வைப்பினை ஆரம்பிக்கக்கூடியது. 3, 6, 12 மாதங்கள் போன்ற கால அடிப்படையிலாகும்.
- இவ் வைப்பிற்காக விஷேட வட்டி வீதமொன்று வழங்கப்படும்.

**இவ் வைப்பானது வருமான வரி, பற்றுவரி மற்றும் தடுத்து வைக்கப்பட்ட வரி (WHT) போன்றவற்றிலிருந்து வரி விலக்கப்பட்டது.**

***நீங்களும் இன்றே மக்கள் வங்கி வழங்கும் "விஷேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கில் (SFIDA)" முதலீடு செய்து, அதி விஷேட அனுகூலங்களைப் பெற்று மகிழுங்கள்.***

விபரங்களுக்கு NRFC முகாமையாளரைத்
தொடர்பு கொள்ளவும்: +94 11 2332745, +94 11 2437622

AA Brand Finance Rating, A(lka) Fitch Rating

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் இலங்கை கரையினில் தொன்மைமிகு சிவாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் தென் கரையில் காலி மாநகரில் மீனாட்சி சுந்தரேஸ்வரம் என்ற பழம்பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவாலயம் அமைந்துள்ளது. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பாண்டிய அரசர்களால் திருப்பணி செய்யப்பட்ட இச் சிவாலயம் பல்லாயிரம் ஆண்டுகள் பழைமை கொண்டதாக நம்பப்படுகின்றது.

தமிழ் அரசர்களான பாண்டியரின் செல்வாக்கு தென்னிலங்கையில் மேலோங்கி இருந்தமைக்கு இச் சிவாலயம் சான்று பகர்கின்றது. பாண்டியரின் இலச்சினையான மீன் சின்னம் இவ்வாலய வாயிலிலிருந்த கருங்கற்றூணில் பொறிக்கப்பட்டுள்ளமையும் கருங்கல்லிலாலான ஆலய அர்த்த மண்டப விமானத்தில் குறித்த பாண்டியரின் இலச்சினையான மீன் சின்னங்கள் நான்கு பொறிக்கப்பட்டுள்ளமையும் இச் சிவாலயத்திற்கும் தென்னிந்திய தமிழ்ப் பேரரசான பாண்டிய அரசுக்கும் இருந்த தொடர்பை வெளிப்படுத்துகின்றது.

வருடாந்த மகோற்சவம் சித்திரா பௌர்ணமி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். இவ்வாலயம் தென்னிலங்கைக் கரையிலே தென் மாகாணத்தின் தலைநகரான காலி மாநகரின் மத்தியிலே மாவட்ட செயலகம், மாநகர சபை அலுவலகம், அஞ்சல் அலுவலகம், புகையிரத நிலையம், பேருந்து நிலையம் உட்பட பல அலுவலகங்களுக்கு அண்மித்ததாயமைந்துள்ளது.

இந்த ஆலயம் தொடர்பான புராண கால செய்திகள் பலவும் உள்ளன.திருக்கேதீஸ்வரம்,முன்னேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் ஆகிய சிவாலயங்களில் இராமபிரான் வழிபட்டமை போன்று திருக்கோணேஸ்வரம், தொண்டீஸ்வரம், மீனாட்சி சுந்தரேஸ்வரம் ஆகிய சிவத் தலங்களில் இராவணேஸ்வரன் வழிபட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கி வரும் போது இந்த காலி சிவாலயத்தில் வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது. அனுமான் ஆகாய மார்க்கமாகத் தூக்கி வந்த சஞ்சீவி மலையின் ஒரு பகுதி இச்சிவாலயத்திற்கு அண்மையில் விழுந்ததாகவும் கூறப்படுகின்றது. இன்றும் சஞ்சீவிச் செடிகள் உள்ள ஒரு மலை இச் சிவாலயத்திற்குச் சமீபமாகவுள்ளது.

'ருமஸ்தலகந்த'' என்று அழைக்கப்படும் மலையே அதுவாகும். அப்பகுதி மக்கள் அனுமானால் கொண்டு வரப்பட்ட மலையின் ஒரு பகுதியே ''ருமஸ்தலகந்த'' மலை என்று நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இவற்றை நோக்குமிடத்து புராணகாலமான இராமாயண காலத்து வரலாறு கொண்டதும் உலகிலுள்ள பழம் பெரும் வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் இலங்கையின் பல்லாயிரம் ஆண்டுகள் பழமையும் வரலாற்று சிறப்பும் கொண்ட சிவாலயமாகவும் காலி மீனாட்சி சுந்தரேஸ்வரத்தைக் கொள்ளலாம்.

தென்னிலங்கையின் பண்டைய இந்துக்களின் இருப்பை உறுதி செய்வதாக மீனாட்சி சுந்தரேஸ்வரம் உள்ளதுபோன்று அதன் கிழக்குத் திசையில் மாத்தறை மாவட்டத்தின் தேவேந்திரமுனையில் (தெவிநுவர) இன்று விஷ்ணு ஆலயமாகப் பிரசித்தி பெற்றுள்ள தொண்டீஸ்வரம் என்ற பண்டைய சிவாலயமும் அதற்கும் கிழக்காக தமிழ்த் தெய்வம் என்று போற்றப்படும் முருகப் பெருமான் கோயில் கொண்டுள்ள கதிர்காமத்திருத்தலமும் உள்ளன.

பன்னீர் மரத்தைத் தலவிருட்சகமாகக் கொண்டுள்ள இச் சிவாலயம் ஐந்து பெரும் கோபுரங்கள் கொண்டதாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புக்களும் அருளும் நிறைந்ததாக அற்புதங்கள்பல நடை பெற்ற சம்பவங்கள் கொண்டதாக மீனாட்சி சுந்தரேஸ்வரம் மிளிர்கின்றது. வரலாற்று ரீதியாக இந்துக்களின் இருப்பை வெளிப்படுத்தி நிற்கும் சான்றாகத் திகழும் இச் சிவாலயம் 1505இல் போர்த்துக்கேயரின் வருகையுடன் பாதிப்பை எதிர் கொண்டுள்ளது.

போர்த்துக்கேயர் இலங்கையில் முதன் முதலில் வந்திறங்கிய இடம் காலி. அவர்கள் இலங்கையின் ஏனைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளிலிருந்த இருந்த இந்து ஆலயங்களைச் சிதைத்தழித்தது போன்று மீனாட்சி சுந்தரேஸ்வரத்தையும் சிதைத்துள்ளனர். ஆனால் கருவறை மட்டும் அவர்களால் சிதைக்க முடியாததாக அருள் நிறைந்ததாக பாதுகாக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம், திருநந்தீஸ்வரம், மாமாங்கேஸ்வரம் என்று நாட்டின் நாலா பக்கங்களிமிருந்த இந்து ஆலயங்கள் அவர்களால் சிதைக்கப்பட்டதாக வரலாறுள்ளது. மீனாட்சி சுந்தரேஸ்வரமும் அதில் அடங்குகின்றது.

போர்த்துக்கேயரால் சிதைக்கப்படுவதற்கு முன் இச்சிவாலயம் பரந்துபட்ட நிலப் பரப்பில் இருந்தமைக்கான ஆதாரங்கள் வெளிப்பட்டுள்ளன. தற்போதுள்ள ஆலயம் கடற்கரை வரை நீண்டிருந்துள்ளது. அது மட்டுமல்ல, காலி மாநகரின் பல அலுவலகங்கள் தெருக்கள் அமைந்துள்ள நிலப் பரப்பும் சிவாலயத்திற்குரியதாகவே இருந்துள்ளது.

கருங்கல்லாலான மிகப் பெரிய அளவில் மதில்களுடன் விளங்கிய இச் சிவாலயமும் தேவேந்திர முனையிலிருந்த தொண்டீஸ்வரமும் தென்னிலங்கையிலிருந்த பழம் பெருமையுடன் பெரிய அளவில் இருந்த இந்து வழிபாட்டுத்தலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கேயரின் செயற்பாடுகள் தொன்மைமிகு திருத்தலங்களின் அமைப்பை, பெருமையை சிதைத்து விட்டன.





போர்த்துக்கேயரின் பின்னர் இலங்கையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் காலிக் கோட்டையை அமைக்க சிவன் கோயில் கருங் கற்களையே பயன்படுத்தி உள்ளனர். நாட்டின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்ட அந்நியரின் கோட்டைகளுக்கு இந்துக் கோயில்களின் மதில் மற்றும் கோயில் கற்களுமே பயன்பட்டுள்ளன.

இந்துக் கோயில்கள் அந்நியரால் சிதைக்கப்பட்டமைக்குக் கோயிலிலுள்ள பெறுமதி வாய்ந்த சொத்துக்களை அபகரிப்பது போன்றே தமது கோட்டைகளை அமைக்க கற்களைப் பெற்றுக் கொள்வதும் காரணமாயமைந்திருந்தன.

காலிக் கோட்டையை சிவாலயத்திற்கண்மையில் அமைத்த ஒல்லாந்தர் அங்கிருந்த மக்களை வெளியேற்றி அப் பகுதியைத் தமது பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். அதனால் அப்பகுதியிலிருந்த மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். சிவாலய வழிபாடுகளுக்கும் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறப்புடன் விளங்கிய சிவாலய பூமி மக்களற்ற சூனிய பிரதேசமாக்கப்பட்டது.

ஒல்லாந்தரின் ஆட்சி அடங்க அடுத்து ஆங்கிலேயரின் ஆட்சி உருவானது. ஒல்லாந்தர் நாட்டை விட்டு வெளியேறியபோது அவர்கள் வசமிருந்த கோட்டை, கொத்தளங்களை சுற்றுப்புறத்திலிருந்த மக்கள் கைப் பற்றினர். குடியேறினர். ஒல்லாந்தர் குடியிருந்த குடியிருப்புகளெல்லாம் அயலிலிருந்த மக்களால் அபகரிக்கப்பட்டன. ஆனால் பாரம்பரியமாக வாழ்ந்த இந்து மக்களுக்கு இடம் கிட்டவில்லை. ஏனெனில் ஒல்லாந்தர் அந்த மண்ணின் சொந்த மக்களை அப்பிரதேசத்திலிருந்து அகற்றுவதிலேயே முக்கிய கவனம் செலுத்தியுள்ளனர்.

சிவாலயத்திற்குரிய காணியில் கோட்டை அமைத்த ஒல்லாந்தர் வெளியேறிய பின் காணியில் யாதொரு தொடர்புமின்றி குடியேறிய மக்களுக்கு அண்மையில் காணியுறுதி வழங்கப்பட்டுள்ளது. சிவாலயக் காணி ''ஒட்டியா பறங்கியாவத்தை'' என்ற பெயரில் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது பறங்கியரின் தோட்டம் என்று பதியப்பட்டுள்ளது.

சிவாலயத்திற்கு அண்மையில் உள்ள நிலப்பரப்பில் பண்டைய சிவாலயத்தின் மதிற்சுவர்களின் தூண்களின் இடிபாடுகள் புதைந்திருக்கின்றன. அவை வெளிப்பட்டும் உள்ளன. காலி, மாத்தறை ஊடாக கதிர்காமத்திற்குச் செல்லும் பக்தர்கள் இம் மீனாட்சி சுந்தரேஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தையும் சென்று தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். இச்சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவனார் சுந்தரேசப் பெருமான் என்ற திருநாமம் பூண்டவராகவும் பார்வதி தேவியார் மீனாட்சி என்ற திருநாமம் கொண்டவாரகவும் விளங்குகின்றனர். மதுரை மாநகரிலே கோயில் கொண்டுள்ள பெருமானையும் அம்மையையும் நினைவிற் கொள்ளும் வண்ணம் இவ்வாலயம் பெருமை பெறுகின்றது, போற்றப்படுகின்றது.

தற்போது ஆலயம் விரிவாக்கப்பட்டு பரிவார மூர்த்திகளுக்கு உரிய சன்னிதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. கிழக்கு வாசலையுடைய இவ்வாலயம் கிழக்குத் திசையில் கதிர்காமத் திருத்தலத்தை நோக்கியபடி அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். அலை கடலின் கரையிலிருந்து அருள் வழங்கும் இவ்வாலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள் கிரமமாக இடம்பெற்று வருகின்றன. சிவாச்சாரியார்களால் பூசை, வழிபாடுகள், நடத்தப்பட்டு வரும் இவ்வாலயத்தில் இந்துக்களுக்குரிய விசேட தினங்களில் சிறப்பு வழிபாடுகளும் அபிஷேகங்களும் இடம்பெறுகின்றன.

இவ்வாலய வழிபாடுகளில் இந்துக்கள் மட்டுமின்றி பௌத்தர்களும் நம்பிக்கையுடன் ஈடுபடுவதைக் காணலாம். பௌத்த சிங்கள மக்கள் தமது குறை தீர முத்தமிழை உலகுக்கு அளித்த பேருளாளனான சிவனை பணிவுடன் வணங்கிப் பயனும் பெறுவதாகக் கூறுகின்றனர். காலத்தால் அழியாத அழிக்க முடியாத நித்திய திருத்தலமாக இன, மத, மொழி கடந்த பெருமையுடன் மீனாட்சி சுந்தரேஸ்வரம் என்றும் ஒளிபரப்பும் என்ற நிலை என்றும் தொடரும். காலி மாநகரைச் சூழ்ந்த பகுதிகளில் இவ்வாலயத்துக்குரிய பண்டைய புனித சின்னங்கள், திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வரலாற்றுப் பொக்கிஷங்களான அவை உரியபடி பேணப்படவும் வெளிப்படுத்தப்படவும் வேண்டும்.

தென்னிலங்கைக் கரையினிலே கோயில் கொண்டுள்ள எம் பெருமான் சிவனை நோக்கி தென்னாடுடைய சிவனே போற்றி எந் நாட்டவருக்கும் இறைவா போற்றி இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க என்று பிரார்த்தித்து வணங்குவோம். வளமான, நலமான வாழ்வை எமக்களித்து, நிம்மதியான நிறைவானவற்றையும் தந்து காத்துவளமளிப்பார் மீனாட்சி அம்மன் உடன் கோயில் கொண்ட சுந்தரேசப் பெருமான் என்று திடமாக நம்புவோம். மனவுறுதி கொண்டு எதிர்காலத்தை எதிர்கொள்வோம்.

உலகிலேயுள்ள ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பழமையான வழி பாட்டுத்தலங்களில் ஒன்று காலி மாநகரிலுள்ள மீனாட்சி சுந்தரேஸ் வரம் என்பது குறிப்பிடத்தக்கது. சிவபூமியென்று திருமூலரால் போற்றப்பட்ட இலங்கைத் தீவின் சிறப்புக் கட்டியம் கூறி நிற்கும் பழம் பெரும் சிவாலயங்களான நகுலேஸ்வரம், திருக்கோணேஸ்வ ரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம், திருநந் தீஸ்வரம் போன்றவற்றின் வரிசையிலே மீனாட்சி சுந்தரேஸ்வரமும் வைத்துக் கணிக்கப்பட வேண்டியது, போற்றப்பட வேண்டியது என்பது மதிப்பீடுகள் மூலம் உறுதிப்படுகின்றது.

- த. மனோகரன்

இராமாயண இதிகாசத்துடன்
இவ்வாலயம் தொட/7ங்கப்பட்டுள்ளது.

கி.மு.10000 முதல் 6000 வரை

பாண்டிய மன்னரினால்
திருப்பணி செய்யப்பட்டது.

கி. பி. 1000


போர்த்துக்கேயரினால் ஆலயம்
அழிக்கப்பட்டு கோட்டை கட்டப்பட்டது.

கி. பி. 1505

ஆலய தர்மகர்த்தா சபையினால்
கட்டுமானத் திருப்பணி முன்னெடுப்பு.

இன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் வசமிழக்கும் வரை

ஒரு அமாவாசையில்
பால் நிலா பௌர்ணமிக்குமென்று
பகல் கனவில் லயித்திருக்க...
ஒரு சூரியன்
நட்ட நடு திசையில் உதிக்குமென்று
நம்பிக்கை நெஞ்சில் விதைத்திருக்க...
அலையொரு நாள்
ஓய்ந்த பின்னே
குளித்திடவே காத்திருக்கும்
கோமாளிகளாய்...
எங்கள் கண்கள் பூத்திருக்க...
நட்ட மரமிதுவும்
பட்டமரமெனத் தெரிந்தும்
தளிர்க்குமென நம்பும்
ஏமாளிகளாய்
எங்கள் கனவுகள் வளர்ந்திருக்க...
வேலியுடைத்து
வெளியார் மாடு வந்து
பயிரெல்லாம் மேய்ந்த பின்னும்
மீண்டும் விளையுமென
மனக் கோட்டை குடியிருக்க
பூக்காத மரமிதுவும்
காய்க்குமென நம்பி
கண் விழித்து காத்திருக்க
எங்கள் வானத்தில்
சிறகினை விரிப்பதற்கு
தேதி பார்த்து காத்திருக்க
கனவுச் சிறகுடைந்து
தரை மீது வீழ்ந்தோம்!
எங்கள் கால்கள்
தறிக்கப்படும் வரை...
எங்கள் சிறகுகள்
முறிக்கப்படும் வரை...
எங்கள் மூளைகள்
கழுவப்படும் வரை...
எங்கள் வானம்
வசமிழக்கும் வரை...
எங்கள் வாழ்வு
நழுவும் வரை...
கனவுகளின் குடியிருந்தோம் !
அடுக்கு மாளிகைக்கு
ஆகாயத்தில் அஸ்திவாரமிட்டு
கனவுச் சிறைகளுக்குள்
எமை நாமே சிறையிட்டோம்!
நிஜங்கள் எமைக் கடந்து
நெடுந்தூரம் சென்ற பின்னும்
இன்னும்...இன்னும்...
கனவுகளில் ...கனவுகளில் நாம்!

**- யாழ் அஸீம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DUTY FREE இல் வாங்கிய மாதிரி

# DIRECT2U

## குறைந்த விலையிலான புதிய வியாபாரத் திட்டம்

கப்பலிலிருந்து உங்கள் கைகளுக்கு

புத்தம் புதிய
SHARP
LCD TV
ரூபா.57,160/- + VAT
தொடக்கம்



புத்தம் புதிய
OLYMPUS
டிஜிட்டல் கமரா
ரூபா.10,990/-
தொடக்கம்



புத்தம் புதிய
SHARP
குளிரூட்டி
ரூபா.36,960/- + VAT
தொடக்கம்



புத்தம் புதிய
ROWA
சிலிம் ப்ளெட் டீவி
ரூபா.16,590/- + VAT
தொடக்கம்



புத்தம் புதிய
BG
மின் விசிறி
ரூபா.2,950/- + VAT
தொடக்கம்



**இவற்றுக்கு நீங்கள் கட்டணம் செலுத்த தேவையில்லை**

● குளிரூட்டப்பட்ட ● முகாமையாளரின் வாகனம் மற்றும் எரிப்பொருள் செலவு ● ஆடம்பர உருவப்படங்கள் ● நகரிலே கூடியளவு வாடகை ● பகலிலே பிரகாசமகா எரிந்துக்கொண்டிருக்கம் காட்சியறைகள் ● வேலை செய்யும் உத்தியோகஸ்தர் இன்னும் பல.....

**நீங்கள் கட்டணம் செலுத்தவேண்டியது**

● பொருளின் நிஜ பெறுமதி ● அரசாங்க வரி ● சிக்கனமான மின்பாவனை கொண்ட வெளிச்சங்கள் ● அடிப்படையான களஞ்சிய அறை மற்றும் நிர்வாகத்திற்கு இன்னும் சில வசதிகள்

புத்தம் புதிய பொருட்கள்

உலகப் புகழ் பெற்ற பண்டப் பெயர்கள்

நம்பிக்கையான பிரவுண்ஸ் உத்தரவாதம்

க்ரெடிட் அட்டை திட்டங்கள்

■ டீவீக்கள் ■ குளிரூட்டிகள் ■ ஜெனரேட்டர்கள்
■ டிஜிட்டல் கமராக்கல் ■ சமையலறை உபகரணங்கள்
■ மின்விசிரிகள் ■ நீர் பம்பிகள்
■ மின் கருவிகள் ■ தோட்டக் கருவிகள்
■ வீட்டு உபகரணங்கள் மற்றும் இன்னும் பல

DIRECT2U
359, நீர்கொழும்பு வீதி,
வத்தளை.
☎ 011 5 234 088

DIRECT2U
02, புனி. பெனடிக்ட் மாவத்தை,
கொழும்பு 13
☎ 011 5 235 377

DIRECT2U
02, மொடல் டவுண் அவெனியு,
கட்டுபெத்தை, மொரட்டுவை
☎ 011 5 234 099

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் ஷமிலா 0773 888 885

BROWNS GROUP BG ESTD 1875 Browns

SHARP USHA LEXUS OLYMPUS BG ROWA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பத்மம் என்றால் பரதம்

## நாட்டியப் பேரரசி டாக்டர் பத்மா சுப்ரமணியம்

பிறக்கும் போதே அபிநய முத்திரையுடன் பிறந்து, தொட்டிலில் வளரும் போதே தா...தை என கால்களை உதைத்து, பல்லாங்குழி ஆடும் போதே அரை மண்டியிட்டு, பூக்களைப் பறிக்கும் போது துள்ளிக் குதித்து, தட்டாமலை நாட்டியத்திற்காகவே தன்னை முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தபஸ்வினி!

இவரது சுட்டுவிரல் நுனிகூட பேசும். இவர் அசைந்தால் கூட, அதுவும் ஒரு தாளகதியில் தான். சாதரணமாக அமர்ந்தால் கூட சிற்ப சாஸ்திரத்தில் கூறியிருக்கிற அம்பாள் மாதிரி இருக்கும். கண்கள், உதடு, மூக்கு, முகம் என தேகமே அர்த்தமுள்ள மொழியைப் பேசும். மேடையில் வந்து நின்றால் அரங்கத்தில் பேச்சு நின்று போகும். விழிகள் ஸ்தம்பிக்கும்.

பரதத்தைக் கலையாக மட்டுமல்லாது - கடவுளாகவே நினைக்கும் இவரது கால் சலங்கைகள் கூட 'சங்கரா... சங்கரா' என்றே ஒலிக்கும். இத்தனைப் பெருமைகளுக்குரிய நாட்டியப் பேரரசியின் பெயர் - பத்மா சுப்ரமணியம்!

'பாதமுனி பவுண்டேஷன்/ பார்/ ரசியன் கல்ச்சர்' அமைப்பிற்கான அடிக்கல் நாட்டு விழாவை மாமல்லபுரம் அருகே கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள பட்டிபுலம் கிராமத்தில் அமர்க்களமாக நடத்திக் காட்டியது தான் இவரின் அண்மைய சாதனை. இந்த சாதனையை முறியடிக்கும் வகையில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியால் எழுதப்பட்ட 'போர் வாளும் பூவிதழும்' என்ற நாட்டிய நாடகத்தை கோவையில் நடைபெற்ற உலக தமிழ் செம்மொழி மாநாட்டில் அரங்கேற்றி, உலகம் முழுவதும் விரவியுள்ள தமிழர்களின் மனதில், பரத கலைக்கான நிரந்தர அடையாளமாகவே பதிந்துவிட்ட இவரை ஒரு சாயங்கால வேளையில் சந்தித்து உரையாடினோம்.

**பரத நாட்டியத்தில் 'பத்மம்' என்கிற முத்திரை பிரபலமானதல்லவா... அதன் அடிப்படையில் தான் உங்கள் பெயர் அமைந்ததா?**

நான் படிக்கும் போது எனது பாட்டியார் ஜெயதேவர் சரிதம் படித்துக் கொண்டிருந்தாராம்... ஜெயதேவரின் மனைவி பத்மா, மிகப்பெரிய நாட்டியதாரகை. அது மாதிரி எதிர்காலத்தில் நானும் காலில் சலங்கை கட்டிக் கொண்டு ஆடுவேன் என்று நினைத்துத்தான் எனக்கும் பத்மா என்கிற நாமஹரணம் சூட்டியிருக்கிறார்கள். தாமரை மலருக்குக் கூட சமஸ்கிருத மொழியில் பத்மம் என்று தான் பெயர்.

**உங்கள் குடும்பப் பின்னணியை பற்றி கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்?**

தமிழ்த் திரை உலக பிதாமகன் கே. சுப்ரமணியம் என் தந்தை - அவர் கும்பகோணத்தில் பிறந்து. சட்டம் பயின்றாலும், கலை மீது கொண்ட தீராத தாகத்தால் சட்டத்தரணி ஆகாமல், மெலட்டூர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோதண்ட ராமய்யரை குருவாகக் கொண்டு, 'பாகவதமேளம்' நடனத்தை முறையாக பயின்றிருக்கிறார். நாதஸ்வரம் வாசிப்பதில் தனி ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் அத் துறையில் ஆர்வம் செலுத்தவில்லை. அதற்கு பதிலாக நாதஸ்வர வித்வான்களுக்கென ஒரு அஸோசியேஷன் அமைத்து, பதினாறு வருஷம் அதன் தலைவராக இருந்திருக்கிறார்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன், தேச பக்தியை பிரதானமாகக் கொண்ட தமிழ் திரைப்படங்களை மிகத் துணிச்சலுடன் தயாரித்து, இயக்கி, தடையை மீறி தானே அவற்றை வெளியிடவும் செய்தார். தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை துவக்கப்பட அதன் முக்கிய காரண கார்த்தா அப்பா தான்.

1942 இல் 'நிருத்தோதயா' என்கிற நடனப்பள்ளியை நிறுவி, எம்.ஜி.ஆர், ஜானகி, லலிதா, பத்மினி, ராகினி, ஈ.வி.சரோஜா, ராஜ சுலோச்சனா, சந்திரபாபு உள்பட பலர் அதில் ஈடுபடச்செய்தார். நாட்டியத்தில் ஆர்வம் மிக்க, இயலாத வீட்டுக் குழந்தைகளுக்கு, இலவசமாக நடனம் கற்றுத்தர வேண்டும் என்பதை கொள்கையாகக் கொண்டிருந்தார். 1971இல் அவர் இறக்கும் போது கூட இதை நினைவுபடுத்திய பின்னர் தான் கண் மூடினார் என்றார் பார்த்துக் கொள்ளுங்கள்.

அதுபோல் தாயார் - மீனாட்சி சுப்ரமணியன், தமிழ் சினிமாவுக்கு இசையமைத்த முதல் பெண்மணி. கூட்டு குடும்பத்தில் இருந்து கொண்டு, இன்னொரு பக்கம் ஆர்மோனியம், பாட்டு, வீணை, வயலின், பூஜை, விரதம், தவிர சுமார் நானூறு கீர்த்தனைகள் எழுதி, மெட்டும் அமைத்தவர்.

**நடனக்கலையில் உங்களுக்கு எப்படி இத்தனை ஈடுபாடு வந்தது?**

5 வயதிலேயே என்னை என் தகப்பனார் மடியில் உட்கார வைத்து பி.பி.சி. நியூஸ் கேட்க வைப்பார். வழுவூர் ராமையா பிள்ளை தானாக முன் வந்து எனக்கு நடனம் கற்பித்தார். ஏழு வயதிலேயே முதல் மேடை நிகழ்ச்சி. 11வது வயதில் நடன அரங்கேற்றம். சலங்கை பூஜை செய்து, முதன்முதலில் என் கால்களில் சலங்கை கட்டிவிட்டது பத்மினியின் தாயார் தான். கட்டிய சலங்கை, பத்மினியின் ராசியான சலங்கை, அதுமட்டுமல்ல அரங்கேற்றத்தின் போது நேரில் வந்து வாழ்த்திப் பேசியவர்கள் எல்லாம் யார் தெரியுமா... செட்டிநாடு அரசர், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், எம்.கே.தியாகராஜ பாகவதர், திருவாவடுதுறை ராஜரத்னம் பிள்ளை, நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோர்.

சில ஆண்டுகள் கழித்து குரு தண்டாயுதபாணி பிள்ளை மற்றும் மயிலை கௌரி அம்மாள் ஆகியோரிடம் பரதம் பயின்றேன். 13 வயதிலேயே குழந்தை மாநாட்டில் திடீரென என்னை பேச வைத்து தைரியத்தையும், தன்னம்பிக்கையும் வளர்த்தவர் என் தந்தை.

செயின்ட் தொமஸ் கான்வென்ட்டில் மெட்ரிகுலேஷன் முடித்துவிட்டு, எத்திராஜ் கல்லூரியில் பி.யு.சி.க்குப் பின் மருத்துவ படிப்பு படிக்க வேண்டும் என்ற கனவு மேலோங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. எத்தனையோ டொக்டர்களை உருவாக்கிட முடியும். ஆனால் உன்னை மாதிரி ஒரு நல்ல டான்ஸரை உருவாக்க முடியுமா?! என்று அன்றைய கல்வி அமைச்சரான சி.சுப்பிரமணியம் அவர்கள் எனக்கு ஆலோசனை சொன்னது, என்னை சிந்திக்க வைத்தது. பின் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் மியூசிக் பி.ஏ. படித்துக் கொண்டே ஆர்கியோலாஜிஸ்ட் டொக்டர் ராமசந்திரனுடன் ஆராய்ச்சிகளை மேற்கொண்டேன். சென்னை பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. முடித்த சமயம், அண்ணாமலை பல்கலைகழக துணை வேந்தராக இருந்த சர்.சி.பி. ராமசாமி ஐயரின் அறிவுரைப்படி சிதம்பரத்தில் கலாநிதி பட்டத்துக்கான ஆய்வை மேற்கொண்டேன். கோவில் சிற்பங்களில் காணப்படும் 108 கரணங்களைப் பற்றிய ஆராய்ச்சி தான் அது.

**கரணம் என்றால் என்ன... அதை விளக்குங்கள்?**

உடலுக்கான நிலை, கைகளுக்கான நடன அசைவு, கால்களுக்கான அசைவு - இம்மூன்றின் சேர்க்கையே 'கரணம்' என்று நாட்டிய சாஸ்திரத்தில் பாதமுனி குறிப்பிட்டுள்ளார்.

11ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் ராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலில் 81 கரணங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கரணங்கள் செதுக்குவதற்காக வெற்றிடமாக விடப்பட்ட கற்களைக் காணும் போது - மன்னனின் நிறைவேறாத ஆசையின் ஏக்கம் அதில் தெரிகிறது. 12ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட கரண சிற்பங்கள், கும்பகோணம் சாரங்கபாணி ஆலயத்தின் கிழக்கு கோபுரத்தில் காணப்படுகிறது. 13ஆம் நூற்றாண்டை சேர்ந்த 108 கரண சிற்பங்களுடன், முழுமையாக செதுக்கப்பட்டுள்ளதை சிதம்பரத்தில் நடராஜர் ஆலயத்தில் நான்கு கோபுரங்களிலும் பார்க்கலாம்.

**ஆயிரக்கணக்கான சிற்பங்களுள் கரண சிற்பங்களை எப்படிக் கண்டறிவது?**

கரணங்களை லலிதமானவை. நுண்ணிய விடயங்களைக் கொண்டவை. நடனத்தின் அத்தனை அழகு அம்சங்களும் அதனுள் அடக்கம். தாண்டவம், லாஸ்யம் ஆகிய இரு முறையில் கையாளக்கூடியவை. கரண சிற்பங்களில் காணப்படும் நிலைகளை அப்படியே தங்களது நாட்டியத்தில் புகுத்திக் கொண்டால் - ஸ்டில்ஸ் மாதிரி அழகு ஏதேனும் ஒரு நிலைமை மட்டும் சித்தரிக்குமே தவிர, அதுவே கரணமாகாது. நாட்டிய சாஸ்திரத்தையும், அதற்கு எழுதப்பட்ட உரையாகிய அபிநய பாரதியையும் நன்கு புரிந்து படித்து தேர்ந்தால் மட்டுமே கரணம் சாத்தியமாகும்.

நடைமுறையில் தற்போது காணப்படும் அடவுகளோடு இதை ஒப்பிடலாம். அதாவது அடவுகள் எவ்வாறு அசைவுகளைக் குறிக்கிறதோ அதேபோல் பரதமுனியின் கரணங்களும் அசைவுகளையே குறிக்கும். சிற்ப வடிவில் சித்தரிக்கப்படும் இவை, கடந்த 500 ஆண்டுகளாக நடைமுறையில் இல்லாதிருக்கின்றன. இதை இப்போது ஆராய்ந்து அதன்படி ஆடுவதென்பது பின்நோக்கிச் செல்லும் பிற்போக்கான செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*இப்போது எல்லாவற்றிலும் நாம் எவ்வளவு அட்வான்ஸ்ட் ஆகிவிட்டோம். என்று சிலர் நினைக்ககூடும். 'ரிபைன்மெண்ட்' என்பது காலத்தின் அடிப்படையால் உண்டாவதில்லை. ஒரு கலையானது மேலும் தூய்மை ஆவதற்குப்பதில் மாசுபடவும் முடியும் என்பதற்கு இன்றைக்கு பல உதாரணங்களை கண்கூடாக பார்க்கிறோம். ஒரு 30, 40. வருஷங்களுக்கு முன்பு நாம் படித்து பார்த்த, சுவைத்த, ரசித்த, பேசிய, அழகு தமிழையும், கொஞ்சும் தமிழையும் இப்போது நம் சினிமாக்களிலும், பாடங்களிலும், கதைகளிலும், கருத்திலும், காட்சியிலும் நாம் ரசிக்கிறோம்? 14ம் நூற்றாண்டுக்குப் பிறகு, அந்நியர் படையெடுப்பு காரணமாக உச்ச கட்டத்திலிருந்த நமது புராதன கலைகள், பண்பாடு, கலாச்சாரம் எல்லாமே இறங்கி வரத்துவங்கிவிட்டன. ஆக பரதக்கலையை புராதன மேன்மைக்கு உயர்த்த - நாட்டியம் சம்பந்தப்பட்ட நூல்களை எல்லாம் தேடிப்பிடித்து, காலத்தால் கைவிடப்பட்ட 108 காரணங்களைக் கண்டறிந்து, அதை நடனத்தில் பயன்படுத்தும் போது புதுப்புது அர்த்தங்கள் கிடைக்கின்றன.*

**'டாக்டர்' பட்டத்திற்காக நீங்கள் எடுத்துக்கொண்ட ஆய்வே கரண சிற்பங்கள் தானா?**

*நாட்டியத்தில் 200 ஆண்டுகளாக கையாளப்படும் உத்திகளே, அதாவது அலாரிப்பு முதல் தில்லானா வரை நடன நிகழ்ச்சியில் திரும்பத் திரும்ப பயன்படுத்தப்பட்டு புத்துயிர் பெற்றன. கோவில்களில் காணப்படும் கரண சிற்பங்கள் என்னை புதிய கோணத்தில் சிந்திக்கச் செய்தன. மரபு என்று ஒன்று இருந்ததினால் தான் அது அப்படியே சிற்பவடிவில், செதுக்கப்பட்டுள்ளன என்பது போன்ற எண்ணங்களே என்னை கரணங்கள் குறித்த ஆராய்ச்சிகளில் இறங்க வைத்தன.*

**நீங்கள் ஆராய்ந்து கண்டறிந்த கோவில் சிற்ப அசைவுகளைக் கொண்டு தான் உங்களது 'மீனாட்சி கல்யாணம்' நாட்டிய நடனம் அமைந்ததாகச் சொல்லலாமா?**

*மரபுக்கும், செய்முறைக்கும் இடையே புதுப்பாலமாக அமையப் பெற்றது என் 'மீனாட்சி கல்யாணம்' என்றால் அது மிகையே இல்லை. இதற்கு நான் 'கொரியோகிராப்' பண்ணியபோது என் வயது என்ன தெரியுமா? பதினேழு தான். என் நடனத்தில் தரமும், என் அண்ணி சியாமளா பாலகிருஷ்ணனின் இசைத் தரமும் ஒன்றையொன்று மிஞ்சும். அண்ணி சியாமளாவின் தாயார் சௌந்தரம், இசை மாமேதை அரியக்குடியின் நேரடி சிஷ்யை, நாட்டுப்புற பாடல்கள் தொகுப்பில் இவரது பங்களிப்பு அளப்பரியது. அது போல் தான் 'விராலிலை குறவஞ்சியும்'. எப்போதெல்லாம், எங்கெல்லாம் புதுப்புது ஐடியாக்கள், ராகங்கள், வரிகள் மனதில் தோன்றுகிறதோ - உடனே டேப்ரிக்கார்டரில் அவற்றை பதிவு பண்ணி, சியாமளா அண்ணியிடம் கொடுத்துவிடுவேன். தோசைக்கு மாவு அரைத்துக் கொண்டே, அதை போட்டுக் கேட்டுக்கேட்டு மெருகேற்றி விடுவார் அவர். வயலின், மிருதங்கத்துடன் ஒரு ஒத்திகை அவ்வளவு தான். பின் நேராக அகாதெமியோ, பவன்னோ அல்லது நாரத கான சபாவோ - எனது படைப்புகள் படுநேர்த்தியாக அரங்கேறும். அந்த வகையில் பெரும்பாலும் பண்டிதர்களே ருசித்து வந்த பரதக்கலையை - பாமரரும் பார்த்து புரிந்து கொண்டு ரசிப்பதில் எனக்கும் பங்குண்டு!*

**உங்கள் படைப்புக்களில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான தயாரிப்புக்கள் என எதை எல்லாம் சொல்லலாம்?**

*எனது ஸோலோ நடனமான 'கம்பராமாயணம்' எத்தனை முறை பார்த்தாலும் அலுக்கவில்லை என்பார்கள். கம்பனின் ஒவ்வொரு கதாபாத்திரத்திலும் கவிநயம் பிரதிபலிக்கும் - சம தர்ம சமுதாயம், தாடகை வதம், அகலியை சாப விமோசனம், மிதிலைக் காட்சி, கார்முகப்படலம், சுயம்வரம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், அக்னிப் பிரவேசம், இப்படி அந்த 'பாலே'யில் பல சுவாரஸியங்கள், அது மாதிரி தான் 'கிருஷ்ணாய துவியம் நம'' பல்வேறு கதாபாத்திரங்கள், எண்ணற்ற பாவங்கள்.. 'ராமாயதுய்ய நம', 'ஜய ஜயசங்கரா', 'பக்த மீரா', 'ஸ்ரீதியாகராஜர்', 'திருக்குறள்', 'தேவாரம்', 'திருவாசகம்', 'திவ்யப்பிரபந்தம்', 'சிலப்பதிகாரம்', 'கலித்தொகை', 'குறுந்தொகை', 'பரிபாடல்', 'பகவத்கீதை', 'வள்ளி திருமணம்', 'ரவீந்திரநாத்தாகூர்', 'மகாகவிபாரதி', 'ஜடாயு மோட்சம்', 'குற்றாலக்குறவஞ்சி', இப்படி எத்தனையோ எத்தனையோ இருக்கு.. என் நிகழ்ச்சிகளுக்கு ஜெனரேஷன் கேப் இல்லாமல் அனைத்து வயதினரும் வந்து பார்த்து ரசிப்பதை பார்க்க முடியும்.*

**பிற மாநிலத்தவர் அல்லது பிற பாணிகளை பின்பற்றும் இளம் நடனமணிகள் உங்களிடம் வந்து நாட்டியத்தை மேலும் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகள் உண்டா?**

*மொழி, இனம், மதம் வேறுபாட்டால் உலகம் இன்றைக்கு குறுகிவிட்ட காலத்திலும், ஒவ்வொரு ஆண்டும் உலகின் எங்காவது ஒரு இடத்தில் பாரபட்சமற்ற குருகுலப்பாணியில்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'பாரதீய நாட்டிய சாஸ்திர சிக்ஷா முகாம்' களை நடத்தி வருகிறேன். இதில் வெளியூர், வெளி மாநிலம், வெளி நாடு இவைகளில் இருந்தெல்லாம், பங்கேற்றுவரும் பலதரப்பட்ட நடன மாணவிகளுக்கான 'வொர்க் ஷாப்' இது. கலைக்கு ஒரே மாதிரி உணர்ச்சி மொழி தான் என்பதால் இங்கே மொழிப் பிரச்சினைக்கு இடம் இல்லை. ஒரே மாதத்தில் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள முடியாது.

ஆனாலும் அனைத்து ஸ்டைல்கள் பற்றிய ஒற்றுமையில் வேற்றுமைகளையும், பரதத்தின் நுணுக்கங்களையும், ஆழமாய் அறிந்து, புதியவற்றை ரசிக்கும் மனோபாவத்தையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெறலாம்.

**அண்மையில் கோவையில் நடைபெற்ற உலக தமிழ் செம்மொழி மாநாட்டில் தமிழுணர்வு ஓங்கிய 'போர் வாளும், பூவிதழும்' என்ற நாட்டிய நிகழ்ச்சியை அரங்கேற்றியிருந்தீர்களே.. அதன் பின்னணி என்ன?**

உலகம் முழுவதும் விரவியுள்ள தமிழர்களையும், அவர்களின் உயிர்மூச்சான தமிழ் மொழியையும் எல்லாக் காலத்திலும் உயிர்த்துடிப்புடன் வைத்துக்கொள்வதற்காக தமிழக முதல்வர் கலைஞரய்யாவால் கூட்டப்பட்ட மாநாடு. அந்த மாநாட்டில் தமிழர்களின் கலாசாரச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் பரத நாட்டியக் கலையை, அதன் தொன்மையோடும், புத்துணர்வோடும் வழங்க வேண்டிய பொறுப்பு, எம்மைப் போன்ற பரதத்தை மூச்சாக சுவாசிக்கும் கலைஞர்களுக்கு உள்ளது.

இதனையறிந்த நான், தமிழக முதல்வர் எழுதிய 'போர் வாளும் பூவிதழும்' என்ற ஓரங்க நாடகத்தை எடுத்து நாட்டிய நாடகமாக்க எண்ணினேன். இது குறித்து முதல்வரிடம் அனுமதியைக் கேட்டபோது, மனமுவந்து வழங்கினார். அந்த ஓரங்க நாடகத்தில் போர்வாள் பெரிதா? அல்லது பூவிதழ் பெரிதா? என்ற வினாவை எழுப்பி, இவ்விரண்டையும் விட, அவனை எதிர்நோக்கியிருக்கும் கடமை தான் பெரிது என்ற பொருள் விளங்க நாட்டிய நாடகத்தை அமைத்தோம். இந்த நாட்டிய நாடகத்தில் சங்க காலத்தில் பல புலவர்கள் எழுதிய நுட்பமான உணர்வைக் கொண்ட பாடல்களுக்கு நாட்டியம் அமைப்பது தான் சவாலாக இருந்தது. ஆனால் எம்முடைய குழுவினர் அந்த சவாலை திறமையாக கையாண்டு, நாட்டிய நாடகத்தை அரங்கேற்றியதை, தமிழக முதல்வர் உள்ளிட்ட வந்திருந்த அனைத்துலக தமிழ் உணர்வாளர்களும் பாராட்டிய போது உள்ளபடியே மகிழ்ச்சியடைந்தேன். இதே நாட்டிய நாடகத்தை விரைவில் இந்திய மத்திய அரசின் அமைச்சர் திரு.ஜெகத்ரட்சகன் தலைமையிலான ஆழ்வார் மையத்தின் சார்பிலும் நடைபெற்றது.அதிலும் தமிழக முதல்வர் கலைஞர் கலந்துகொண்டு எங்களை வாழ்த்தியது மறக்கமுடியாது.

**புதிதாக பரதம் கற்றுக் கொள்ள விரும்பும் இளைய தலைமுறையினருக்கு நீங்க சொல்ல விரும்புவது என்ன?**

எந்த ஒரு முயற்சியிலும் முழு ஈடுபாட்டுடன் பங்கெடுத்துக் கொள்வது முக்கியம். இதுவே எமக்கான அங்கீகாரத்தைப் பெற்றுத்தரும். சரீரத்தை பழக்குவது, அடுத்து இன்டலச்சுவல் என்கிற அறிவுபூர்வமான அணுகுமுறை வகுப்பு. அதற்கடுத்தாற்போல் எமொஷனல் இன்வால்மெண்ட் என்கிற உணர்வு பூர்வமான தன்மயமான நிலை, அதையும் தாண்டி ஸ்பிரிச்சுவல் லெவல் என்கிற ஆத்மானுபவமான நிலை, பரத நாட்டியத்தை கற்றுக்கொள்ள தேவையான இவை, ஆரம்பத்தில் எடுத்ததுமே வந்துவிடாது. இலக்கணத்துக்கும், செயல்முறைக்கும் இடையில் பாலமாக இருக்கப்பிரியப்படும் நான் - இன்றைக்கும் நாட்டியத்தில் ஒரு மாணவி தான்.

நான் வாங்கிய விருதுகள், பட்டங்கள் எல்லாமே என் முன்னோர்க்கும், கர்ம சிரத்தையா இத்தனை தூரம் போதிச்சு வளர்த்த குருக்களுக்கும் சேர வேண்டியது. அதன் குறியீடாக என்னை நினைக்கிறதால எனக்குத் தர்றாங்க போலிருக்கு என்று தான் ஒவ்வொரு முறையும் பாவித்துக்கொள்வேன். ஒவ்வொரு முயற்சியிலும் ஆத்மதிருப்தி முக்கியம் அதுவே குறிக்கோள். அதுவே சாதனை!

பத்மா சுப்ரமணியத்திடம் பேசிவிட்டு வந்த பிறகு ஆயின சிற்பியின் குடிலுக்குள் சென்று கல்கியின் சிவகாமியையே தரிசித்து வந்த நிறைவு. கலைத் தெய்வத்தின் அருள் பெற்ற இவரது சேவையால் நம்நாட்டில் கலாச்சாரம், பண்பாடு மங்காமல், மறையாமல், எதிர் காலத்து சந்ததியினருக்கு போய்ச் சேரும் என்கிற நம்பிக்கையோடு வெளிவந்தேன்.

ஆம்... எங்கோ மரத்தைக் கொத்தும் மரங்கொத்திப் பறவையின் ஓசை கூட 'நிருத்யோதயா' வில் பத்மா சுப்ரமணியத்தின் தூவிக்கட்டை போல் ஒலிக்கிறது. உண்மை தான். உலகில் உள்ள ஒலி, ஓசை, சப்தம் அத்தனையும் சேர்ந்து லயமாக மாறுகிற ரஸவாத வித்தை அது. இதை அனுபவித்தவர்களுக்குத்தான் இதன் மகிமை தெரியும்!

**சர்ச்சில் பாண்டியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

log on to spiceJet.com

+94114732475

# சென்னைக்கு விமானப் பயணமா? இந்தியாவின் 1[*] முதல்தர குறைந்த கட்டண விமான சேவை மூலம் பயணம் செய்யுங்கள் சிக்கனமான செலவு ரூ.2399[+] லிருந்து

இப்போது ஸ்பைஸ்ஜெட் மூலம் கொழும்பிலிருந்து சென்னைக்கு தினசரி விமானப் பயணம். நம்பவே முடியாத மிகக் குறைந்த கட்டணம். புத்தம்புதிய 22 போயிங் 737 விமானங்கள் மூலம் இந்தியாவின் 20 நகரங்களுக்கான 149 தினசரி விமான சேவைகள். ஒவ்வொன்றும் குதூகலம் நிறைந்தது. மேலதிகமாக சென்னையிலிருந்து இந்தியாவினுள் 8 இணைப்புச் சேவைகள். மற்றவர்கள் முந்திக்கொள்ள முன்னர் இப்போதே பதிவுசெய்து மிகவும் விரும்பப்படும் இந்தியாவின் விமான சேவையில்# பயணம் செய்யுங்கள்.

| இடம் | புறப்படுதல் | வந்தடைதல் |
|---|---|---|
| கொழும்பு - சென்னை | 0315 மணி | 0435 மணி |
| சென்னை - கொழும்பு | 0045 மணி | 0215 மணி |




ஒக்டோபர் 09ஆந் திகதி 0315க்கு பயணங்கள் ஆரம்பம்.
பதிவுகள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படும்.

சென்னையில் இருந்து மேலும் 8 இணைப்பு சேவைகள்

- கொடுக்கும் பணத்திற்கு பெறுமதியான உணவு
- கவர்ச்சியான மீள்வருகைக் கட்டணம்
- முன்பதிவில் சேமிப்பு
- தினமும் 149க்கும் அதிகமான பயணங்கள்
- புத்தம்புதிய போயிங் 737 விமானங்கள்

100968

முகவரி: 140A, வொக்ஸோல் வீதி, கொழும்பு 02.

*இந்துஸ்தான் டைம்ஸின் 2009 MaRS மதிப்பீடு,
அடிக்கடி பயணம் செய்வோர் மத்தியில் அவுட்லுக் 2010 வருடாந்த பிரயாணிகள் மதிப்பீடு
+பிரயாண புறப்பட்டுக் கட்டணம் ரூபா 1500 மேலதிகம்
#இந்திய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் DGCA புள்ளிவிபரத்தின் அடிப்படையில் விமானப்பயண நேரங்களும் அட்டவணையும் ஒழுங்கமைப்பு அங்கீகாரத்திற்கும் மாற்றத்திற்கும் உட்பட்டவை.
இலங்கையின் நேரங்களும் இதிலடங்கும்.

GET MORE WHEN YOU FLY spiceJet flying for everyone

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேற்றுமையில் ஒற்றுமை காணும் வேளாங்கண்ணித் திருத்தலம்

வேளாங்கண்ணி சிற்றூரில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க மரியன்னையின் திருத்தலம் ஏழை நாடுகளின் லூர்து நகர் என்று அழைக்கப்படுகின்றது. பலரது வாழ்க்கையில் இருளை நீக்கி ஒளியைத் தந்திருக்கும் அன்னையின் இல்லத்திற்கு வெளிநாடுகளில் இருந்தும் அயல்நாடுகளில் இருந்தும் வருகை தந்து அருட்பேற்றையும் நலன்களையும் அன்னையின் பக்தர்கள் பெற்றுச் செல்கின்றார்கள். பல்வேறு சமயங்களைப் பின்பற்றுவோர் சாதி சமய வேறுபாடின்றி மரியன்னையின் திருத்தலத்திற்கு தொடர்ந்து வந்து தங்களுடைய வழிபாட்டு வேறுபாடுகளைக் களைந்து ஒரே குடும்பமாகக் கூடிவேண்டுவது வேற்றுமையில் ஒற்றுமைக்கும் சமய நல்லிணக்கத்திற்கும் இலக்கணமாக அமைகின்றது.

ஆண்டாண்டுகளாய் அன்னை கன்னிமரியாள் தேர்ந்தெடுத்த கிராமந்தான் வேளாண்கன்னி. ஒருகாலத்தில் யாரும் அறியாத சிறு கிராமமாக இருந்தாலும், அன்னை காட்சிதந்த வரலாற்றுத் தடயங்கள் எல்லாம் சேர்ந்து வேளாங்கண்ணிக்கு பெருமையையும் மகிமையையும் சேர்க்கின்றன.

துறைமுக நகரமாகிய நாகபட்டினத்திற்குத் தெற்கே பத்துக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது வேளாங்கண்ணி மாதாவின் திருத்தல வளாகம். அக்காலகட்டத்தில் வேளாங்கண்ணி ரோம் நகரோடும் கிரேக்க நாட்டோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததற்கான பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. எனினும் காலப்போக்கில் நாகபட்டினம் வணிக நகராகத் திகழ்ந்தது. வேளாங்கண்ணி அதன் வாணிபத் பெருமையை இழந்து, அன்னையின் அருளாட்சியைப் பெற்றது. நாகபட்டினத்திற்கும் வேளாங்கண்ணிக்கும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் கப்பல் தொழிலுக்குத் தோண்டப்பட்ட கால்வாய்கள் வேளாங்கண்ணிக்கு மேற்காக, இன்றும் காணக்கூடியதாக அமைந்துள்ளன.

கடந்த 25 ஆண்டுகளில் வேளாங்கண்ணி கிராமம் அபிவிருத்தியடைந்து ஏறத்தாழ 12 ஆயிரம் மக்களைக் கொண்ட கிராமமாகத் திகழ்கின்றது. பலர் குடிபெயர்ந்து இங்கு வருவதால் மக்கள் தொகையின் எண்ணிக்கை பெருகி வருகின்றது. தபால் நிலையம், வங்கிகள், மருத்துவ வசதிகள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோர் இல்லம், ஊனமுற்றோர் நிலையம் போன்ற வசதிகளையும் கொண்டு நகரமாக விளங்குகின்றது.

வேளாங்கண்ணி மண்ணில் ஒருவர் கால் வைக்கும்போதே தன்னையும் அறியாமல் புனித இடத்தில் இருக்கின்றோம் என்ற உணர்வு ஏற்பட்டுவிடுகின்றது. பல்வேறு தொல்லைகளால் அல்லற்பட்டு அலைக்கழிக்கப்படும் மக்களுக்கு கலங்கரை விளக்காக ஆரோக்கிய அன்னை விளங்குகின்றார்..

லூர்து நகரிலும், பாத்திமா நகரிலும் இளைஞருக்குத்தான் மாதா காட்சியளித்து தனது பணிக்காக இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கிறார். மனித இனத்தை இன்னல்களிலிருந்து காப்பாற்றச் செய்வதுதான் அவர் தந்த பணி. உலக மக்களை மீட்கவும், அவர்கள் இறைவனை நோக்கி செபிக்கவும் நோன்பு நோற்கவும் மரியாள் வேண்டுகோள் விடுக்கின்றார்.



மரியாள் இயேசுவுக்கு மட்டும் தாயல்ல; உலக மக்கள் அனைவருக்கும் தாயாகின்றார். இந்தச் சிறப்புமிக்க தாய்மைப் பண்புதான் மக்கள் அனைவரையும் சீரோடும் சிறப்போடும் வாழவைக்கின்றது. அன்னையின் திருக்காட்சிகளை எண்ணிப் பார்ப்போமானால் அவர் காட்சியளிப்பதெல்லாம் வறுமையில் வாடுபவர்களுக்கும் கள்ளம்கபடம் இல்லாத நல்ல உள்ளம் படைத்த சிறுவர் சிறுமியர்களுக்கும் வாழ்வின் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கும் ஒதுக்கப்பட்டோருக்கும் உலகத்தை ஒருபொருட்டாய் மதியாதவர்களுக்கும் என்றே வரலாறு அமைந்துள்ளது.

லூர்து நகரிலும் பாத்திமா நகரிலும் நடந்தது போலவே வேளாங்கண்ணியிலும் இடையர் குல இளைஞர்களுக்கு காட்சியளிக்கின்றார். அன்னையின் திருக்காட்சிகளை வேளாங்கண்ணியில் பெற்றவர்கள் இந்து சமயத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னை வேளாங்கண்ணி தனது சிற்றூரில் காட்சியளித்ததற்கான சான்றுகளோ கல்வெட்டுகளோ செப்புப் பட்டயங்களோ கிடையாது. வழிவழியாக வந்த பாரம்பரியச் செய்திகள்தான் இன்றும் அன்னைமீது நம்பிக்கை வைக்கத்தூண்டி அன்னையை நாடித் தேடி ஓடத்தூண்டுகின்றன. அவற்றுக்கும் உறுதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரம்பரியத்தை கொண்டிருப்பவை மூன்று நிகழ்ச்சிகள். 1. இடையர் குலச் சிறுவனுக்கு காட்சி 2. மோர் விற்ற நொண்டிச் சிறுவனுக்கு காட்சி 3. புயலில் அடிபட்ட போத்துக்கேயக் கப்பல் மீண்டும் கரை சேர்ந்த நிகழ்ச்சி.

இவ்வாறு அருள்மழையால் பக்தர்களைப் பரவசப்படுத்தும் வேளாங்கண்ணி மாதாவின் கிராமம் ஒரு மீனவக் கிராமம் ஆகும். சிறுதொகையான விவசாயிகளும் தொழில் செய்கின்றார்கள். திருத்தலத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்வதையடுத்து கிராமமக்களின் பாரம்பரிய தொழில்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. கோவில் வளாகத்திற்கு வெளியெ சிறிய - பெரிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு பணம் ஈட்டிக் கொள்கிறார்கள். வேளாங்கண்ணிப் பங்கில் சுமார் 1000 கத்தோலிக்க குடும்பங்களைச் சேர்ந்த 5000 மக்கள் வசிக்கின்றார்கள். சுனாமியின் போது இக்கிராமத்தில் மட்டும் 2000 க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளார்கள்.

வேளாங்கண்ணி மாதாவை முப்பெரும் சக்தியாகக் கருதும் இந்து மக்கள், மாதாவுக்கு தமது நேர்த்திக் கடன்களை சைவ முறைப்படி செய்து அருள் பெற்றுச் செல்கிறார்கள். அதாவது மொட்டையடித்து வங்காளக் கடலில் தீர்த்தமாடிக்கடன் தீர்த்துக்கொள்கிறார்கள். நாளொன்றுக்கு சராசரியாக 300 க்கும் மேற்பட்டோர் மொட்டையடித்துச் செல்கின்றார்கள். அங்குள்ள விளம்பரப்பலகையில் ''இறக்கப்படும் தலை முடி மாதாவுக்குச் சொந்தமானது. யாரும் எடுத்துச் செல்ல முடியாது'' என குறிப்பிடப்பட்டுள்ளது.


இதைவிட அர்ச்சனைத் தட்டுப்பாரம்பரியமும் காணப்படுகின்றது. அர்ச்சனைத் தட்டில் தேங்காய், சந்தனக்குச்சி, மெழுகுவர்த்தி, பூமாலை போன்ற பொருட்கள் காணப்படும். மேலும் பிள்ளை வரம் வேண்டுவோர் கொடிமரத்தில் தொட்டில்கட்டுவதும், திருமணம் நல்லபடியாக நிறைவேற வேண்டும் என்று வேண்டுவோர் மஞ்சள் கயிறு கட்டி வழிபடுவதும் இங்கு வழமை. வேளாங்கண்ணி அன்னை வேண்டுவதெல்லாம் மதம் இல்லை; சிறந்த மனமே என்பது இங்கு வெளிப்படை.




தமிழகம் மற்றும் இந்தியாவின் சகல பகுதிகளில் இருந்தும் வேளாங்கண்ணி திருத்தலத்துக்கு பேரூந்து, மற்றும் புகையிரத வசதிகள் சௌகரியமாகக் கிடைக்கின்றன. புகையிரதத்தில் செல்வோர் நாகபட்டினம் புகையிரத நிலையத்தில் இறங்கி, மீதி சிறிய தூரத்தை முச்சக்கரவண்டியிலோ பேரூந்திலோ பயணிக்கலாம். விமானம் மூலம் பயணம் செய்வோர் திருச்சிவிமான நிலையம்சென்று அங்கிருந்து பஸ் அல்லது புகையிரதம் மூலம்பயணிக்கலாம்.

- ஜோன்சன் பஸ்ரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# உமாயூனின் சமாதி

உமாயூனின் சமாதி என்பது முகலாயப் பேரரசர்களின் சமாதிக் கட்டிடம் ஆகும். இது உண்மையில் பல கட்டிடங்களை உள்ளடக்கிய ஒரு தொகுதியாக உள்ளது. இது டில்லியில் புராணாகிலா என்ற நகருக்கு அண்மையில் அமைந்துள்ளது. கிபி 1562 ஆம் ஆண்டில் உமாயூனின் மனைவியான அமீதா பானு பேகம் இதனைக் கட்டுவித்தார்.

முகலாயப் பேரரசு உச்ச நிலையில் இருக்கும்பொழுது, இந்தியாவின் பெரும் பகுதியையும், ஆப்கானிஸ்தானின் ஒரு பகுதி, பாகிஸ்தான் என்பவற்றையும் உள்ளடக்கிய பேரரசாக இருந்தது. கிபி 1526 தொடக்கம் 1712 வரையான காலப்பகுதியில் இந்த அரசு நிலைபெற்றிருந்தது. முகல் என்பது முங்கோலியர் என்பதன் பாரசீக மொழிச் சொல்லாகும். முகலாயர் இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்தவர்கள்.

உமாயூனின் கட்டிடத் தொகுதியில் பேரரசர் உமாயூனின் சமாதிக் கட்டிடத்தையும் இங்கேயே அவரது மனைவியான அமீதா பேகம், பேரரசரான ஜாசகானின் மகன் தாரா சிக்கோ ஆகியோரதும் பேரரசர் சகாந்தர் சா, பருக்சியார், உல்-தார்சத், உல்-தௌலத், இரண்டாம் ஆலம்கீர் போன்ற பல முகலாயர்களதும் சமாதிகளும் உள்ளன.

உமாயூனின் வளாகத்திலுள்ள கட்டிடங்களும் இதனோடிணைந்த பூங்காவும் பாரசீகப் பாணியில் அமைந்துள்ளன. இந்தியாவில் எப்போதும் உருவாக்கப்படாத அல்லது காணப்படாத வகையில் அமைந்ததோடு, பிற்கால முகலாயக் கட்டிடங்களுக்கு மாதிரியாகவும் அமைந்துள்ளன. சமாதிக் கட்டிடத்தை பூங்காவில் அமைக்கும் வழக்கம் முதல் முகலாயப் பேரரசரும் உமாயூனின் தந்தையுமான பாபரின் சமாதியிலேயே ஆரம்பமானது. பாக்-இ பாபர் எனப்படும் பாபரின் சமாதி, ஆப்கானிஸ்தானின் காபுலில் அமைந்துள்ளது. எனினும் உமாயூனின் சமாதிக் கட்டிடம் அவரது தந்தை பாபரின் அடக்கமான அளவையுடைய சமாதிக் கட்டிடத்திலிருந்து பெருமளவுக்கு வேறுபட்டுக் காணப்படுகிறது.


உமாயூன் சமாதி கட்டப்பட்ட நிலம் யமுனை ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. முகலாய அரசர்களால் மதிக்கப்பட்டவரும், மிகவும் பெயர் பெற்றவருமான நிசாமுத்தீன் ஔலியா எனப்படும் சூபி குருவின் சமாதிக் கட்டிடமான நிசாமுத்தீன் தர்காவுக்கு அருகில் இந்நிலம் இருந்ததால் தெரிவு செய்யப்பட்டது. இக்குருவின் தங்குமிடமும் அருகிலேயே இருந்தது. இந்த நிலம், ஆரம்பத்தில் நஸ்ருத்தீனின் மகனான சுல்தான் கெக்குபாத்தின் தலைமையிடமான கிலோக்கேரி கோட்டையைச் சேர்ந்ததாக இருந்தது. 1556 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி உமாயூன் மறைந்த பின்னர் அவரது உடல் டெல்லியில் உள்ள அவரது அரண்மனையிலேயே அடக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டைப்பட விளக்கம்:**

சேர் சா சூரி, சூர் வம்சத்தின் முதலாவது அரசராவார். இவர் 1540 முதல் 1545 இல் தாம் இறக்கும் வரையில் வட இந்தியாவின் பெரும்பகுதிகளை ஆண்டார். 1539 ஆண்டு முகலாய அரசர் உமாயூனை சாவ்சா போர்க்களத்தில் தோற்கடித்தவராவார். இவர் வெளியிட்ட 'ருபய்யா' என்னும் வெள்ளி நாணயம் பிற்காலத்தில் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பயன்படுத்தப்படும் ரூபாய் என்னும் பணத்திற்கு முன்னோடியாகும்.

உமாயூன் சமாதி கட்டிடம் இருக்கும் வளாகம் சுமார் 30 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்புகளைக் கொண்டதாகும். இந்த வளாகத்தில் சமாதிகள் பல காணப்படுகின்றன. முகலாயப் பேரரசின் ஆட்சிக்காலத்தின் போது பேரரசர்கள், பட்டத்தரசிகள், தளபதிகள், மந்திரிகள் போன்றவர்களின் சமாதிகளும் இங்கு காணப்படுகின்றன. உமாயூன் சமாதி வளாகத்தில் பிரதான சமாதிக்கு செல்லும் வாசலில் முகலாய கட்டிடக்கலையை பிரதிபலிக்கும் சேர் சா சூரியின் சமாதி



காணப்படுகின்றது. இசாகான் நியாசி சமாதி என அழைக்கப்படும் இச்சமாதி 1547-1548இல் கட்டப்பட்டதாகும்.

வளைவு அமைப்புக்களினால் தாங்கப்படுவதுமான பரந்த தாங்கு மேடை ஒன்றின்மீது அமைக்கப்பட்டுள்ளது. அடிப்படையில் கட்டிடம் அறுகோண தள வடிவம் கொண்டது.

செய்யப்பட்டது. பின்னர் 1558 இல் காஞ்சர் பெக்கினால் இவ்வுடல் பஞ்சாபில் உள்ள சிர்கிந்த் என்னும் இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. உமாயூனின் அரசியான அமீதா பானு பேகம் 1652 ஆம் ஆண்டில் டெல்லியில் புதிய சமாதிக் கட்டிடத்தைக் கட்ட உத்தரவிட்டார். இதனைக் கட்டுவதற்கு அக்காலத்தில் 15 இலட்சம் ரூபாவுக்குச் சமமான தொகை செலவானதாகத் தெரிகிறது. அக்பர் காலத்தில் எழுதப்பட்ட 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விரிவான ஆவணம் ஒன்றின்படி, ஹாஜி பேகம் என்பவர், உமாயூனின் தாயின் சகோதரரின் மகனாவார். இவர் பின்னர் உமாயூனின் சமாதிக் கட்டிடத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

மிகச்சில சமகால வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான அப்த் அல்-காதிர் பதாவுனி என்பவர் இதன் கட்டுமானம் பற்றிய குறிப்புக்களைத் தந்துள்ளார். இவரது கூற்றுப்படி இதனைக் கட்டிய கட்டிடக்கலைஞர் மிரா மிர்சா கியாசு என்பவராவர். வட மேற்கு ஆப்கானிஸ்த்தானில் உள்ள ஏரத் என்னும் இடத்தைச் சேர்ந்தவர். ஏரத்திலும், இன்றைய உஸ்பெக்கிஸ்த்தானில் உள்ள புக்காராவிலும், இந்தியாவின் பிற இடங்களிலும் பல கட்டிடங்களை இவர் வடிவமைத்துள்ளார். ஆனால் உமாயூன் சமாதிக் கட்டிடம் முற்றுப்பெற முன்னரே இவர் இறந்து விட்டதனால், இவரது மகன் சையத் முகம்மத் இபின் மிராக் கியாத்துட்டீன் கட்டிடத்தைத் தனது தந்தையின் சிந்தனையின்படி 1571 ஆம் ஆண்டில் கட்டி முடித்தார்.

1611 ஆம் ஆண்டில் இச் சமாதிக்குச் சென்ற ஒரு ஆங்கிலேய வணிகரான வில்லியம் பின்ச் என்பவர் இதன் மைய அறையின் உட்பகுதி குறித்த விபரங்களைத் தந்துள்ளார். அங்கே விலையுயர்ந்த கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன என்பது பற்றியும், தூய வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்ட கூடாரம் ஒன்று அங்கு இருந்ததாகவும், புனித நூல்களும் உமாயூனின் வாள், தலைப்பாகை, காலணிகள் என்பன அங்கே வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் தகவல் தந்துள்ளார்.

உமாயூன் சமாதி கண்டகற்களாலும், சிவப்பு மணற்கற்களாலும் கட்டப்பட்டு, சலவைக்கற்கள் போர்த்து பொருளாகவும், தள ஓடுகளாகவும் பயன்படுவதுடன், அழகூட்டல் மறைப்புக்கள், கதவு நிலைகள், தாழ்வாரங்கள், முதன்மைக் குவிமாடம் என்பனவும் சலவைக்கற்களால் ஆக்கப்பட்டுள்ளன. இக்கட்டிடம் எட்டு மீட்டர் உயரமும், 12,000 ச. மீட்டர் பரப்பளவும் கொண்டதும், கண்டகற்களால் கட்டப்பட்ட கட்டிடத்தின் அடிப்பீடம் 56 சிற்றறைகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் 100க்கு மேற்பட்ட கல்லறைகள் உள்ளன.

பாரசீகக் கட்டிடக்கலையில் செல்வாக்குக்கு உட்பட்ட இக் கட்டிடம் 47 மீட்டர் உயரம் கொண்டது. இதன் ஒரு பக்கம் 90 மீட்டர் நீளமானது. உயர்ந்த கழுத்துப் பகுதியின் மீது பாரசீகப் பாணியிலான இரட்டைக் குவிமாட அமைப்புக்கொண்ட முதல் இந்தியக் கட்டிடம் இதுவாகும். உமாயூனின் சமாதிக் கட்டிடத்தில் பிற முகலாய அரச குடும்பத்தினரின் கல்லறைகளுடன் அமீதா பானு பேகத்தின் கல்லறை காணப்படுகின்றது. அமீதா பானு பேகம் (1527-1604) இரண்டாவது முகலாயப் பேரரசர் உமாயூனின் மனைவிகளில் ஒருவரும், பேரரசர் அக்பரின் தாயும் ஆவார். 1541ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஒரு திங்கட்கிழமை நடுப்பகல் நேரத்தில் திருமணம் நடைபெற்றது. இதன் மூலம் அமீதா பானு பேகம், உமாயூனின் இளைய மனைவி ஆனார்.

- அமலகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் எச்சங்கள்

## - வாகரையில் புதைபொருள் ஆய்வு -



கண்டெடுக்கப்பட்ட ஐம்பொன்னாலான சிலை

அண்மையில் வாகரைப் பிரதேசத்தில் அம்மன் முகக்களை கண்டெடுக்கப்பட்ட செய்தி மிகவும் பரப ரப்பாகப் பேசப்பட்டது. பலரும் அதைப் போய்ப் பார்த்தார்கள். ஆனால் வாகரையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏராளமான பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படுகின்றன.

இச்சின்னங்கள் பெருங்கற்கால மக்களது பிரேத அடக்கத்துடன் தொடர்புடையவை. அவையாவன ஈமத் தாழிகள், நடுகற்கள், கற்பதுக்கைகள், கல் மேசைகள், கல்லறைகள், கல் படுக்கைகள் முதலியனவாகும்.

இவ்வாறு ஈமச் சின்னங்களை அமைப்பது, ஆதித் திராவிட மக்களின் சம்பிரதாயம் ஆகும். இதுபற்றிப் பல்வேறு ஆய்வாளர்கள் விளக்கமாக எழுதியுள்ளனர் .

பெருங்கற்காலம் என்பது கி.மு. 30,000 ஆண்டுவரை கணிக்கப்படுகிறது. பெருங்கற்காலச் சின்னங்கள் வரலாற்றுத் தொன்மைக்குச் சான்றுகளாகின்றன. இத்தகைய சின்னங்கள் தமிழகத்தில் ஆதிச்ச நல்லூர் முதலிய இடங்களிலும், இலங்கையில் பொன்பரிப்பு (புத்தளம் மாவட்டம்), கதிரவெளி முதலிய இடங்களிலும் இவை காணப்படுகின்றன. இவ்விடங்களில் ஆதித்திராவிடர் (தமிழர்கள்) வாழ்ந்தார்கள் என்பதற்கு இவை அசைக்க முடியாத சான்றுகள் ஆகின்றன. இதுபற்றி எனது கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு நூலிலும் குறிப்பிட்டுள்ளது.

### பெருங்கற்காலம் அறிமுகம் :

மனித தோற்றமும் அவனது ஆரம்பகால நடைமுறைகளும், வாழ்க்கை முறையும் கற்காலத்திலே (Stone age) தோற்றம் பெற்றன. கற்காலத்தை பழைய கற்காலம் (Old stone age) இடைக்கற்காலம் (Mesolithic) புதிய கற்காலம் (Nelolithic) பெருங்கற்காலம் (Megalothic) எனப் பகுத்து ஆராய்வது ஆய்வளர்களது மரபு. இவற்றிலே முதல் மூன்றும் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதியாகும். இடையில் காணப் படுவது வரலாற்று இடைக்காலம் (proto history period) ஆகும். கடைசியாக உள்ளது எழுத்தாதாரங்களோடு காணப்ப டும் வரலாற்றுக்காலமாகும். (Historic Period)

புதிய கற்காலத்திற்கும் வரலாற்றுக்காலப் பகுதிக்கும் இடையே உலோககாலமும் (Bronze age) பெருங்கற்காலமும் (Megalithic) தொடர்ச்சியாக காணப்படுகின்றன. பெருங்கற் காலம் எனப்படும் காலப்பகுதியானது ஈழத்தில் மட்டுமல்ல உலகம் முழுவதுமே நாகரீகம் ஏற்பட்ட காலப்பகுதியாகும்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளும் (Exploration) அகழ்வாராய்ச்சிகளும் (Excavations) பெருங்கற்கால நாகரீகத்தின் உண்மைகளை



பண்டைய சாக கலிசாரத்தை பிரதிபலிக்கும் சிற்ப துண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகறியத்தந்தன. இவை வட இந்தியா தொடக்கம், தென் இந்தியா, தமிழகம், ஈழம் வரை காணப்பட்டுள்ளதை பல்வேறு ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன. தென் இந்திய கலாசாரத்தின் பிரதிபலிப்பே ஈழத்திலும் காணப்பட்டது.

### பெருங்கற்காலம் என்றால் என்ன?

பெருங்கற்கால கலாசாரம் என்றால் என்ன என்பதை நோக்கினால் அது பெரிய கற்களைக் கொண்டு ஈமச் சின்னங்களை அமைத்த காலப்பகுதி எனலாம். இக்கலாசாரத்தின் முக்கிய தன்மைகள் வருமாறு: மக்கள் குடியிருப்புகள், ஈமச் சின்னங்கள்,வயல்களும், பயிரிடலும், குளங்கள், நீர்ப்பாசனம் பெருங்கற்காலத்தில் மேற்குறிப்பிட்ட தன்மைகள் ஒருங்கே அமையப்பெற்றுக் காணப்பட்டன. (பண்டைய தமிழகம் சி.க. சிற்றம்பலம், 1981 திருநெல்வேலி 57,58)

பெருங்கற்காலத்தின் இம் முக்கிய பண்புகளை வெளிப்படுத்துவதாக எமக்குத் கிடைக்கும் எச்சங்கள் சில வருமாறு: பெரிய கற்களினால் அமைக்கப்பெற்ற ஈமச் சின்னங்கள், இறந்தோர் உடலை அடக்கம் செய்த பெரிய தாழிகள், இத்தாழிகள் கறுப்பு - சிவப்பு மட்பாண்ட வகைகளைச் சேர்ந்தமை, இறந்தோர் உடலுடன் அத்தாழிகளில் காணப்பட்ட இரும்பு, வேறு உலோகப் பொருட்கள், மணிகள், ஆபரணங்கள், உணவுப் பொருட்கள் போன்றன.

### நீர்ப்பாசனமுறையும் - பெருங்கற்காலமும்

மழை நீரைக் குளங்களில் தேக்கி வைத்து அதனை வயல்களுக்கு பாய்ச்சிப் பயிரிடும் வழக்கம் பெருங் கற்காலத்திலே முக்கியம் பெற்றது. இவ்விதம் ஏற்பட்ட பயிர்ச் செழிப்பின் காரணமாக பொருட்கள் உற்பத்தி, மட்பாண்டங்கள், உலோகப் பொருட்கள், மணிவகைகள், போன்றனவும் உருவாக்கப் பெற்றன. நெல் பிரதான தானியமாக காணப்பட்டது. நீரைத்தேக்கி வைத்துப் பயிரிடும் வழக்கம் இருந்தமையினால் மழையை மட்டும் நம்பி இருந்து பயிர் செய்யும் தேவை இருக்கவில்லை.

### இடுகாடுகளும் ஈமச் சின்னங்களும்

பொதுவாக இறந்தோரைப் புதைக்கும் வழக்கம் புதிய கற்காலப் பகுதியிலே ஏற்பட்டு விட்டது. அதற்கு முந்திய இடைக்கற்காலம், பழையகற்காலம் என்பவற்றிலே எவ்விதம் புதைத்தார்கள் என்பதற்கு தெளிவான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் பெருங்கற்கால இடுகாடுகளும், ஈமத்தாழிகளும், எவ்விதம் இறந்தோர் உடல் அடக்கம் செய்யப்பட்டது என்பதை மட்டுமல்ல, அக்காலத்து மேலும் பல் வேறு அம்சங்களையும் உலகிற்கு தெளிவாகக் தந்தது.

நாகரீகமடைந்த இப்பெருங்கற்கால பண்பாடானது சிரியா, சைபிரஸ், பாலஸ்தீனம், ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, வடஇந்தியா, தென்இந்தியா, ஈழம் போன்ற பல இடங்களிலும் பரவலாகக் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பெருங்கற்கால மக்கள் வாழ்க்கையில்



இருகுழிகள் காணப்பட்ட ஓட்டுத்துண்டு



ஒரு கல்வெட்டு போன்றது
ஆனால் எழுத்துக்கள் அழிந்து விட்டன.



இடுகாடு, புதைகுழி ஒன்றில் காணப்பட்ட
பொருட்கள், சதுர கற்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிப்பிடங்களை அமைப்பதிலும் பார்க்க ஈமச்சின்னங்களை பெரிதாக அமைப்பதிலே அதிக அக்கறை காட்டியுள்ளனர். (பண்டைய தமிழகம் சி.க. சிற்றம்பலம் - 1991 - பக் - 114, திரு நெல்வேலி)

வாகரைப் பிரதேசத்தில் குருவிக்கல், மொட்டையாகல வாளமடு, மானாவாரிக்கல் (மலை) சோதையன் பட்டமடு, உரியங்கட்டு, வண்ணாத்தி ஆறு, மதுரங்கேணி, கிரிமிச்சை, பாலையடி ஓடை, ஊராத்தபொக்கணை, ஆவைவடிவக்கல், மேவண்ட தளம், 2000 ஏக்கர் மலை, மேவாண்ட குளம், வண்ணாத்திவில், பேய்க்கல்(ஆலங்குளம்), வாககடகல், சொடுக்குக்குளம் முதலிய இடங்களிலும் இச்சின்னங்கள் காணப்படுகின்றன.

ஈழத்திலே பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் வாகரையில் மட்டுமல்லாது வேறுபல இடங்களிலும் காணப்படுகின்றன. வடக்கே கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர் மற்றும் மாந்தை, பொன்பரிப்பு(புத்தளம்) கொல்லன் கனத்தை, பூநகரி, கிளி நொச்சி முதலிய இடங்களிலும் மத்திய மாகாணத்திலே மிகிந்தலை, அநுரதபுரம் (கெடிகே) தூபராம, மாத்தளையிலே இப்பன்கட்டுவ, கிழக்குப்பகுதியிலே தப்போவவ, மருதமடு, தீகவாவி, மாகம (திசமாரானமை) உகந்தை , கதிரவெளி, வாகரை, தென்மாகாணத்திலே பண்டதாரா, ஜின்தோட்ட, பெந்தோட்டை, களுத்துறை, வெலிகம, மாத்தறை, முதலிய இடங்களிலும், பெருங்கற்காலக் குடியிருப்புகள் காணப்பட்டன என ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

பொதுவாக இலங்கைத் தீவு முழுவதுமே பரந்து காணப்பட்ட இப்பெருங்கற்காலச் சின்னங்கள் - பிராமி எழுத்துக்கள் நீர்ப்பாசனக் குளங்கள் முதலியன காணப்பட்டன. இதனைப் பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு பேராசிரியர்களின் ஆய்வுகள் காட்டுகின்றன. 1970 இல் கனடியப் பேராசிரியரான விமல்சு பெக்னே, தலைமையில், வடக்கே கந்தரோடையில் ஒரு குழு மேற்கொண்ட ஆய்வு பல உண்மைகளை வெளிப்படுத்தியது.

இங்கு காணப்பட்ட 3 அடுக்குகளில் (LAYERS) மூலம் பெருங்கற்காலம் பற்றிய தெளிவான விபரங்கள் கிடைத்தன. இப்பிரதேசத்தில் காணப்பட்ட குடியேற்றம் பெருங் கற்காலத்தைச் சேர்ந்தது என்பதும் அடுத்து கந்தரேடையில் 2ஆம் அடுக்கில் கிடைக்கப்பெற்ற மட்பாண்டங்களின் மூலம் தொடர்ந்து வந்த வரலாற்றுக்கால தகவல்களையும் பெறக் கூடியதாக இருந்தது.

கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட தகோபாக்கள் (சுமார் 23) வெளிப்பார்வைக்கு பௌத்த தகோபாக்கள் போல தோற்றமளித்தாலும் உண்மையில் அவை பெருங்கற்கால இடு காட்டுச் சின்னங்கள் என்பதை ஆய்வாளர் விளக்கிக் கூறியுள்ளனர்.

## வாகரைப் பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாடு

இப்பிரதேசம் முழுவதிலும் பெருங்கற்காலச் சின்னங்கள் விரவிக்கிடக்கின்றன. அவற்றுட் சில வருமாறு :

மக்கட்குடியிருப்புகள் - இன்று மக்கட் தொகை அருகிக் காணப்படும் இப்பிரதேசம் பெருங்கற்காலத்தில் மக்கள் இப்பிரதேசம் முழுவதும் செறிந்து வாழ்ந்த இடமாகும். கதிர வெளி, பால்சேனை, பனிச்சங்கேணி, மாங்கேணி, கயாங்கேணி முதலிய பிரதேசங்கள் வேடர் குடியிருப்புகள் செறிந்திருந்தன. கதிர்காமம் தொடக்கம் வெருகல் வரை உள்ள நீண்ட பிரதேசம் வேடர் வாழ்வுடன் தொடர்பு பட்டிருப்பது நோக்கற்பாலது.

இன்றும் கூட கதிர்காமம், வெருகல், மண்டூர், உகந்தை முதலிய பழம்பெரும் முருகன் கோயில்களில் வேடர்பாரம்பரியம் பேணப்படுகிறது. பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் இப்பிரதேசங்களில் காணப்படுகின்றன.

கதிர வெளி, கயான்கேணி, பால்சேனை, முதலிய கிராமங்கள் வேடர் குடியிருப்புகள் காணப்பட்ட இடங்களாகும். வாகரைப் பிரதேசத்தில் இடப் பெயர்களை ஆராய்ந்தால் பண்டையக் குடியிருப்புகளின் பிரதிபலிப்பைக் காணலாம்.

இப்பிரதேசத்தின் அடர்ந்த காடுகளுக்குள்ளே திட்டியாகக் காணப்படும் மேடுகளும் சுமார் 8 மைல் பரப்பளவில் மதில் இடிபாடுகளும் காணப்படுகின்றன. நூற்றுக்கணக்கான ஈமத்தாழிகளுடன் கல் மேசையுடனான இடுகாடுகளும் அங்கே ஈமத்தாழிகளுக்கான நடுக்கல்களும் காணப்படுகின்றன.

இவை அனைத்தும் பெருங்கற்காலத்தில் இப்பிரதேசங்களில் ஆதித்திராவிடர்கள் (தமிழர்கள்) வாழ்ந்தனர். என்பதற்குச் சான்றுகளாகின்றன. அந்த வகையில் வாகரைப் பிரதேசம் தமிழ் மக்களின் வரலாற்றுத் தொன்மைக்கு அசைக்கமுடியாத சான்றாகின்றது.

- க. தங்கேஸ்வரி

செப்பனிட்டு பொழியப்பட்ட கற்குழி



காயங்கேணியில் காணப்பட்ட கற்றூண் பொருத்தும் அடிப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.mobitel.lk

# போதும் என்றளவுக்கு பேச்சு!
# குறைந்த IDD கட்டணம்...
# தெள்ளத் தெளிவான ஒலி...
# 8 வெளிநாட்டு இலக்கங்கள் வரை

# ANY 8 IDD



| நாடு | ANY 8 IDD கட்டணம் (நிமிடத்திற்கு) | | நாடு | ANY 8 IDD கட்டணம் (நிமிடத்திற்கு) | |
|---|---|---|---|---|---|
| | நிலையான தொ.பே. (ரு) | கையடக்க தொ.பே. (ரு) | | நிலையான தொ.பே. (ரு) | கையடக்க தொ.பே. (ரு) |
| அவுஸ்திரேலியா | 3/- | 13/- | தென் கொரியா | 4/- | 8/- |
| பங்களாதேஷ் | 6/- | 11/- | குவைட் | 10/- | 14/- |
| கனடா | 3/- | 3/- | சவுதி அரேபியா | 10/- | 14/- |
| சீனா | 2/- | 3/- | சிங்கப்பூர் | 4/- | 4/- |
| பிரான்ஸ் | 4/- | 18/- | ஸ்விட்சர்லாந்து | 4/- | 22/- |
| ஜர்மனி | 4/- | 18/- | தாய்லாந்து | 4/- | 4/- |
| இந்தியா | 2/- | 2/- | இத்தாலி | 3/- | 18/- |
| ஜப்பான் | 4/- | 14/- | அமெரிக்கா | 3/- | 3/- |

• நிபந்தனைகளுக்குட்பட்டது

• சகல கட்டணங்களும் அரச தீர்வை மற்றும் வரிகளுக்குட்பட்டவையாகும். • சகல வெளிநாட்டு அழைப்புகளும் செக்கன் அடிப்படையில் அறவிடப்படும்.
• முழுமையான வெளிநாட்டுப் பட்டியலைப் பெற 433 ஐ டயல் செய்யவும்.

"உலகம் என்பது அனைவரும் ஒன்றிணைந்த ஒரே ஊராகும். எனவே வெளிநாட்டு அழைப்புக்களை ஏற்படுத்துவதென்பது மிக முக்கியமான தேவையுமாகும். அதற்காக அதிகமான செலவுகளை ஏற்கவேண்டுமென்பது யதார்த்தமே. மொபிடெல் **ANY 8 IDD** இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, இப்பொழுது உலகின் எப் பாகத்திற்கும் 8 வெளிநாட்டு இலக்கங்களுடன் மிகக் குறைந்த கட்டணத்தில், தெள்ளத் தெளிவான ஒலியில் அழைப்பினில் இணைந்திடும் அரிய வாய்ப்பினை வழங்குகிறது."

ANY 8 IDD இலக்கங்களைக் குறிப்பிட

SMART முற்கொடுப்பனவு பாவனையாளர்கள் - 141இனை அழைத்து 4ஐத் தெரிவுசெய்யவும்

பிற்கொடுப்பனவு அல்லது உபஹார பாவனையாளர்கள் - "ANY8IDD" என 433 இற்கு SMS அல்லது #888# ஐ அழைக்கவும்.

SMART

துரித இலக்கம்: 071 27 55 777

இலங்கை கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்

Sri Lanka Telecom
Mobitel
*We Care. Always.*

TRIAD 23288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் மட்டுமே மிஞ்சி நிற்கிறது"

**– நாடக திரைப்படக் கலைஞர் எஸ்.என்.நடராஜா –**

இரத்தினபுரியைச் சேர்ந்த கஹவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கலைஞர் எஸ். என். நடராஜா 1963 ஆண்டுகாலப் பகுதியில் மலையகப் பகுதியில் நடைபெறும் நாட்டுக்கூத்து மேடை நாடகங்களில் நடித்துப் புகழடைந்தவர் இவர்.

சினிமா ஆசை இவரையும் ஆட்கொண்டது. தலைநகருக்கே வந்து விட்டார். தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை கிடைக்கவே இணையாக இன்னுமொரு வேலையையும் செய்து கொண்டிருந்தார். சிலோன் ஸ்டுடியோவில் பணியாற்றியதே அவ்வேலை. 'டாக்ஸி டிரைவர்' இலங்கைத் தமிழ்ப் படம் மூலம் அறிமுகமாகி, நடிப்பு தொழிலில் சில விடயங்களையும் கற்றுக் கொண்டார். 'ஓம் சரவணா புரொடக்ஷன்' என்ற நாடக மன்றத்தை ஆரம்பித்து சுமார் 10க்கும் மேற்பட்ட நாடகங்களை மேடையேற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எம்.மொஹிதீன், எஸ். பி. சாமி போன்ற நாடக உலக நண்பர்கள் மூலமாக மேலும் இலங்கை நாடக உலகை நிமிர்த்தப் பாடுபட்டவர்களில் இவரும் குறிப்பிடத்தக்கவர். தான் மேடை ஏற்றியவற்றில் சுமார் 7 நாடகங்களை இயக்கியுமுள்ளார் திரு. நடராஜா.

மேடையேற்றிய நாடகங்களில் 'எங்கே நீதி', 'பருவம் ஒரு பாடம்', 'உன்னை நான் சந்தித்தேன்', 'யாரைத்தான் நம்புவது', 'வெள்ளிக்காசுகள் குறிப்பிடத்தக்கவை. சிறு சிறு வேடங்களில் சிங்களப்படங்களிலும் தோன்றிய இவர், இலங்கைத் தமிழ் திரைப்படங்களான கே. வெங்கட் இயக்கிய 'மாமியார் வீடு', 'தெய்வம் தந்த வீடு', 'நெஞ்சுக்கு நீதி', 'நிர்மலா', 'ஷர்மிளாவின் இதயராகம்' போன்றவற்றிலும் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றவர். அதற்கு சான்றாக அவரிடம் உள்ள அன்றைய கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களை இன்றும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்.

'நெஞ்சுக்கு நீதி' படத்தில் நடித்தபோது தனக்கேற்பட்ட அனுபவம் ஒன்றை இப்படி கூறுகிறார் கலாபூஷணம் எஸ்.என்.நடராஜா.

'நெஞ்சுக்கு நீதி' படத்தில் நடிக்கும் ஆசையில் என்னாலான பல பணிகளைச் செய்தேன். அப்படம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது தயாரிப்பாளருக்கு நஷ்டம் ஏற்பட்டது. படம் வெளிவர வேண்டும் என்ற ஆசையில் நானும் ஒரு தொகையை அத்தயாரிப்பாளருக்கு கொடுத்து உதவினேன். அவ்வாறு அர்ப்பணித்து நான் அத்திரைப்படத்திற்காக உழைத்த போதும் குறித்த அப்படத்தில் நான் நடித்த காட்சிகள் நீக்கப்பட்டிருந்தன. அத்திரைப்படத்தில் நான் நடித்தேன் என்பதற்கு சான்றாக டைட்டிலில் மட்டும் எனது பெயர் இருக்கும் என்று சொன்னார் சிரித்தபடியே.

நடிகர் - நடிகையர் தட்டுப்பாடு தமிழ் நாடகத்துறையில் இப் போது ஏற்பட்டுள்ளதே! இதற்கு என்ன வழி என்று கேட்டபோது நடராஜாவின் பதில்

'தமிழ் நாடகத்துறை' வருமானம் வரும் துறையாக இதுவரை மாற்றப்படவில்லை. அவ்வாறு இத்துறை மாற்றமடைந்திருந்தால் சிலவேளை இளைஞர்கள், யுவதிகள் நடிப்பதற்கு முன்வந்திருக்கலாம். அன்று தொட்டு இன்று வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடும்பத்தாரும் இவற்றை வரவேற்பதில்லை. நடிகன் என்று மக்கள் மெச்சுமளவிற்கு தனித்துவ அடையாளம் இங்கே தமிழ் நடிகர்கள் யாருக்கும் கிடைக்கவில்லை. அந்த ரீதியில் சிங்களக் கலைஞர்களும் தென்னிந்தியக் கலைஞர்களும் அதிர்ஷ்டசாலிகள் என்றார் நடராஜா

25 வருடங்களுக்கு முன்பே நாடகத்தை அரங்கேற்றியிருந்தீர்கள் அந்த வகையில் அன்றைய நிலை எப்படியிருந்தது என்று கேட்டபோது அவர் தந்த பதில்

நான் நாடகம் நடிக்க ஆரம்பித்த காலங்களில் இருந்து நாடகம் ஒன்றை தயாரித்து அதை ஒத்திகை பார்ப்பதற்கான இடம் இல்லாமலே இருந்துள்ளது. நாங்கள் நாடகம் ஒன்றை ஒத்திகை பார்ப்பதென்றாலும் வீடுகளிலும் மற்றும் இடங்களிலும் தான் அதைச் செய்து வந்துள்ளோம். அதுவும் முறையாக அமைவதில்லை.

இந்த நிலைமை இன்றும் மாறவில்லை என்றே குறிப்பிட வேண்டும். இதுபோல் வளர்ந்து கொண்டிருக்கும் தமிழ் நாடகக் கலைஞர்களும் ஒத்திகைக்கான இடம் இல்லாமல் சிரமத்துக்கு மத்தியில் காணப்படுகின்றனர். ஆனால் சிங்கள நாடகத்துறையை எடுத்துக் கொண்டால் இப்படி ஒத்திகைக்கான வசதிக் குறைவு காணப்படுவதில்லை என்றே கூறலாம். அதுவும் சிங்கள நாடகத்துறை வளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

தமிழ் நாடகத்துக்கு வசதி வாய்ப்புகள் குறைந்துள்ளமையால் எம் நாட்டு நாடக தயாரிப்பு குறைந்து வருவதை பார்க்க முடிகிறது. நாடக ஒத்திகைக்கான இட வசதி இனிமேலாவது கிடைக்குமா? என அவர் கேள்வி எழுப்பினார். 1982 ஆம் ஆண்டு காலப்பகுதியில் டவர் அரங்கில் உன்னை நான் சந்தித்தேன். நாடகத்தை மேடையேற்றிய போது வெறும் ஐநூறு ரூபா தான் அரங்க கட்டணமாக இருந்தது. ரசிகர்களும் டிக்கட் வாங்கி நாடகத்தைப் பார்க்கும் நிலையில் இருந்தார்கள். ஓரளவு சமாளித்தோம்.

மேடைநாடகங்களைப் பொறுத்த வரை நாடகங்கள் தயாரிக்கின்ற பெரும் தயாரிப்பாளர்கள் நம்மிடையே இல்லை. நடிப்பவரே நாடக தயாரிப்பாளராக இருப்பார். அவரிடமிருந்து நிறைந்த ஊதியத்தை நாடகத்தில் பங்கு கொள்பவர் எதிர்பார்க்க முடியாது. ஒப்பனை அரங்க நிர்மாணம் தேனீர், உணவு, வாகன போக்குவரத்து, என ஏற்படும் ஏகப்பட்ட செலவுகளை சாதாரண தயாரிப்பாளரால் எவ்வாறு சுமக்க முடியும்? நாடகங்கள் சிலவற்றை தயாரித்து மேடைஏற்றிய போது அதை நான் உணர்ந்தேன்.

ஒரு பக்கம் நாட்டில் தமிழ் நாடகத்துறையில் தேக்கம் இவ்வாறு இருக்க மறுபக்கம் நமது கலைஞர்களின் பொறாமை நச்சரிப்புகள் வேறு இருக்கின்ற போது இத்துறையை எவர் ஆள முடியும்? என்ற கேள்வியையும் எழுப்புகிறார் இந்த மூத்த நாடகக் கலைஞர்.

> நாடகப் போட்டியில் பங்கு கொள்ள நாம் இங்கு ஒரு நாடகத்தை செலவு செய்து மேடை ஏற்றிக் காட்ட வேண்டியுள்ளது. பின்னரே அது பரிசுக்காக தெரிவு செய்யப்படுகின்றது. இந்த நிலைமாறிப் போட்டி நிகழ்வன்றே நேரடியாகவே நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டால் நிறையப் பேருக்கு நன்மை உண்டு.

1943 இல் பிறந்து இன்று 67 வயதுடைய திரு.நடராஜாவிடம் நடிக்கும் ஆர்வம் இப்போது இருக்கிறதா? என வினவிய போது நடிக்க வேண்டும் என்ற ஒரே ஆர்வம் மட்டுமே என்னிடம் தேங்கியிருக்கிறது. சிங்கள நாடகத்துறைக்கு கிடைக்கும் வரவேற்பு தமிழ் நாடக கலைஞர்களுக்கு கிடைக்கவில்லை. என்ற ஆதங்க நிலையும் உள்ளது. நடித்து எதைக் கண்டோம் என்ற வெறுப்பு நிலையும் ஏற்படுகிறது. கலைஞர்களின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அரங்கச்செலவுகள் கூடிய நிலையில் ஒரு நாடகத்தை மேடையேற்றலாம் என வைத்துக் கொள்ளுங்கள் அன்றைய அரங்கச் செலவு இன்றைய டிக்கட் கட்டணமாக மாறிவிட்டது. இந்த நிலையில் நாடகம் பார்க்க ரசிகர்கள் குறிப்பிட்ட அளவில் வருவார்களா? மற்றது மேடை நாடகத்தை பார்க்கும் ஆர்வம் ரசிகர்களிடையே குறைவடைவதற்கு கேபிள் நிகழ்ச்சிகளும் ஒரு காரணம். இப்படியான ஆதிக்கம் நாம் நாடகங்களை மேடையேற்றிய அக்காலத்தில் இருக்கவில்லை. என்றும் கூறினார்.

மறக்கமுடியாதவை என்று தாங்கள் மனதில் பதிந்திருப்பது?

'எங்கே நீதி' என நான் மேடையேற்றிய நாடகத்தில் புகழ் பூத்த கலைஞர்களான ஸ்ரீ சங்கர், உதயகுமார், ஆர்.பி.மகாராஜா, வி. ஷண்முகராஜா, ஜெயதேவி, இக்பால், எம்.மொஹிடீன் போன்றவர்கள் நடித்திருந்தமையாகும். அதேபோல் அந்தக் காலத்தில் சுதர்ஷி ஒத்திகை மண்டபத்தில் இரண்டு ரூபாய் கட்டணத்தில் நாடகங்களின் ஒத்திகை பார்த்தமை ஆகியவை மறக்கமுடியாதவை என்றார்.

மீண்டும் இவ்வாறெல்லாம் நாடக ஒத்திகைகளை நடத்த முடியுமா என்ற சோகம் கூட கலைஞர் நடராஜாவின் மனதில் இழையோடியது.

> **ஒரு பக்கம் நாட்டில் தமிழ் நாடகத்துறையில் தேக்கம் இவ்வாறு இருக்க மறுபக்கம் நமது கலைஞர்களின் பொறாமை நச்சரிப்புகள் வேறு இருக்கின்ற போது இத்துறையை எவர் ஆள முடியும்?**

இதுவரை தொலைக்காட்சி நாடகம் என்ற அம்சத்துக்குள் அடங்காதவர் இந்த நடராஜா. ஏன் தொலைக்காட்சியில் நடிக்கும் வாய்ப்புகள் கிடைக்கவில்லையா? என அவரிடம் கேட்டோம்

யாரும் என்னை பயன் படுத்தவில்லை. 'எனது பருவம் ஒரு பாடம்' மேடை நாடகத்தை தொலைக்காட்சியில் தயாரிப்பதற்காக முடிவு செய்த போது அந்நிறுவனங்களின் கட்டுப்பாடுகளும், நிபந்தனைகளும் எமது முயற்சிக்கு முட்டுக்கட்டையானது. நல்ல அனுசரனையாளர்களும் கிடைக்கவில்லை. அவ்வாறு எவராவது முன்வந்தால் பருவம் ஒரு பாடத்துக்கு உருவம் கிடைக்கும் என உருக்கமாக பதில் தந்தார். பெரும்பாலும் எமது தொலைக்காட்சிகளில் அயல் தேசத்து நாடகங்களை காட்சிப் படுத்துவதன் மூலம் எமது படைப்புகளுக்கு போதிய இடமில்லாது போகிறது என்றவாறு தமது ஆதங்கத்தையும் திரு. நடராஜா வெளிப்படுத்தினார். அரச நாடக போட்டிக்காக இவர் முன்பு 'வெள்ளிக்காசுகள்' நாடகத்தை மேடையேற்றினார். ஆனாலும் அது தெரிவு செய்யப்படவில்லை. அதுபற்றி அவர் கூறுகையில் 'நாடகப் போட்டியில் பங்கு கொள்ள நாம் இங்கு ஒரு நாடகத்தை செலவு செய்து மேடையேற்றிக் காட்ட வேண்டியுள்ளது. பின்னரே அது பரிசுக்காக தெரிவு செய்யப்படுகின்றது. இந்த நிலை மாறி போட்டி நிகழ்வன்றே நேரடியாகவே நாடகங்கள் மேடையேற்றப்பட்டால் நிறையப் பேருக்கு நன்மை உண்டு' என இவர் குறிப்பிட்டார்.

'வெள்ளிக் காசுகள்' என்ற கிறிஸ்தவ நாடகத்தை இறுதியாக நான் அரங்யேற்றியமை குறித்து மகிழ்ச்சிதான். ஆனால் எனது கை நஷ்டப்பட்டு போய் விட்டது. என்றார்.

இலங்கையில் சிறந்த கலைஞர்கள் இல்லாமல் இல்லை. சாதித்தவர்கள் உள்ளார்கள். கலைச்செல்வன், உதயகுமார் போன்ற ஒரு சில கலைஞர்களே இன்று நம்மிடையே வாழ்ந்து கொண்டும் அக்கலையை வாழவைப்பதிலும் முன்நிற்கின்றனர்.

பழைய நாடகங்களே மீண்டும், மீண்டும் இங்கு மேடையேற்றப்படுகின்றன. புதிய நாடகங்கள் இல்லை. புதிய எழுத்தாளர்களும் இல்லை. இந்த குறை நீக்கப்பட வேண்டும்.

நமது கலாசாரத்தை நாடகத்தின் மூலம் வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்புகள் கிட்டுவதில்லை. கலை ஆர்வமுள்ள ஒரு ஏழைக்கலைஞன் சிரமப்பட்டு ஒரு நாடகத்தை மேடையேற்றுகிறார். அதைப்பார்த்து சிலர் ஏளனம் செய்வதும் உண்டு. குறைநிறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டும். அப்போதே இத்துறை இன்னும், இன்னும் வளர முடியும்.

சந்தர்ப்பங்கள் வந்தால் நாடகங்களில் நடிப்பதக்கு பின் நிற்க மாட்டேன் என்றும் தனது இதய தாகத்தை வெளிபடுத்தினார் இப்பழம்பெரும் நடிகர் எஸ். என். நடராஜா.

**நேர்முகம் - ஏ. எஸ். எம். நவாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவான பரிசுகள்...
அதிக வெற்றி வாய்ப்பு ...

# ரூபா மில்லியன்களில்




NRFC சேமிப்புக் கணக்குரிமையாளர்களுக்கு சிறந்ததொரு வாய்ப்பு

**போட்டிக்கான நிபந்தனை**

| பணப்பரிசுகள் * | ஆகக்குறைந்த நிலுவை அமெரிக்க டொலர்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணய வகைகளில | வைப்புக்கால எல்லை ** |
|---|---|---|
| ரூபா: **ஒரு மில்லியன்** சுப்பர் பரிசு | யூ.எஸ் டொலர் 5000 அல்லது அதன்** மடங்குகள் | • சீட்டிழுப்புத் தினம்வரையான மாதத்தினுள் ஆகக் குறைந்த நிலுவையைப் பேண வேண்டும் |
| ரூபா: **50,000/-** படி பரிசுகள் 20 | யூ.எஸ் டொலர் 1000 அல்லது அதற்கு மேல் | • சீட்டிழுப்புத் திகதிகள் 2010 ஜூன் 30 2010 செப்டெம்பர் 30 |
| ரூபா: **25,000/-** படி பரிசுகள் 30 | யூ.எஸ் டொலர் 250 தொடக்கம் 999 வரை | 2010 டிசெம்பர் 31 2011 மார்ச் 31 |
| ரூபா: **10,000/-** படி பரிசுகள் 50 | ஏனைய ஒவ்வொரு மாதத்திலும் (2010 ஜூலை,ஆகஸ்ட் ஒக்டோபர், நவம்பர் மற்றும் 2011 ஜனவரி பெப்ரவரி ) இறுதித் திகதியளவில் குறைந்தது யூ.எஸ் டொலர் 250 அல்லது அதற்கு மேல் | |

* பணப்பரிசுகள் யாவும் அரசாங்க வரிகளுக்கு உட்பட்டது.
** சுப்பர் பரிசுக்கான சீட்டிழுப்புக்கு சம்பந்தப்பட்ட காலாண்டினுள் பணம் வைப்புச் செய்யும் மாத எண்ணிக்கைக்கும் ஆகக்குறைந்த நிலுவையின் மடங்குகளிற்கும் சீட்டிழுப்பு முறைகளின் உரிமை கிடைக்கும்.

## வதியாதோர் வெளிநாட்டு நாணய கணக்குகளை வைத்திருக்கும் உங்களுக்கு எங்களிடமிருந்து மேலும் அனுகூலங்கள் பல* .......

- 70 வயதாகும் வரை 10 இலட்சம் ரூபா இலவச ஆயுள் காப்புறுதி (NRFC சேமிப்பு வைப்புக்கணக்குரிமையாளர்களுக்கு மாத்திரம்)
- நாடு பூராக உள்ள 300 க்கு மேற்பட்ட கிளைகளிலும் சுமார் 330 ATM பொறிகளிலும் பணம் எடுக்கும் வசதி
- இலங்கையில் பாரிய ஒன்லைன் வங்கியியல் அமைப்புடன் இணைந்த 700 க்கு மேற்பட்ட சர்வதேச வங்கிகளுடனும் **BOC - Cash** இணையத்தள வங்கியியல் வசதிகள்
- பிரித்தானியா மாலைத்தீவு இந்தியா ஆகிய நாடுகளில் காணப்படும் இலங்கை வங்கி கிளைகளுக்கு மேலதிகமாக உலகம் பூராக உள்ள இலங்கை வங்கிப் பிரதிநிதிகளூடாக பணம் அனுப்பும் வசதிகள்
- வெளிநாட்டு நாணயத்திலேயே கணக்கில் வரவு வைக்கும் போது எந்தவொரு தொகையும் அறவிடாமை உட்பட இலவசமாக வழங்கப்படும் மேலும் பல சேவைகளுடன் அரசாங்க வங்கியின் பூரணப் பாதுகாப்பு.

*நிபந்தனைகள் உண்டு

மேலதிக விபரங்களுக்கு :

தொலைபேசி : +94 112447831 | +94 112346841 | +94 112203870-5 | தொலைநகல் :+94 112346841
மின்னஞ்சல் : inttrade@boc.lk | வெப் : www.boc.lk | SWIFT இலக்கம் : **BCEYLKLX**
**Manager, Trade Promotion Unit, International Division, 9th Floor, Bank of Ceylon, Head Office, Colombo - 01, Sri Lanka.**

தேசத்தின் வங்கியாளர்

BANK OF CEYLON

sera.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கலைகளில் தனித்துவமான காவடி



தொல்காப்பியத்தை கண்டுரைத்த மாயோனும் சேயோனுமே காவடி தோன்றக் காரணமாயினர். காவு தடியே காவடி என்று ஆயிற்று. ஆதிவாசிகள் விலங்கினங்களை வேட்டையாடிப் பெற்ற மிருக உடலையும், ஊனையும், காட்டுத்தடியில் கட்டி, எட்டியதூரம் வரை கொண்டு சென்றார்கள் என்பதை பழங்கால நாகரீகம் பற்றி சொல்ல வந்த மறைமலையடிகளின் குறிப்புக்கள் காட்டுகின்றன. இதில் இருந்து நாம் சங்க இலக்கியங்களில் காணும் புலவர், பாணர் வரலாற்றில் இடம் விட்டு இடம்மாறி பரிசிலுக்காக/குரிசில்களை நோக்கிச் செல்லும் போதும் பொதி சோற்றை நீள் தடியில் கட்டி எட்டி எதுவும் எடுக்காவண்ணம் கட்டித் தொங்கவிட்டு உரிய நேரங்களில் நீர் நிலை ஓரங்களில் உண்டு மகிழ்ந்தனர் என்னும் குறிப்புக்களைக் காண முடிகின்றது. பாடல்களிலும் இதைக் காணுகின்றோம். வேதியர் ஒருவர் இப்படிக் கட்டிச் சென்ற பொதிசோற்றை விடிகால நேரம் நிலத்தில் தொட்ட மூங்கிலில் கட்டிவைத்துவிட்டு, பொழுது போக்க 'ஆகிரி' என்ற ராகத்தைப் பாடிக்கொண்டு கண்ணயர்ந்து விட்டார்.

நல்ல வெய்யில். மதியம் பொதிசோறு, கட்டிய மூங்கில் 10 அடி உயரத்தில் நிமிர்ந்து நின்றது. ஆகிரி பாடினால் அவிழும் கிடையாது என்று கூறிச் சென்றாராம் பாவம் பசியுடன். அதன் பின் ஆகிரி பாடப் பயம். குறிஞ்சிக்குமரனின் வெறியாட்டு விழாக்களில் தேனையும், பாலையும் தடியில் இரு முனைகளிலும் கட்டித் தொங்கவிட்டு, கொன்றை, கடம்ப மரத்தடியில் வைத்து வழிபாடியற்றி மகிழ்ந்த வரலாறுகள் பலவுள. பாரம் தூக்கியாகப் பாவித்த காவுதடி காலப்போக்கில் பழனி முருகன் ஆலய பால் காவடியாக உருவம் பெற்றதே வரலாறு. பண்டைய மக்கள் வைரமான தடிகளையே பாரந்தூக்கியாகப் பாவித்தனர். தமிழன் கலைகளின் திறன் கண்டுபிடிப்பதில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தான்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



காலப்போக்கில் முருகன் வெறியாட்டுவிழா அபிஷேக ஆராதனைக்கு மாறியகாலம். மலை மேல் சிலை போல் எழுந்தருளி விலை மதிப்பற்ற அருளாசிகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கும் பழனி மலை முருகன், தண்டாயுதபாணியின் கருணை, பெருமை வாய்ந்தது. ஆத்மீக சிந்தனையாளர்களின் முன்னேற்ற முயற்சியால் குறிஞ்சிக் குமரனான சேயோனை பழனியில் வழிபடத் தெளிவு பெற்றதை பரிபாடல் காலமே அறிந்து இருந்தது, பாலும் தேனும், பாகும் பழமும், பருப்பும் அபிஷேக முக்கிய நிவேதனப் பொருட்களாயின. வாகன வசதியற்ற காலங்களில் காவுதடியே கவசமாயிற்று. தடியின் இருமுனைகளிலும் இவற்றை இறுகக் கட்டி, நடைபவனியில் பழனிநோக்கி செல்லும் காட்சி, இன்றும் மாட்சிதருவாய் அமைந்திருக்கின்றது.



அலங்காரமாக இருமுனைகளிலும் கட்டிய மலர்மாலைகள் காலப்போக்கில் மயில் இறகு அலங்காரமாக மாறியது. இதுவும் பொருத்தமே. ஆடுதுபார் மயிலாடுதுபார், கூவுதுபார் குயில் கூவுதுபார், குன்றுதோறும் விளையாடும் குமரனை எங்கள் குறை தீர்க்க வருவாயென்றே என்று வாயாரப்பாடியும் ஆடியும், காவுதடியாய் ஆரம்பித்து, காவடிக்கலையாகி மிளிர்ந்த காவடியாட்டப் பயணம் நேர்த்தி வழிபாடுகளுடன் அவனியில் பவனிவர ஆரம்பித்தது.

1800 ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஆரம்பித்து பின்னர் மணிமாலை, தடி நடுவில் பெரிய கோபுரக்குஞ்சம், சிவப்பு மினுங்கல் கடதாசிகளில் இருபக்கமும் மயிற்றோகை, புதிய அடித்தளம் ஆகியன தோன்றின. அத்துடன் பாற்செம்பு, நாணம் அகற்ற வேப்பிலை போன்ற அலங்காரம், கைப்பிடி, வைத்து எடுக்க அலங்கார சட்டங்கள், பறவை உருவங்கள் என்று பலப்பல கண்ணை மயக்கும் அலங்காரங்கள் சேர்க்கப்பட்டன.



1900 ஆம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதிகளில் மக்கள் கீதமாய் ஒலித்து வந்த கிராமியப்பாடல்கள் புதிய ஆக்கங்களுடன் புதுவடிவம் பெறவும், ராகதாள விரிவாக்கத்தைப் பெறவும் ஆரம்பித்தது எனலாம்.


புலவர்கள் பிள்ளைத்தமிழ் முதல் பள்ளு, சிந்து, கண்ணி வகைப் பாடல்கள் ஆகியவற்றை இயற்றத் தொடங்கினர். 1865ஆம் ஆண்டு திருநெல்வேலியில் பிறந்த அண்ணாமலை ரெட்டியார் என்ற திருமகனாரே ஆழ்ந்த கவன அனுபவத்தின்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பின் காவடிச் சிந்து என்னும் பாடல் வகையை இயற்றி காவடிச்சிந்துவின் தந்தை என்று புகழ் பெற்றார். இவர் நவரோஜ், செஞ்சுருட்டி போன்ற இராகங்களுக்கு அமைவாகவும் திஸ்ர, சதுஸ்ர நடை தாளங்களுக்கு அமைவாகவும் பாடல்களில் அமைத்தது, காவடி ஆடும் போதுபாடியாட வசதியாயிற்று. மேளம் நாதஸ்வரத்துடன் தாள சதங்கை ஒலியுடன் பாடி ஆடும் பாங்கினை இன்றும் பழனி உற்சவத்தில் காண முடியும். 'தான தான தன தான' என்ற தத்தக்காரச் சொல்லுக்கு ஆட ஆரம்பித்து போகப்போக நடை மாறிக்களை கட்டுவது கலகலப்பாக மாறியது.

வள்ளிக் கணவன் பேரை, தெருவில் வாராண்டிவேலன் என்ற பாடல்கள் 1940 களில் இங்கும் தமிழ் நாட்டிலும் காவடியாட்டப் பாட்டாய் அமைந்தது. பின் துரித தாள நடைக்கு ஏற்ற பாடல்கள் இடம் பிடித்தன. நாகபடம் நாவிலும் அலகிலும் குத்தி, செடில் பிடித்து கயிறு பிடித்து ஆடும் ஆட்டம் தோன்றிய காலம் முதல் இன்னும் புது உத்வேகம் பெற்று பல முன்னேற்றங்களைக் கண்டது.

நேர்த்திக்கடனுக்காக ஆரம்பித்த பாற் காவடி பல வித வடிவமும் ஆட்டமும் பெறத் தொடங்கியது. ஆதிகாலத்தில் நடை பவனியில், ஞானப் பழமான முருகனுக்கு சகல பழவகைகளையும் பாலையும் தேனையும் அபிஷேகப் பொருளாக்கினர். பெண்மணிகள் தலையில் வேப்பிலைச் சும்மாடு வைத்துப் பாற் செம்பு தூக்கினர்.


பின்னர் எங்கே முருகன் ஆலயமோ அங்கே காவடியென்றிருந்து, இன்று எங்கும் காவடியைக் காண முடியும்.

தேரடி உற்சவமெனில் அங்கு காவடியும் முதன்மை பெறும். பாற் காவடி பன்னீர்க் காவடி என்று ஆரம்பித்து இன்று பறவைக் காவடி, தூக்குக் காவடி, துலாக்காவடி என்று உலகம் முழுவதும் பரவியது நேர்த்தியின் மகிழ்வே. உடம்பை வருத்தும், ஊசிருத்தி, கயிற்றில் தொங்கி பக்தர்கள் பவனி வரும் காட்சி தருவதே, ஒலிபெருக்கி மூலம் பெங்களூர் ரமணியம்மாளின் என்னப்பனே என் ஐயனே என்ற பாடலும் சுந்தராம்பாளின் பழம் நீயப்பாவும் மெய்யுருக வைக்கும். எமது நாட்டிலும் அளவெட்டி, குரும்பசிட்டி, இணுவில், சுழிபுரம், தாவடி, மீசாலை, வடமராட்சி போன்ற இடங்களில் இதில் பல விற்பன்னர்கள் ஈடுபட்டு அந்த விழாவானாலும், காவடியாட்டத்திற்கு இவர்களிடமே போகும் நிலையேற்பட்டது. இணுவில் தியாகராஜா, சிவஞானம் ஆகியோரது பஜனைக் கோஷ்டி மேலும் காவடிக் கலையை வளர்த்தது.

மதுரைச் சுந்தரம், திருச்சி சங்கரன் குழுவினர் போன்றவர்கள் காவடி ஆட்டத்தில் பலவகைப் புதுமைகளைப் புகுத்தி பரவசப்படுத்தினர். தமிழ் நாட்டு விழாக்களில் இது முக்கிய நிகழ்வே. சிறிய காவடியைத் தாளத்திற்கும் பாடலுக்கும் ஏற்ப தோளில் வைத்து ஆடி, முன் ஒரு பக்கத் தோளிலும் அதையே மெதுவாக முதுகுக்கு கொண்டு வந்து, கைகள் இரண்டையும் முழங்காலில் பதித்தபடி பின் இடுப்புவரை ஊரவிட்டுப் பின்பு முன் இருந்த மாதிரி முதுகுவழியாக குனிந்த நிலையில் தோள்களுக்கு எடுத்துத் துரித கதியில் ஒரு ஆட்டம் ஆடும்போது ஒரே நிசப்தம் தான். சிலர் கழுத்தில் இருந்து தலைக்கும் கொண்டு வந்து வித்தை காட்டுவர். இங்கு இன்று பாடசாலைகளிலும், முக்கிய விழா ஊர்வலங்களிலும் மேடை நிகழ்வுகளில் பரந்து காவடியாட்டம் வளர்ந்திருப்பது உடல் உள வலுசேர்க்கும் என்பதே பலரது கருத்தாகும். கல்விக்கும் கவின் கலைகள் உறுதுணையே. எமது, கலை கலாசார, வரலாற்று இலக்கியப் பதிவுகளைக் காவடிக் கலையே வெளிக்கொணர வழிவகுக்கும் என்பதால் இதை வளர்ப்போம்.


**- கலைமாமணி பொன். தெய்வேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமை அளிக்கும் முத்து









முத்து என்பது இயற்கை அன்னையின் கொடைகளில் ஒன்றாகும். பண்டையகாலம் தொடக்கம் பெண்கள் தம்மை அழகுபடுத்துவதற்காக தங்கத்தில் முத்துக்களைப் பதித்து முத்து மாலைகளாகவும் முத்து வளையல்களாகவும் முத்து ஒட்டியாணங்களாகவும் அணிந்தார்கள். மேலும் விலை உயர்ந்த நல்முத்துக்களை அரச குலத்தவரும் செல்வந்தரும் மாத்திரமே அணிந்துள்ளார்கள்.

அக்காலங்களில் பயன்படுத்தப்பட்ட நல்முத்துக்கள் கிடைத்தற்கரியனவாகும். ஐப்பசி மாதத்தில் மழைத்தூறல் விழும் காலமாகவும் இருக்கவேண்டும். அதுமாத்திரமல்லாமல் சுவாதி நட்சத்திரம் கூடிய திங்கட்கிழமையில் நண்பகல் பன்னிரண்டு மணியாக இருக்க வேண்டும். அந்த நேரத்தில் ஆழ் கடலில் இருந்து ஒரு சிப்பியானது நீர் மட்டத்துக்கு மேலே வந்து, ஒரு மழைத் துளியை உள்வாங்கி, அதனுடன் ஒரு மண் துகள் உட்சென்று, வாய் மூடி, மறுபடியும் ஆழ்கடலுக்குச் செல்லவேண்டும். ஆழ்கடலுக்குச் செல்லும் சிப்பியானது பல ஆண்டுகளாக உருண்டு, திரண்டு, தவம் இருந்து ஒரு நல் முத்தைப் பிரசவிக்கத் தயாராகும். இம் முத்தானது விலை மதிக்க முடியாத ஆணி முத்தாகக் கருதப்படும்.

பாண்டிமாதேவியின் சிலம்பில் பதிக்கப்பட்ட பரல்கள் 'முத்துப்பரல்கள்' என்றும் கண்ணகியின் சிலம்பில் பதிக்கப்பட்ட பரல்கள் 'மாணிக்கப்பரல்கள்' என்றும் சிலப்பதிகாரத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. பாண்டி நாட்டின் துறைமுகமாக 'கொற்கை' விளங்கியதுடன் முத்துக் குளித்தலுக்கு பெயர்பெற்ற இடங்களில் கொற்கையும் ஒன்றாகும். இக்காரணத்தாலே பாண்டிமாதேவியின் சிலம்பில் கொற்கையில் பெறப்பட்ட முத்துக்கள் பதிக்கப்பட்டன. தற்போது இலங்கையில் 'சிலாபம்' போன்ற துறைமுகங்களில் முத்துக்கள் பெறப்படுகின்றன.

பழங்காலத்தில் 'முத்துக் குளித்தல்' தொழில் புழக்கத்தில் இருந்தது என்பதற்கு ஆதாரங்கள் பல எம்மிடம் உண்டு. படகில் ஆழ்கடலுக்குச் சென்று, இடுப்பில் கயிறு ஒன்றைக் கட்டிக்கொண்டு, கடலுக்குள் ஒருவர் இறங்கி முத்துக் குளிக்க வேண்டும். செயற்கை சுவாச வசதிகள் எதுவும் இல்லாத அக்காலங்களில் கடலுக்குள் முத்துக் குளிப்பதற்காக இறங்கியவர், மேலே வருவதற்காக கயிற்றைப் பிடித்து சைகையை எழுப்பவேண்டும். தனிப்பட்ட கோபம் காரணமாக முத்துக் குளிப்பதற்காக கடலுக்குள் இறங்கியவர் சைகை எழுப்பும்போது மேலே படகில் இருப்பவர் கயிற்றை இழுக்காமல் விடக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. இதன் காரணமாகவே யாரையும் நம்பாமல் தன் தங்கையின் கணவனை ஆழ் கடலுக்குள் அனுப்பிவிட்டு கயிற்றைப் பிடித்து இழுப்பதற்காக அண்ணன் படகின் மேல் காத்திருப்பான். தன் + கை = தங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதன் இலக்கணமாக அண்ணன் விளங்குவான். அரிதாகக் கிடைக்கின்ற நல்முத்துக்களை ஆழ்கடலில் எடுப்பதற்காக கைதேர்ந்தவர்கள் ஆழ் கடலுக்குள் இறங்கும்போது காப்பதில் கண்ணாகவும் உறுதியாகவும் இருக்கின்ற மனைவியின் அண்ணன் கையிலே தான் தம் இடுப்புக் கயிற்றைக் கொடுப்பார்கள்.

அளவுக்கு அதிகமான பயன்பாடு மற்றும் இயற்கைச் சுற்றுச்சூழலில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் காரணமாக இயற்கை முத்துக்கள் கிடைப்பது மிக அரிதாகிவிட்டதுடன் தற்காலத்தில் முத்துக்களுக்கான தேவையும் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக செயற்கை முறையில் உருவாக்கப்படும் முத்துக்கள் தற்போது பிரபலமடைந்து விட்டன. இயற்கையாக ஆழ்கடலில் இருந்து வெளிவருகின்ற சிப்பியில் மண் துகள் போன்றவை உட்சென்று அது வெளிவராமல் இருக்கும்போது, சிப்பியானது அந்த மண் துகள் மீது பளபளப்பான ஒரு பகுதியை உருவாக்குவதன் மூலம் முத்து உருவாகிறது. ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ளவர்கள் இந்த நுட்பத்தைப் பயன்படுத்தி செயற்கை முத்துக்களைத் தயாரித்து உலக சந்தையில் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்கிறார்கள்.

முத்து சலசம் (நீரில் தோன்றுவது), தலசம் (நிலத்தில் தோன்றுவது) என இரண்டு வகைப்படும். அது சங்கு, முகில், மூங்கில், பாம்பின் தலை, பன்றிக்கொம்பு, வெண்சாலி (வெண்ணெல்), சிப்பி, மீன் தலை, கரும்பு, யானையின் கொம்பு, சிங்கத்தின் கை, பெண்களின் கழுத்து, கொக்கின் கண்டம் என்னும் பதின்மூன்று இடங்களில் தோன்றும். சிங்கத்தின் கை, பெண்களின் கழுத்து, கொக்கின் கண்டம் ஆகிய மூன்று இடங்களில் தோன்றும் முத்துக்கள் கிடத்தற்கரியனவாம்.

**'மதி மீன் கரியின் வெண் மருப்பு
வாழை கமுகு செங்கரும்பு
வளரும் செந்நெல் இப்பியிலை
வழங்கும் முத்தும் கண்படுநீர்
முதலை நந்து வாலுடும்பு
முகிழும் கமலம் சங்கு அரவு
மூங்கில் ஏனக்கொம்பமர் ஆல்
முகிலும் சிந்து முத்தவையும்
பதமென் நங்கை கட் கழுத்தும்
பைங்காற் கொக்கும் தேவரமர்
பசுவின் பற்கள்'......**

என்பதன் மூலம் முத்து விளையும் இடங்கள் பதினாறு என்றும் முப்பத்திரண்டு என்றும் சிலர் கூறுவர்.

**முத்தின் நிறம்**

சிப்பியினிடத்தும், சங்கினிடத்தும் மாடப்புறாவின் வெள்ளிய முட்டையின் வடிவினைப் போலத் திரட்சியுடையனவாய்த் தோன்றும் முத்துக்கள் வெள்ளை நிறம் கொண்டு விளங்கும். முகிலிடைத்தோன்றும் முத்துக்கள் செந்நிறங் கொண்ட சூரியனைப் போன்ற நிறத்தினைப் பெற்று விளங்கும். மூங்கிலில் தோன்றும் முத்துக்கள், மழையோடு கலந்து விழும் ஆலங்கட்டியின் (ஆலம் நீர், கட்டி திரட்சி) நிறத்தோடு ஒத்து விளங்கும் பாம்பினிடம் தோன்றும் முத்துக்கள் நீல நிறத்தினையுடையனவாய் விளங்கும். பன்றிக் கொம்பினில் தோன்றும் முத்துக்கள் இரத்த நிறத்தினையுடையனவாய் விளங்கும். வெண்ணெல்லில் தோன்றும் முத்துக்கள் பசிய நிறங்கொண்டு விளங்கும். மீன் தலையில் தோன்றும் முத்துக்கள் பாதிரி மலர் போன்ற நிறங்கொண்டு விளங்கும். யானைக் கொம்பு, கரும்பு இவ்விரண்டிலும் தோன்றும் முத்துக்கள் பொன்னிறத்தினையுடையனவாய் விளங்கும்.

**தெய்வம்**

பால் போன்று வெண்மையாய் விளங்கும் முத்துக்களுக்கு வருணன் தெய்வம் ஆகும். சூரியனைப் போல செந்நிறவெளி பொருந்திய முத்துக்களுக்கு சூரியன் தெய்வமாகும். நீலநிறம் விளங்கும் முத்துக்களுக்கு திருமால் தெய்வமாகும். இரத்தம் போல் விளங்கும் முத்துக்களுக்கு வாயு தேவன் தெய்வமாகும். பசுமை நிறமுடைய முத்துக்களுக்கு இயமன் தெய்வமாகும். பொன்னொளி விளங்கும் முத்துக்களுக்கு இந்திரன் தெய்வமாகும்.

**முத்தினை அணிவதால் ஏற்படும் பயன்கள்**

விண்மீன் போன்ற தோற்றமும் திரட்சியும், காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை என்ற குற்றங்கள் இல்லாமையும் கையில் எடுத்தால் திண்மையும், பார்வைக்கு இனிமையளித்தலும், பளிங்கு போன்று தெளிந்திருத்தலும் ஆகிய ஆறு குணங்கள் பொருந்திய முத்துக்களை அணிந்தால் வறுமை நீங்கும், செல்வம் பெருகும் வாழ்நாள் ஓங்கும்.

தொடரும்...

**கருத்து - வித்துவான் வசந்தா வைத்தியநாதன்**
**தொகுப்பு - பிரியங்கா**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதம் உங்களுக்கு எப்படி?

| | | | |
|---|---|---|---|
| கன்னி | : சூரியன், புதன் | மீனம் | : வியாழன் |
| துலாம் | : செவ்வாய், வெள்ளி | மிதுனம் | : கேது |
| தனு | : இராகு | | |

*18-10-2010 இல் துலாம் சூரியன், சந்திரன் எல்லா இராசிகளிலும் இம்மாதம் சஞ்சரிப்பார்*
*(01.10.2010 தொடக்கம் 13.10.2010 வரை)*

- ஜோதிடமாமணி எஸ். தெய்வநாயகம்



**மேடம்**

அஷ்வினி பரணி காத்திகை முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் நற்பலன்களை கொடுப்பதில் தாமதம் செய்யும். சகல விடயங்களிலும் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. தொழில் மந்தம், பணவரவு குன்றும், காரியங்களில் வீண்தடை, உறவினர் உபத்திரவம், உத்தியோக கஷ்டம், பிரயாணங்களில் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயம், வியாபாரம் மந்த நிலை உண்டு. மேட இராசியிருக்கு மனக் குழப்பத்தை தரும் மாதமாக அமையும்.



**இடபம்**

கார்திகை பின் முக்கால் ரோகினி மிருக சீவிடத்து முன்றையில் பிறந்தவர்களுக்கு வியாழன் சுகம் சிறப்பாகவும் சனி, இராகு, கேது பார்வைகள் மந்தமாகவும் உள்ளதால் எதையும் திட்டமிட்டுச் செய்தால் நன்மையுடாகும். தொழில் விருத்தி, பணவரவு, காரியங்களில் அனுகூலம், மனக்குறை நீங்கும், புதிய முயற்சி அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக கஷ்டம், மாணவர் கல்வி மேன்மை, முதலீட்டு சிறப்பு உண்டகும். இடப இராசியினரை உயர்வடைய வைக்கும் மாதமிது.



**மிதுனம்**

மிருக சீரிடத்துப் பின்னரை திருவாதிரை புனர் பூசத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் சனி பார்வைகள் நன்மையாகவும் இராகு, கேது, பகைமை பெற்றும் உள்ளதால் மனக் குழப்பங்கள் வந்து தெளிவு பெறும். தொழில் கஷ்டம் நீங்கும், பணவரவு சீராகும், புதிய முயற்சியால் நன்மை, உயர்ந்த எண்ணம், குடும்ப நன்மை, சுபகாரியமகிழ்ச்சி, உத்தியோக மாற்றம் பெரியோர் சகாயம், விவசாயம், வியாபாரம் சிறப்புண்டாகும் மிதுன இராசியினரை உயர்வாக்கும் மாதமிது.



**கடகம்**

புனர் பூசத்து நாலாங்கால் பூசம் ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் சுகமாக உள்ளதால் எதிலும் அவதானத்து செயல்படுவது நன்மை தரும். தொழில் சிறப்பு, காரியனுகூலம், பணவரவு, பெரியோர் சகாயம், குடும் மகிழ்ச்சி , உறவினர் உதவி, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயம் வியாபாரம் சிறிது மந்தம் உண்டாகும். கர்க்கடக இராசியினருக்கு கவலைகளை ஓழிக்கும் மாதமாக அமைவுபெறும்.



**சிங்கம்**

மகம் பூரம் உத்தரத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் , சனி, இராகு, கேது பார்வைகள் சிறப்பாக அமைவு பெறவில்லை. தொழில் கஷ்டம், பணவரவு தடை, மனக்கலக்கம், அன்னியர் பகை, தேகசுகம் பாதிப்பு, குடும்ப கலக்கம், உறவினர் உபத்திரம், உத்தியோக கலக்கம், மாணவர் கல்வி மந்தம், விவசாயம் வியாபாரம் சிறிது உண்டாகும். சிங்க இராசியினருக்கு சிறிது கலக்கம் தரும் மாதமாக அமையும்.



**கன்னி**

உத்தரத்து பின்முக்கால் அத்தம் சித்திரையில் முன்னறை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் சுகம் உண்டு சனி, இராகு, கேது, பார்வைகள் நன்மையாக அமையவில்லை . செய் தொழில் குழப்பம், பணவரவு வீழச்சி, மனம் குறையதிகம், பெரியோர் பகை, காரியங்களில் வீண்தடை, குடும்ப கலக்கம், உத்தியோக கஷ்டம், மாணவர் கல்வி மந்தம், வியாபாரம் சிறிது பாதிப்புண்டு. கன்னி இராசியினருக்கு பெரும் கவலைகள் குறைவடையும் மாதமிது.



**துலாம்**

சித்திரையில் பின்னரை சுவாதி விசாகத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், இராகு, கேது, பார்வைகள் நன்மையாகவும் சனி சிறிது கலக்கம் தருவதாகவும் உள்ளது. எதிலும் பொறுமையுடன் செயல் படுவது நன்மை தரும் தொழில் கஷ்டம், பணவரவு தாமதம், அன்னியர் உதவி, காரியானுகூலம், வெளியிட வாசம், குடும்ப மகிழ்ச்சி , உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி , விவசாயம் வியாபாரம் மேன்மை உண்டு. துலா இராசியினருக்கு துயர் நீக்கும் மாதமிது.



**விருச்சிகம்**

விசாகத்து நாலாங்கால் அனுஷம் கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் நன்மையாக உள்ளதால் சகல விடயங்களும் வெற்றியைத் தரும். செய் தொழில் விருத்தி, பயனுள்ள செயல், புதிய முயற்சி பலித்தல், ப– வரவு, வெளியிட பயணம், குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயம் வியாபாரம ???? இலாபம் உண்டாகும். விருட்சிக இராசியினருக்கு விடிவு தரும் மாதமாக அமையும்.



**தனு**

மூலம் புராடம் உத்தராடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது, பார்வைகள் நன்மையாக யுள்ளதால் எதிர்பார்த்த நன்மைகளைத் தரும் மாதமாக அமையும் செய்தொழில் விருத்தி, மனக்குறை நீக்கும், புதிய முயற்ச்சி பலிதல், பண வரவு, கஷ்டம் நீங்கும், காரியனுகூலம், குடும்ப மகிழ்ச்சி , உத்தியோக நன்மை, பெரியோர் உதவி, `மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயம் வியாபாரம் இலாபம் உண்டாகும். தனு இராசியினரைத் தளர வைக்காத மாதமாக அமைந்திடும்.



**மகரம்**

உத்தராடத்து பின்முக்கால் திருவோனம் அவிட்டத்து முன்னறை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது, பார்வைகள் மத்திம பலனைத்தரும் செய்தொழில் நன்மை, காரியங்களில் வீண்தடை, பெரியோர் சகாயம், வெளியிட பிரயாணம், குடும்ப பொறுப்பு, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயம், வியாபாரம் சிறிது வீழ்ச்சி உண்டாகும், மகர இராசியினருக்கு மனக் குழப்பம் தரும் மாதமாக அமையும்.



**கும்பம்**

அவிட்டத்துப் பின்னரை சதயம் புரட்டாதி முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது பார்வைகள் சிறப்பாக உள்ளதால் எதிலும் வெற்றிதரும். செய்தொழில் உயர்ச்சி, புதிய முயற்சிகள் பலிதம், பெரியோர் உதவி, பயனுள்ள செயல் உயர்ந்தோர் நட்பு, பணவரவு, குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயம் வியாபாரம் இலாபம் உண்டாகும். கும்ப இராசியினருக்கு குறையாத நன்மை தரும் மாதமிது.



**மீனம்**

புரட்டாதி நாலாங்கால் உத்திரட்டாதி ரேவதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, இராகு, கேது, பார்வைகள் சிறிது பாதிப்பை ஏற்படுத்தும். எதிலும் மிகவும் அவதானத்துடன் செயற்படுவது நல்லது. செய்தொழில் மந்தம், பணவரவு தடை, காரியங்களில் மனக் கஷ்டம், பெரியோர் உதவி, அன்னியர் நட்பு, குடும்ப நன்மை, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயம் வியாபாரம் மந்த நிலை, இலாபம் குறைவு உண்டாகும். விழிப்புடன் செயல்படுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Central Finance Group

# Central Industries PLC


312, Nawala Road, Nawala, Rajagiriya, Sri Lanka. Hotline: +94 11 530 3000 Tel: +94 11 530 3004 / 530 3005
Fax : 530 3031 / 4 E-mail: sales@nationalpvc.com / dnw@nationalpvc.com Website: www.nationalpvc.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









# சுவரால் சூழப்பட்ட பழைய கியூபெக் நகரம்

கனடாவின் கியூபெக் மாகாணத்தின் தலைநகரான கியூபெக் நகரின் அண்மையில் அமைந்திருப்பது பழைய கியூபெக் நகரமாகும். பொதுவாக குறிப்பிடுவதானால் பழைய கியூபெக் என்பது சுவர்களுக்குள்ளே அமைந்துள்ள நகரின் ஒரு பகுதியாகும். நகரின் ஏனைய பகுதிகளிலும் பழைமையான கட்டிட அமைப்புகள் இருந்தாலும் ''சுவர்களுக்கு மத்தியில்'' உள்ள பகுதிதான் பொதுவாக பழையது என குறிப்பிடப்படுகின்றது. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரெஞ்சுக் கண்டுபிடிப்பாளரான சம்ப்ளெயினால் கியூபெக் உரு வாக்கப்பட்டது. ஏராளமான கண்காணிப்புக் கோபுரங்கள், கதவு கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்களுடன் தனது அகழிகளைப் பாதுகாக்கும் ஒரு வட அமெரிக்க நகரம் பழைய கியூபெக் ஆகும். இவை அனைத்தும் இந்நகரைச் சுற்றி இன்றும் உள்ளன.

மேல் நகரம், கீழ் நகரம் என்றவாறு இப்பழைய நகரம் விளங்குகின்றது. செங்குத்தான மலைப் பகுதியில் உருவாக்கப்பட்ட மேல் நகரம் சமய மற்றும் நிர்வாக நிலையமாக விளங்குகின்றது. இங்கு தேவாலயங்கள், கன்னியர் மடங்கள் மற்றும் வேறு நினைவுச் சின்னங்களும் காணப்படுகின்றன. கீழ் நகரம் துறைமுகத்துடனும் மற்றும் அதன் பழைமையான மாவட்டங்களுடனும் அது ஒரு நகரத்தின் முழுமையான தோற்றத்துடன் காணப்படுகின்றது. அத்துடன் அரண்களை கொண்ட காலனித்துவ நகரத்திற்கு பழைய கியூபெக் நகரம் ஓர் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது.

18 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கியூபெக், கனடாவில் ஐரோப்பியர்களின் குடியேற்றத்தின் பிரதான கட்டங்களில் ஒன்றைக் காட்டுகின்றது. குறிப்பாக புதிய பிரான்சின் நகரமாக விளங்கி 1760 ஆம் ஆண்டுக்குப் பின் புதிய பிரிட்டிஷ் காலனியின் நகரமாகவும் விளங்கியது. நகரம் உரு வாக்கபபட்ட மிக ஆரம்பகாலத்தில் இருந்து அங்கு மிகப் பல மான இராணுவ மற்றும் நிர்வாகப் பிரசன்னத்தை உருவாக்கியி ருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த இராணுவப் பிரசன்னம் காரணமாக நகரின் விஸ்தரிப்பு மட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அந்த அரண் அமைப்புக்கள் நகர அமைப்புக்கு ஓர் இடையூறாக இருப்பதாகவும் தேவையற்றது எனக் கருதியும் அதனை அழித்துவிட வேண்டும் என பலர் கூறினர். இருப்பினும் ஆளுனர் டபரின் நவீன நகரை விஸ்தரிக்கும் அதேவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர் அரணின் குணாம்சத்தைப் பேணுவதில் வெற்றியும் கண்டிருந்தார். 1950 களில் நகரில் சீரழிவுகள் தோன்றிய போதும் 1970களில் இருந்து பழைய நகரம் ஒரு புனர் நிர்மாண காலத்தில் இருந்து வருகிறது.

நகரின் அகழிகள், அரண்கள் மற்றும் கடந்த நூற்றாண்டுகளில் அமைக்கப்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவை பழைய கியூபெக் நகரின் வளமான வரலாற்று இயல்பை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. முன்னாள் சந்ததியினரின் மரபு மற்றும் அந்த மாவட்டத்தின் அழகு ஆகியன குறிப்பாக அதனை தனித்துவமாக்குகிறது. 1985ஆம் ஆண்டு இந் நகரம் யுனெஸ்கோவினால் உலக புராதன இடமாக அங்கீகரிக்கப்பட்டது.அங்கு உள்ள பெரும்பான்மையான கட்டிடங்கள் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாயினும் சிலவற்றின் அமைப்பு 17ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாக உள்ளன. அத்துடன் று -சென்ற் ஜீன், று சென்ற்- ஆன், று டி புடவே உட்பட சில வர்த்தக வீதிகள் இங்கு தான் உள்ளன. பல நிலையங்கள் நகரின் மத்தியில் இன்றும் இருக்கின்றன. உதாரணமாக கியூபெக் நகர சபை; செமினறி டி கியூபெக், த உர்சுலின்ஸ் கன்னியர் மடம், மற்றும் அகஸ்டின் மடம் ஆகியன இங்கு அமைந்திருக்கின்றன.


பழைய கியூபெக் நகரம் உல்லாசப் பயணிகள் பெருமளவில் செல்லும் ஓர் இடமாக இருப்பதினால் அங்கு பயணிகள் விடுதிகள் பலவும் அமைந்துள்ளன. பெயர் பெற்ற சாட்டோ புரொன்ரினக் என்பதும் இங்குள்ளது. இங்கு வருபவர்களுக்கு தெரியாமல் நாம் பிரான்ஸ் நாட்டுக்கு வந்து விட்டோமோ என்று கூட எண்ணத் தோன்றும். அழகிய கட்டிடங்கள், தேவாலயங்கள், கபேக்கள், தனித்துவமான வியாபார ஸ்தலங்கள் ஆகியன அங்கு பார்வையாளர்களாக வருவோரைக் கவருவதுடன் அங்கு பலமுறை விஜயம் செய்யவும் தூண்டுகின்றன. பழைய கியூபெக் நகரையும் கீழ் நகரையும் கண்டுகளிக்க நடந்து செல்வதுதான் உகந்த வழியாகும். மொன்ற்மொறென்சி நீர்வீழ்ச்சி, லோபிறி கடற்கரை, டி ஓர்லியன்ஸ் ஆகிய அழகிய இடங்களைத் தரிசிப்பதை விடுத்தால் நகரில் வேறெந்த இடத்துக்கும் செல்ல வாகனங்களைப் பாவிக்க வேண்டிய தேவையில்லை. பிரதான பாராளுமன்ற கட்டிடத்தில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள றடிசன் ஹோட்டலில் தங்கியிருந்து இடங்களைப் பார்க்க வசதியாக இருக்கும். பழைய கியூபெக் நகரைச் சுற்றிப் பார்ப்பதானால் இரண்டு நாட்களாவது அங்கு நிற்க திட்டமிட வேண்டும். மற்றும் அங்கு ஏராளமான உணவகங்களும் உள்ளன.

தேசிய அசெம்பிளி என்று கூறப்படுகின்ற வியப்புத் தரும் கல்லினால் கட்டப் பெற்ற பாராளுமன்றம் 1877 ஆம் ஆண்டு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது இராச்சிய பாணியில் உருவாக்கப்பட்டதாகும். தற்சமயம் அங்கு இருபத்திரெண்டு வெண்கல உருவங்கள் காட்சிக்கு உள்ளன. இவை மாகாண வரலாற்றில் முக்கிய பங்கு வகித்த ஆண்கள் மற்றும் பெண்களுடையதாகும். அவற்றில் இரண்டு மிக முக்கியமானதாகும். ஒன்று ஈட்டியுடன் தோன்றும் மீனவன். மற்றது ஓர் ஆர்மீனியக் குடும்பம். இவற்றின் பக்கமாக உள்ள வட்டமான கல்படிகள் கட்டிடத்தின் பிரதான வாயிலுக்குச் செல்லுகின்றன. இக் கட்டிடத்தின் உட்பகுதியைப் பிரதானப்படுத்திக் காட்டும். சுற்றுப் பயணங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.


பாராளுமன்ற மலைப் பகுதியில் இருந்து பார்க்கும் போது கிராண்ட் அலீயின் ஆரம்பம், கதவுகள், பழைய நகரம், நகரைப் பார்த்து நிற்கும் கோட்டை, ஏபிரகாம் சமவெளிக்குச் செல்லும் நுழைவுப் பகுதி ஆகியன தெரியும். மெக்ஸிக்கோவின் வடக்கில் அமைந்த மிகப் பழைமையான நகரங்களில் ஒன்றாகவும் கோட்டை அமைக்கப்பட்டதும் சுற்றி சுவர் அமைக்கப்பட்டதுமான ஒரே நகரம் பழைய ''கியூபெக் ஆகும். இந்தச் சுவர் மூல நகரத்தைச் சுற்றி 4 கிலோ மீட்டர் தூரம் வரை செல்லும் இது உயரமான கல்லால் அமைக்கப்பட்டதாகும். அதன் நான்கு கதவுகளில் ஒன்றின் ஊடாகச் செல்லும் போது வேறு ஒரு காலத்திலும் வேறு ஓர் இடத்திலும் இருப்பதைப் போல உணர்வு ஏற்படும்.

இந்தப் பகுதி ஒரு விசேடமான பகுதி என்பதற்கு முதல் அறிகுறிகளாகத் தெரிவது ஏராளமான தேவாலய கோபுர முடிகள் உருவச் சிலைகள் பழைய கட்டிடங்களின் தனித்துவமான கட்டிடக் கலை அம்சங்கள், ஒடுக்கமான வீதிகள், ஆகியனவாகும். இவற்றில் பல டபரின் டெறசுக்கும் மகத்தான சென்.லோரன்ஸ் நதிப் பகுதிக்கும் இட்டுச் செல்கின்றன. இங்கு விஜயம் செய்வதற்கு முன்னர், சென்ற். ஆன் மற்றும் கோட்டை வீதிகளின் மூலையில் உள்ள தகவல் நிலையத்துக்குச் சென்று, அங்கு பார்க்க வேண்டிய இடங்களின் வரை படத்தையும் பெயர்ப் பட்டியலையும் பெற்றுக் கொள்வது நல்லதே. கியூபெக் நகரின் வரலாறு மிகவும் சுவாரஸ்யம் உள்ள ஒன்றாக விளங்குவதால் முதலில் கியூபெக் அனுபவங்களை அறிய பல்ஊடக அளிக்கை (Multimedia presentation) நிலையத்துக்குச் செல்லலாம். அங்கு நவ ஊடக வசதிகள் மூலம் கியூபெக் வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியும். இந்நகரின் இராணுவ வரலாற்றை அறிய வேண்டுமாயின் அதற்குரிய தகவல் நிலையத்துக்குச் சென்று பழைய கியூபெக் நகருக்காக நடத்தப்பட்ட நான்கு பிரதான யுத்தத்தை விளக்கும் விஸ்தாரமான ஒளி ஒலி காட்சிகளைப் பார்ப்பதன் மூலம் அதனைப் புரிந்து கொள்ள முடியும்.

பழைய கியூபெக் நகருக்கான விஜயம் டபரின் றெறஸில் தான் முடிவுறும். அங்குதான் சாமுவல் டி சம்ப்ளெயினின் அழகான உருவச்சிலை உள்ளது. றெறஸின் மேற்குப் பகுதி முடிவில் ஆளுனரின் ஒய்வு நடை பாதை ஆரம்பமாகிறது. இது ஆபிரஹாம் சமவெளிக்கு இட்டுச் செல்கிறது. கிழக்குப் பகுதி முடிவில் கீழ் நகரமான பெரிற் சம்ப்ளெயினுக்கு படிகள் இட்டுச் செல்கின்றன. இங்கு கண்ணாடியால் மூடப்பட்ட கேபிள்களில் 45 டிகிரி கோணத்தில் மேலே பயணம் செய்ய முடியும்.

கீழ்ப்பகுதியில் இருக்கும்போது படகைப் பிடித்து சென்ற் லோரன்ஸ் நதிக்கு குறுக்காகப் பயணம் செய்து கியூபெக் நகரம் நோக்கி மீளவும் விஸ்தாரமாகப் பார்க்கலாம். இப் பயணத்தின் இறுதி இடமாக அமையக் கூடியது கதீட்ரல் றொட்றி-டேம் டி கியூபெக் ஆகும். 1922 ஆம் ஆண்டு பழைய கதீட்ரல் எரிக்கப்பட்டு விட்டது. தற்போதைய அமைப்பு மிகவும் கவர்ச்சியான சமயச் சார்பற்ற கட்டிடக் கலை அம்சங்களைக் கொண்டு கியூபெக்கில் மிகவும் அழகான தேவாலயமாக விளங்குகின்றது. இளம் தேசமான கனடாவில் கியூபெக் நகரில் அதன் 400 ஆவது பிறந்த தினம் 2008ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது என்பது நம்புவதற்கு கஷ்டமான ஒன்றே தான்!

கங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் இலக்கிய செயற்பாடுகள் என்னை ஊக்குவித்தன'

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக படைப்பிலக்கியத்துறையில் ஈடுபட்டு உழைத்து வருபவர் வேலமுதன். யாழப்பாணம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறுகதைகளை எழுதிவருவதுடன் இலக்கியச் செயற்பாட்டிலும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டவர். 'ஓர்மம்' 'மாரீசம்' 'வைகறை' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளையும் மற்றும் 'வாழும் வழி' (நாடக நூல்) திருமண ஆற்றுப்படுத்தல் (சமூகவியல் நூல்) ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். 'தகவம்', 'மகவம்' ஆகியன இவர் செயற்பட்ட இலக்கிய அமைப்புகளாகும். இவரிடம் நாம் கலைக்கேசரிக்காக கேட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் வருமாறு :

**குரும்ப சிட்டியின் மூத்த மைந்தர்களுள் ஒருவரும் படைப்பாளியும் இலக்கிய செயற்பாட்டாளரும் ஆகிய தாங்கள் தங்களது உருவாக்கத்திற்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையும் ஒரு முக்கிய காரணமென குறிப்பிட்டுள்ளீர்கள். அது எப்படி சாத்தியமாயிற்று என்பதை விளக்கமாகச் சொல்வீர்களா?**


தங்களின் இக் கேள்வி உண்மையில் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஏனென்றால் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் பவள விழாக்காலம் இது. அதாவது 17.10.1934 அன்று தென்மயிலை மணிவாசக நூல் நிலைய மண்டபத்தில் ஈழகேசரி நா.பொன்னையாவின் தலைமையில் சன்மார்க்க சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இன்றும் மூன்று மாதங்களில் அதன் பவள விழா ஆண்டைக் கடக்கும் இத்தருணத்தில் அதனை நினைவு கூர வேண்டிய கடப்பாடு எம் சமுதாயத்திற்கு உண்டு. குரும்பசிட்டி இன்னும் மீள் குடியேற்றத்திற்கு உரிமை வழங்கப்படாதுள்ளதாலும் குரும்ப சிட்டி வாசிகள் இலங்கையின் பல்வேறு பாகங்களுக்கு இடம்பெயர்ந்தும் உலகின் பல்வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்தும் உள்ள அவல நிலையில் ஒரு பொறுப்பு வாய்ந்த மாசிகை 'கலைக் கேசரி'என்ற முறையில் அதனை நினைவு கூர முன்வந்தமைக்கு உளமார்ந்த நன்றியை நவில்கின்றேன். அடுத்து சில முக்கிய தகவல்களை விளக்கமாகத் தர நான் கடமைப்பட்டுள்ளேன்.

குரும்பசிட்டி என்ற பெயர் சட்டரீதியாக 1962 ஆம் ஆண்டு தான் பதிவு செய்யப்பட்டது. அதற்கு முன் மயிலிட்டி தெற்கு அதாவது தென்மயிலை என அழைக்கப்பட்டது. அடுத்து ஈழ கேசரி நா. பொன்னையாவைப் பற்றி. 1934 இல் குரும்பசிட்டியில் பல சமூக சேவா சங்கங்கள் இயங்கின. அவற்றையெல்லாம் ஒன்றிணைத்துக் குரும்பசிட்டி சன் மார்க்கசபை என்ற பலம் வாய்ந்த ஒரு சங்கமாக்க ஈழகேசரி பொன்னையாவால் தான் முடிந்தது. அதற்கான காரணம் அவர் குரும்பசிட்டியில் மாத்திரமன்றி ஈழவள நாட்டிலேயே பெரும் புள்ளியாகத் திகழ்ந்தமையே. கவிஞன் சோ.தியாகராசனின் வார்த்தையில் சொல்லுவதாயின்


''பாலர்க்கு வேண்டும் பழமொழி பாட்டு
பக்குவ மான தமிழிற் கவிதை
சாலச் சிறந்தவர் கட்டுரைக் கோவை

**எழுத்தாளர் வேல்அமுதனுடன்
ஒரு நேர்காணல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் மலர்ந்த சிறுகதைச் செல்வம்
கூலிக்கு மாரடிக்காத முயற்சி
குணம்பல கொண்டு மலர்ந்த அரும்பு
பொதுச்சரக்கல்ல ஆண்மையில்
வாழ்ந்த பொன்னையா வள்ளல் அளித்து
மறைந்தான்''





ஈழகேசரிப் பொன்னையா சுன்னாகத்தில் 1926ஆம் ஆண்டு முதல் தனலக்குமி புத்தகசாலை என்றொரு புத்தகசாலையை நடத்தினார். வடபுலத்தின் முதற் தமிழ் வாரப் பத்திரிகையான ஈழகேசரியை 1930 இல் ஆரம்பித்தார். அது 25 வருடங்கள் நடந்தது, கேசரி என்றொரு ஆங்கில வார இதழையும் சில காலம் நடத்தினார். 1939 ஆம் ஆண்டு முதல் வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் என்ற பென்னம்பெரிய பாடநூற்பதிப்பகத்தையும் மிகத் திறம்பட நடத்தினார். நான் ஈழகேசரிப் பொன்னையாவின் தமிழ்ப் பணி பற்றிப்பேசிக்கொண்டு போனால் என்னிடம் விடுத்த கேள்விக்கான விடையிலிருந்து விலகிச் சென்று விடுவேன் என்ற அச்சத்தால் அதனை இத்தோடு விடுத்து நேரே என் முன் வைத்த கேள்விக்கு வருகிறேன்.

ஈழகேசரி நா. பொன்னையா சன்மார்க்கசபை தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ந்து பதினைந்து வருடங்கள் அதன் ஏகோபித்த தலைவராகக் கடமையாற்றிய காலத்தில் அதாவது நான் சிறுவனாக ஊரில் இருந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை இனிச் சுருக்கமாகத் தருகிறேன்.

முக்கிய மூன்று விடயங்களைப் பற்றிசொல்ல வேண்டியவன் ஆகிறேன். ஒன்று இலக்கிய உரைகள், இரண்டு மணிவாசகசாலையும் நூலகமும் மூன்று சன்மார்க்க இளைஞர் சங்கம்.

நாங்கள் அறிஞர்களைத் தேடிச் சென்று சந்திக்கும் தேவை அன்று எங்களுக்கு இருக்கவில்லை. தமிழக, தாயக அறிஞர்கள் சன்மார்க்க சபைக்கு வருவதுண்டு. பண்டிதர் வே. மகாலிங்கசிவம், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, வித்துவ சிரோன்மணி, சி.கணேசையர், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், கலைமகள் ஆசிரியர் கி.வா ஜெகந்நாதன், திரு, திருமதி இளந்திரையன் முதலியோரை நேரிற்காண அவர்களின் உரைகளைக்கேட்க அவர்களோடு கலந்துரையாட சன்மார்க்கசபை ஏற்பாடு செய்வதுண்டு.




அடுத்த விடயம் தமிழில் வெளிவரும் தலைசிறந்த சஞ்சிகைகளை, நூல்களை வாசிக்கும் வசதி எமக்கு இருந்தது. அம்புலிமாமா, கற்கண்டு, பாப்பா, கண்ணன், கல்கி, கலைமகள், மஞ்சரி முதலியவை மற்றும் தரமான தமிழ் நூல்களை மணிவாசக நூல் நிலையத்திற் பெற்று வாசிப்பதுண்டு.

மூன்றாவது விடயம் சன்மார்க்க சபையின் இன்னொரு உபபிரிவான சன்மார்க்க இளைஞர் சங்கம். அதுவும் முறையாக திறமையாக இயங்கியது. அதன் முக்கிய பணிகளுள் ஒன்றாக சன்மார்க்க தீபம் என்ற கையெழுத்துப் பத்திரிகையை வெளியிட்டு வந்தது. நான் சன்மார்க்க தீபம் ஆசிரியராக கடமை ஆற்றியிருக்கிறேன்.

ஒரு நாள் மறக்க முடியாத அனுபவம். அவ்வழியாக வந்த அளவையூர் பிரபல கவிஞர் செ. கதிரேசபிள்ளை எமது சன்மார்க்க தீபம் பத்திரிகையைப் பார்வையிட்டு அது அனைத்துலகத் தமிழ் கையெழுத்துப் பத்திரிகைகள் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கும் தரம் மிக்கது எனப் பத்திரிகையின் பார்வையாளர் குறிப்புரைப் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பதைக் கண்ணுற்றேன். அதை வாசித்த எனக்கு, என் மகிழ்ச்சிக்கு கங்குகரை இருக்கவில்லை. அதனை நான் எனது எழுத்திற்கு கிடைத்த அங்கீகாரமாக ஏற்று மகிழ்ந்தேன். இந்நேரம் எழுதுவதற்கு ஆவேசத்தை ஏற்படுத்திய சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அனுமதிப்பீர்களானால் அச்சம்பவத்தை அப்படியே சொல்கிறேன்.

**தயவு செய்து கூறுங்கள் .**

எனது பாலப் பருவத்தில் ஒரு நாள் சன்மார்க்க சபையினர் தொண்டமானாறு செல்வச் சந்நிதி தேர்த் திருவிழா மகோற்வத்திற்கு காலை 5.00 மணியளவில் பாத யாத்திரை ஒன்றுக்கு ஒழுங்கு செய்திருந்தனர். அந்த பாத யாத்திரையினருள் நானும் ஒருவன். பண்டத்தரிப்பு - அச்சுவேலி வீதியில் ஒட்டகப்புலம் சம்பந்தர் வைத்திய சாலையைக் கடந்து, அப்பால் ஒரு சர்க்கரைத் தண்ணீர்ப் பந்தல். களைப்பு மீதியால் தாகசாந்திக்காக முண்டியடித்துக் கொண்டு ஓடிச் சென்றேன். 'ஐயா, சக்கரைத் தண்ணி' என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்க்கரைத் தண்ணீர் வழங்கலுக்குப் பொறுப்பாக நின்ற பெரியவர் தம்பி ''உள்ளேயோ வெளியேயோ'' என வினாவினார். பெரியவரின் பேச்சின் தார்ப்பரியம் அந்நேரம் எனக்கு விளங்கவில்லை. ஏதாவது சொல்லி, எப்படியாவது சர்க்கரைத் தண்ணீரைப் பெற்றால் போதுமென நினைத்த எனக்கு யானை மார்க் சோடா வெற்றுப்போத்தலில் வார்த்து ஏனோ தானோ எனத் தரப்பட்டது. என்னைத் தொடர்ந்து வந்தவர்கள் 'உள்ளே என கூற அவர்களுக்கு நீராகாரம் தகர மூக்குப்பேணிகளில் மிகப் பக்குவமாகப் பரிமாறப்பட்டது.

'உள்ளே' வெளியே என்பன சாதாரண சொற்களல்ல, பரிபாஷை; சமூகத்தின் கொடூர ஒடுக்குமுறையின் வெளிப்பாடு என்பனவற்றை பின்னேதான் விளங்கிக் கொண்டேன். சமுதாயம் இவ்வளவு பாரதூரமாகப் பாழ்பட்டுக்கிடக்கிறதே என நினைத்தபோது சமூக அமைப் பின் கட்டுக்கடங்காச்சீற்றம் உண்டானது. கீழ்மையை உடைக்கவேண்டுமென கிளர்ந்தெழுந்தமையே எனது எழுத்தும், செயற்பாடும் ஆகும்.

எனது முயற்சியில் உருவாகி, உருப்படியான சேவை யாற்றிய அமைப்புக்களே, சங்கப்லகை (நூலகம்) இலங்கை அறிவியக்கம் (அறிவகம்) தமிழ்க் கலைஞர் வட்டம் (தகவம்) மதி கலைஞர் வட்டம் (மகவம்) மதி அக் கடமி (கல்வி நிலையம்) வேல் அமுதன் திருமண ஆலோசனையகம் (திருமணசேவை)

நான் எழுதி இதுவரை வெளிவந்த நூல்கள் அறுவடை (நூலகம்) வைகறை (சிறுகதைத்தொகுப்பு) மாரீசம்(சிறு கதை தொகுப்பு சாகித்திய தேசிய விருது பெற்ற நூல்) வாழும் வழி (நாடகத்தொகுப்பு) ஓர்மம் (சிறுகதைத் தொகுப்பு) திருமண ஆற்றுப்படுத்துதல் அனுபவங்கள் (சமூகவியல் நூல்)



யத்தை இரத்தினச் சுருக்கமாகத் தரவேண்டுமாயின் எனது உருவாக்கத்திற்கு முக்கிய காரணங்களுள் ஒன்றாக அமைந்தது அன்றைய குரும்பசிட்டியின் சூழல். குறிப்பாக குரும்பசிட்டி சன்மார்க்சபையின் இலக்கியச் செயற்பாடுகள் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

**கடந்த சில ஆண்டுகளாக தினக்குரல், ஓலை, ஞானம், செங்கதிர், மல்லிகை முதலிய பத்திரிகை களில் குறுங்கதைகள் எழுதி வருகின்றீர்கள். சிறுகதை, கட்டுரை,நாடகம், விவரணம் என எழுதி வந்த நீங்கள் இன்று அதிகமாக குறுங்கதைகளை எழுதுகிறீர்களே அதற்கு ஏதும் காரணம் உண்டா?**

நல்ல கேள்வி. இன்று நான் குறுங்கதை வடிவத்தைத் தெரிந்தெடுத்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

ஒன்று இன்றைய அவசர உலகின் தேவை குறுங்கதை தான்! மற்றைய வடிவங்கள் சாதாரண வாசகனால் மேலோட்டமாகப் பார்க்கப்படுகின்றனவே ஒழிய, பரவலாக-அக்கறையாக முழுமையாகப் படிக்கப்படுவது இல்லை. இதை நான் தற்பாதுகாப்புக்காகவோ, மேலெழுந்த வாரியாகவோ கூறவில்லை.

நான் ஒரு திருமண ஆற்றுப்படுத்துநர். நூற்றுக்கணக்கான மக்களைச் சந்திப்பவன். ஆய்வு நோக்கில் எத்தகைய எழுத்தை அதிகப்படியாக வாசிக்கின்றீர்கள்? எனக் கேட்டேன். நெருக்கடியான இன்றைய காலகட்டத்தில் தலையங்கங்களை - துணுக் குகளை குறுகிய வடிவ ஆக்கங்களை குறுங்கதைகளை மட்டும்தான் வாசிக்க முடிகிறது. பிறகு வாசிப்போம் பின்னர் வாசிப்போமென சேர்த்து வைப்பவை வாசிக்க நேரம் ஒதுக்க முடியாமல் அப்படியே பழைய பத்திரிகை கொள்முதல் செய்பவனிடம் விற்பனையாகிப் போகின்றது' என்ற உண்மையை அறியக்கூடியதாக இருந்தது. எனவேதான் செய்திகள் நேரே மக்களைப் போய்ச்சேர வேண்டும் என்ற அவாவில் அதிகப்படியாக குறுங்கதைகளை எழுதி வருகின்றேன். இதுவரை 75 குறுங்கதைகளை எழுதியுள்ளேன்.

மேலும் இறுதியாக ஒன்றைக் கூறவிரும்புகின்றேன். எமது கலைகளை கலாசாரத்தை தனித்துவத்தைப் பேணிக்காப்பாற்ற முன்னெடுக்க தங்கள் ஸ்தாபனம் மற்றும் தங்கள் கலைக்கேசரி ஆசிரிய குழு எடுக்கும் முயற்சி அபாரம்! வாழ்க.

**நேர்முகம் : அன்னலட்சுமி இராஜதுரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ARRUJINA
JEWELLERY (Pvt) Ltd

Arrujina

47-A, செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொ.பே: 2440042. பெக்ஸ்: 2387606
(இலங்கையில் எப்பாகத்திலும் கிளைகள் கிடையாது)



உங்கள் வெளிநாட்டு
நாணயத்தாள்களை மாற்ற
சிறந்த இடம்.

# SARRITA

SJ

42, செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொ.பே: 2325485. பெக்ஸ்: 2435298

அரச மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணய மாற்றுனர். தொ.பே: 2435361


noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரத்தில் இராமர்

இராமனும், சீதையும், இலட்சுமணனும் காட்டில் வாழ்ந்தபோது, இலங்கை அரசன் இராவணனின் தங்கையான சூர்ப்பனகை இராமன் மீது ஆசை கொண்டாள். இலட்சுமணன் அவளது மார்பகங்களையும், மூக்கையும் வெட்டித் துரத்திவிட்டான். இதனால் கோபமடைந்த அவள் தனது அண்ணனிடம் முறையிட்டாள். தனது தங்கைக்கு நேர்ந்த நிலையையிட்டுச் சினம் கொண்ட இராவணன் இராமனைப் பழிவாங்க எண்ணிச் சீதையைக் கவர்ந்து புட்பகவிமானத்தில் கொண்டு வந்து இலங்கையில் அசோகவனத்தில் சிறை வைத்தான்.

சீதையைத் தேடி அலைந்த ராமனுக்கும்,லட்சுமணனுக்கும் வானரர்களின் அரசனான சுக்கிரீவனின் நட்புக் கிடைத்தது. சுக்கிரீவனின் அமைச்சனும் காற்றுக் கடவுளின் மகனுமான அனுமன் இராமனிடம் பெரும் பக்தி கொண்டிருந்தான். சுக்கிரீவனின் ஆணைப்படி வானரப் படைகள் பல திசைகளிலும் சென்று சீதையைத் தேடின. அனுமன் கடலைத் தாண்டி இலங்கைக்குச் சென்றான். அங்கே அசோக வனத்தில் சிறையிருந்த சீதையைக் கண்டான். அனுமன் மூலம் சீதை இருக்கும் இடத்தை அறிந்து கொண்ட இராமன், வானரப்படைகளின் உதவியோடு இலங்கைக்குச் சென்றான். இலங்கைக்கு எவ்வழியால் சென்றான்? இலங்கையில் எங்கெங்கு சென்றான்? இந்த இடங்களின் இன்றைய நிலை என்ன? மற்றும் அவற்றின் வரலாற்று பின்னணிகளை யாத்திரிகர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இக்கட்டுரைத் தொடர் அமையவிருக்கின்றது.

இராமர் இலங்கைக்கு புறப்படும்முன் இராமேஸ்வரம் - தனுஸ்கோடி பகுதிகளில் போருக்கான மிகப்பெரிய ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இராமர் பாதம், கோதண்டேஸ்வரர் ஆலயம் போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இராமராலும் அவரது பரிவாரங்களாலும் பயன்படுத்தப்பட்டதாக இதிகாச ஐதீகங்கள் இயம்புகின்றன.

இராமாயணத்தில் கூறப்படும் இலங்கை இன்றைய இலங்கைத் தீவைக் குறிக்கிறது என்பதே பெரும்பாலோரது கருத்து. எனினும், இதை மறுத்து இந்தியாவிலேயே உள்ள வேறு இடங்களை இராமாயணத்தின் இலங்கையாகக் கொள்பவர்களும் உள்ளனர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படுவனவும்இ இராமர் பாலம் என்று அழைக்கப்படுவனவுமான ஆழம் குறைந்த திட்டுக்களே வானரப் படைகளால் அமைக்கப்பட்ட பாலம் எனச் சிலர் கருதுகின்றனர். அத்துடன் இலங்கையின் மையப் பகுதியில் நுவரெலியா என்னும் நகருக்கு அண்மையில் உள்ள சீதா எலிய என



இராமர் பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் இடமே சீதையைச் சிறைவைத்த அசோகவனம் என்கின்றனர். இவை எல்லாவற்றையும் விடஇ இராமாயணம் என்பது கட்டுக்கதையே எனக் கூறுவாரும் உள்ளனர்.

குமரிக்கோடு, தனுஷ்கோடி, கோடிக்கரை ஆகிய மூன்றும் ஒரு வில்லின் அமைப்பைப் போலக் காட்சியளிக்கும். குமரிக் கண்டம் என்பது வில் வடிவில் அமைந்திருப்பதாகப் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. புராணங்கள் குறிப்பிடுகின்ற இத்தகைய விவரங்களை வரலாற்றுடன் தொடர்புபடுத்த முடியுமா என்பது முதன்மையான ஒரு கேள்வியாகும். குறிப்பாக, இராம சேது என்றும் இராமன் சார்பாக வானரப் படைகளால் கடலை அடைத்து இலங்கை வரையிலும் அமைக்கப்பட்ட பாதை அல்லது பாலம் என்றும் கூறப்படும் கதைகளில் எந்த அளவுக்கு வரலாற்று உண்மை பொதிந்துள்ளது என்ற வினாவுக்கு விடை தேடும் கடமை தொல்லியல் ஆய்வாளர்களுக்கும் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் உண்டு.

இக்கதைகள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் வழங்கத் தொடங்கிவிட்டன என்பதற்கு மேலே குறிப்பிட்ட அகநானூற்றுப் பாடல் சான்றாக இருக்கிறது. வரலாறு என்பது மிகவும் சிக்கலானது. வரலாற்று ஆய்வு

சமூகத்தில் மனிதன் சில கொள்கைகளை ஏற்பதினாலும் அவற்றில் நம்பிக்கை வைப்பதினாலும் ஒரு மேலான நிலைக்கு ஆளாகிறான். அதற்குக் காரணமாக அமைவது சமயமே. சமயத்தினை சார்ந்து வாழ்பவன் ஆதலால் சமயத்தினைச் சார்ந்து ஒழுக்கமானவன் ஆகின்றான். இன்ப துன்பங்களை ஏற்பதால் அவனது மனம் மாறுகிறது. ஒவ்வொருவனும் கொள்கைவாதியாக மாறுவதால் ஒழுங்கான மனிதனைச் சமயம் உருவாக்கிக் காட்டுகின்றது.

பழமை : 500-1000 வருடங்களுக்கு முன் புரட்டாசி கடைசி சனிக்கிழமையன்று விசேஷ பூஜை, ஆனியில் விபீஷணர் பட்டாபிஷேகம். ராமர் விபீஷணனுக்கு இலங்கை வேந்தனாக பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்ட தலம்.

பரிந்துரைந்த ஆஞ்சநேயர்: வங்காளவிரிகுடா, மன்னார்வளைகுடா ஆகிய இரு கடல்களுக்கும் மத்தியிலுள்ள தீவில் இக்கோயில் அமைந்துள்ளது. மூலஸ்தானத்தில் ராமர், சீதை மற்றும் லட்சுமணர் காட்சி தருகின்றனர். ராமர் கையில் கோதண்டத்துடன்(வில்) இருப்பதால்இ 'கோதண்டராமர்' என்றும், தலம் 'கோதண்டம்' என்று அழைக்கப்படுகிறது.

ராமரை ஆஞ்சநேயர் வணங்கும் காட்சியை எல்லாக் கோயில்களிலும் காண முடியும். ஆனால்இ இங்கு ராமரின் அருகில் விபீஷணன் வணங்கியபடி நிற்கிறான். இது அபூர்வமான காட்சியாகும். அளவில் சிறிய இந்தக்கோயிலில், கருடாழ்வாரும், முன் மண்டபத்தில் ராமானுஜரும் மட்டும் உள்ளனர். இராவணன் அவனது கருத்தை ஏற்க மறுத்ததோடு, காலால் எட்டி உதைக்கச் சென்றான். எனவே, விபீஷணன் ராவணனைப் பிரிந்து ராமபிரானிடம் வந்தான். ராமபிரான் ராமேஸ்வரத்தில் தங்கியிருந்ததை அறிந்த அவன் அவரைச் சந்தித்து ஆசிபெற்றான். அவனது நற்குணத்தை அறிந்த ராமன்,




பொது ... நூலகம்
யாழ்ப்பாணம்.
லக்ஷ்மண தீர்த்தம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையை வெற்றி பெறும் முன்பாகவே முறைப்படி விபீஷணனுக்கு இலங்கை வேந்தனாக பட்டாபிஷேகம் செய்து வைத்தார். இந்த நிகழ்வு இத்தலத்தில் நிகழ்ந்ததாக ஐதீகம்.இதனடிப்படையில் இங்கு ராமருக்கு கோயில் எழுப்பப்பட்டது. கோதண்டராமர் என்ற திருநாமம் அவருக்குச் சூட்டப்பட்டது.


இரண்டு ஆஞ்சநேயர் தரிசனம்: இக்கோயிலில் ஆஞ்சநேயர் சன்னதி, எட்டு பட்டைகளுடன் கூடிய விமானத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. மூலஸ்தானத்தில் அபய ஆஞ்சநேயர், வாலறுந்த ஆஞ்சநேயர் என இரண்டு மூர்த்திகள் அருகருகில் காட்சி தருகின்றனர். இவ்வாறு 'இரட்டை ஆஞ்சநேயர்'களை இங்கு தரிசிக்கலாம். அபய ஆஞ்சநேயர் பீடத்திற்கு கீழே ஒரு கோடி 'ராமரக்ஷ??' மந்திர எழுத்துக்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது சிறப்பு. ஆஞ்சநேயருக்கு முன்புறம் ராமர் பாதம் இருக்கிறது. இத்தல ஆஞ்சநேயர் பக்தர்களின் பயத்தை போக்கி காத்தருள்பவர் என்பதால், 'அபய ஆஞ்சநேயர்' என்றழைக்கப்படுகிறார். வெள்ளிக்கிழமைகளில் இவருக்கு விசேஷ பூஜை செய்யப்படுகிறது. அன்று தேங்காய், வெல்லம், அவல் சேர்ந்த கலவையை விசேஷ நைவேத்யமாக படைத்து வழிபடுகின்றனர்.

சுயம்பு ஆஞ்சநேயர்: அளவில் சிறிய கோயில் இது. ஆஞ்சநேயர் உருவாக்கிய தீர்த்தம், கோயிலுக்கு பின்புறம் உள்ளது. கோயில் முகப்பில் கடல் மணலில் உருவான சுயம்பு ஆஞ்சநேயர் காட்சி தருகிறார். இவருக்கும் வால் கிடையாது. இந்த ஆஞ்ச்நேயர் சிலை, கடலில் கிடைக்கும் சிப்பி பதிந்த நிலையில் இருப்பது வேறெங்கும் காணக்கிடைக்காத அதிசயம்.கோயில் வளாகத்தில் தலவிருட்சம் அத்தி இருக்கிறது. இம்மரத்தில் இளநீரை கட்டி, ஆஞ்சநேயரிடம் வேண்டிக்கொள்ளும் வழக்கம் இருக்கிறது. வேண்டுதல் நிறைவேறியதும் ஆஞ்சநேயருக்கு,வேறு இளநீரால் அபிஷேகம் செய்து வழிபடுகின்றனர். உக்கிரமாக இருந்து சிவலிங்கத்தை தகர்க்க முயன்றவர் என்பதால் குளிர்ச்சிப்படுத்தும்விதமாக இவ்வாறு செய்கிறார்கள். அதிசயத்தின் அடிப்படையில்: கடல் மணலில் உருவான சுயம்பு ஆஞ்சநேயராக அருள்பாலிக்கிறார் சுக்ரீவன் சன்னதியுடன் மட்டும் அமைந்த, மிகச்சிறிய கோயில் இது. கோயிலுக்கு வெளியில் சுக்ரீவர் உண்டாக்கிய தீர்த்தமும், எதிரே வங்காள விரிகுடா கடலும் இருக்கிறது.

வானரனாகிய வாலி, தனது சகோதரன் சுக்ரீவனின் மனைவியை அபகரித்ததோடு, அவனை விரட்டியடித்தான். சுக்ரீவன், ராமர் சீதையை மீட்பதற்கு உதவி செய்தான். பின்பு சுக்ரீவனுக்காக ராமர், வாலியை மறைந்திருந்து கொன்றார். இவ்வாறு வாலி அழிவதற்கு, சுக்ரீவனும் ஒரு காரணமாக இருந்ததால் அவனுக்கு தோஷம் பிடித்தது.தோஷம் நீங்க இவ்விடத்தில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, சிவனை வழிபட்டு விமோசனம் பெற்றான்.

**- மிருணாளினி**


அனுமர் சந்நிதி


சீதா தீர்த்தம்


கோதண்ட இராமர் கோவில்


இராமர் தீர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கலைத்துவ மண் செழிப்புடன் சுடுமண் சிலைகள்

ஆதிமனிதனின் கைகளில் புழங்கிய மண்பாண்டங்களின் வேறு வடிவங்கள் தான் 'டெரகோட்டா' பொம்மைகள். அலங்கார பொருட்களில் ஒரு முக்கிய இடத்தை 'டெரகோட்டா' பொம்மைகள் பெற்றுவருகிறது. இயற்கை உணவு, மூலிகை சாய ஓவியங்கள் என்ற வரிசையில், 'டெரகோட்டா' என்னும் சுடுமண் பொம்மைகள் சூழலுக்கு உகந்த அலங்கார வடிவமாக முக்கியத்துவம் பெற்று வருகிறது.

களிமண்ணை பிசைந்து, சுழலும் சக்கரத்தின் மேல் வைத்து, கைவினைக் கலைஞரின் விரல்கள் தரும் நெளிவு, சுழிவினால் ஹேப்பிமேன், பூச்சாடி, பானை, ஒட்டகம், விநாயகர், செட்பானை, லட்சுமி என்று வடிவங்கள் உருவாக்கம். பெறுகின்றன. மெல்லிய மூங்கில் குச்சி, பென்சில் முனை, நாணயம் கொண்டு இதில் நுண்ணிய வேலைப்பாடுகள் செய்யப்படுகிறது. இது நிழலில் உலர்த்தப்பட்டு, சூளையில் அனலில் சுட வைக்கப்பட்டு, உருவாக்கம் நிறைவு பெறுகிறது. பின்னர் டெரகோட்டாவின் சிவப்பு வர்ண அடையாளம் பூசப்பட்டு விற்பனைக்கு வருகிறது.

இந்தியாவின் தமிழ்நாடு, ஆந்திரா, மேற்கு வங்காள மாநிலங்களில் உற்பத்தியாகும் டெரகோட்டா பொருட்கள் அதிக கலைநுட்பத்துடன் தயாரிக்கப்படுபவை. இந்தியாவிற்கு வருகை தரும் வெளிநாட்டினர் விரும்புவது 'யானை' உருவங்கள் தான். இயற்கை விரும்பிகள் களிமண் மூலமான டெரகோட்டாவுக்கு பலத்த ஆதரவு தருவதால் சிங்கப்பூர், மலேசியா, லண்டன் போன்ற பல நாடுகளில் இந்திய டெரகோட்டா கலைநுட்பம் அலங்கரிக்க தொடங்கியிருக்கிறது. எல்லாம் இயந்திரமயமான காலத்தில் சோர்ந்து போயிருந்த பல கைவினைக் கலைஞர்களின் வாழ்வு மேம்பட தொடங்கி உள்ளது. தேவை அதிகரிப்பதால் அச்சு, மண் அரைக்கும் இயந்திரம், களிமண்ணை தூளாக்கும் இயந்திரம், வர்ணம் பூச ஸ்பிரேயர் போன்றவை டெரகோட்டா பொம்மைகளை தயாரிப்பை எளிமையாக்க வந்து விட்டன. மேலும் டெரகோட்டாவுக்கு உரிய சிவப்பு வர்ணத்துக்கு பதில் பச்சை, கருப்பு, சில்வர், மெட்டல் வர்ணங்களும் பூசப்படுகின்றன. ஆனாலும் வடிவங்களில் நுண்ணிய வேலைப்பாட்டை டெரகோட்டா கலைஞரின் கை விரல்கள் தான் உருவாக்குகின்றன.

அபூர்வமானதாக இருந்த இவை அழகான, விலை குறைந்த அலங்கரிப்பு பொருளாக மாறி வருவதால், வருங்காலத்தில் வீட்டின் உள், வெளி அலங்காரத்தில் டெரகோட்டாவுக்கு முதலிடம் இருக்கும் என்கிறார்கள். இதன் வடிவமைப்பில் தமிழ்நாட்டின் திண்டுக்கல் மாவட்ட சாணார்பட்டி வட்டார களஞ்சியம் பெண்கள். முன்னணியில்திகழ்கின்றனர்.

- **தரண்சிங்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சை பெரிய கோயில் 1000 நடனக் கலைஞர்களின் அற்புத நடன நிகழ்வு










தஞ்சைப் பெரிய கோயிலின் ஆயிரமாம் ஆண்டு நிறைவு விழா கடந்த செப்டெம்பர் 22 முதல் 26 வரை சிறப்பாக நடைபெற்றது. இதில் 1000 கலைஞர்கள் பங்குபற்றிய பரதநாட்டிய நிகழ்ச்சி விசேட அம்சமாகும். இந்நாட்டிய நிகழ்ச்சிக்கு பத்மஸ்ரீ பத்மா சுப்ரமணியம் தலைமைதாங்கியதுடன், தாமும் நடனத்தில் பங்குகொண்டார். இந்நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி பங்கு கொண்டு உரையாற்றினார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாசகர் மடல்

## வரவேற்கத்தக்க முயற்சி

தங்களுக்கு ஆசிர்வாதங்களும் வணக்கங்களும்,

'கலைக்கேசரி' நான்கு இதழ்கள் வாசிக்கக் கிடைத்தன. கலாசார இதழாக பயனுள்ள பல விடயங்களோடு வருதல், குறிப்பாக வளரும் இளம் சமூகத்திற்கு, எம்மினத்தின் கடந்த கால வரலாற்றை உணர்த்தும் வகையில் அமைந்திருப்பது அபாரம் என்றே சொல்லலாம். எம்மினத்தார் புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து வரும் நிலையில், இம்மாதிரியான ஒரு முயற்சி வரவேற்கதக்கது. 'கலைக்கேசரி' யை மனதார வாழ்த்துகிறேன். தங்கள் பணி மென்மேலும் சிறப்பாகத் தொடரட்டும்.

**யோகாபாலச்சந்திரன்**
*கனடா.*

## மகிழ்ச்சி தரும் 'கலைக்கேசரி'

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். கடந்த ஆறு மாதங்களாக உங்கள் 'கலைக்கேசரி' இதழ்களைப் பார்வையிட்டு வருகிறேன். அதில் , கலை, பண்பாடு, கலாசாரங்களைப் பேணும் கட்டுரைகள் வெளிவருவதைப் பார்த்து மகிழ்ந்தேன். தங்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.

**க. நரேந்திரன்**
Hounslow
Middlesex TW3.

## வியப்பில் ஆழ்ந்தேன்

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம் பல, உங்கள் 'கலைக்கேசரி' இதழ்கள் சிலவற்றை பார்வையிடும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. உண்மையில் நான் வியப்பில் ஆழ்ந்து போனேன். வடிவத்திலும், விடயதானத்திலும் அருமையாக பயன் தரத்தக்கதாக மிளிர்கிறது. தமிழுக்கு அயராத பணியாற்றி வரும் வீரகேசரி நிறுவனத்தின் இம்முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கது.

**எம். பாலசுந்தரம்**
*திருமலை*

## கவர்ந்திழுக்கும் 'கலைக்கேசரி'

இலங்கையிலிருந்து வெளிவரும் 'கலைக்கேசரி' சஞ்சிகையை தமிழகத்தில் எனக்கு பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. அச்சஞ்சிகை முதல் பக்கம் முதல் கடைசி பக்கம் வரையில் உள்ள கலைச் செய்திகள், இலக்கியம், திருத்தலவரலாற்றுச் செய்திகள் அனைத்தும் தமிழக மக்களைக் கவரக்கூடியனவாக இருக்கின்றன. முக்கியமாக தமிழகத்திலிருக்கும் புண்ணியஸ்தலங்களின் வரலாறுகளை இச்சஞ்சிகையின் ஆசிரியர் குழு மிக நுட்பமாக அறிந்து தமது எழுத்தாற்றலால் வடிவமைத்து இலங்கை மக்களுக்கும் - தமிழக மக்களுக்கும் அறியத்தருவது மிகவும் வரவேற்கத்தக்கதாக உள்ளது. கலைக்கேசரி சஞ்சிகையின் தலைமை ஆசிரியர் அவர்களுக்கு எனது உணர்வுப்பூர்வமான வாழ்த்தையும், அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வாழ்க! வளர்க! 'கலைக்கேசரி'*
**மணவை அசோகன்**
*சென்னை - தமிழ் நாடு*

## கலையம்சத்துடன் கலைக்கேசரி

கலைக்கேசரி ஆசிரியருக்கு வந்தனங்கள் பல.
எம் இளைய சமுதாயம் அறியாத பல விடயங்களை ஆக்கபூர்வமாக ஆராய்ந்து, அதனுடன் வண்ணமயமான கலை நுணுக்கங்களையும் கொண்டு வடிவமைத்து பார்ப்போர் வியக்கும் வகையில் கலை, கலைசாரம், பண்பாடு என யாவற்றையும் உள்ளடக்கி கலைக்கேசரியை அளிப்பது மகிழ்ச்சிக்குரியது.
இந்த மாத இதழ் இன்னும் எத்தனை புதுமைத் தகவல்களை அள்ளிக் கொண்டு வரும் என்று எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றேன். உங்கள் பணி வளர்க! என்று வாழ்த்தும் கலைக்கேசரியின் வாசகி

**எஸ். சுமித்ரா**
*அப்புத்தளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொதுசன நூலகம்
யாழ்ப்பா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt) Ltd. at No. 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.